கல்கி


LKI 26-10-80
90 காசு



"நான் ஒரு டீச்சர்
நான் அணியும் ஆடைகள் என் லட்சியத்தைப் போதிக்க வேண்டும், இல்லையா."



எங்கள் அந்தஸ்தே தனி
அதற்கேற்ற துணி



ம:பத்லால்
:பேப்ரிக்ஸ்

ஷூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள், புடவைகள், மற்றும் துணிகள்
மற்றும் டெனிம்கள்.

MF-30 TAM

ம:பத்லால் இண்டஸ்ட்ரீஸ் நியூ ஷோர்ராக் மில்ஸ் **ம:பத்லால் :பைன்**



சென்ற ஆண்டின் சிறந்த படம்

விளையாட்டுத் துறையில் எடுக்கப்பட்ட புகைப் படங்களுள் சென்ற ஆண்டின் மிகச் சிறந்த புகைப்படமாகப் பரிசு பெற்றது. எரிக் பௌமான் எடுத்த இந்த ஆக்ஷன் படம். சர்வதேச விளையாட்டுத் துறை எழுத்தாளர்கள் சங்கம் இப்படத்தைப் பரிசுக்குத் தேர்ந்தெடுத்தது. மேற்கு ஜெர்மானிய 'ஹேண்ட்பால்' விளையாட்டு வீரர் டும்மெல், டுமீல் என்று பாய்கிற வேகத்திலேயே எடுக்கப்பட்ட படம்.



குதூகலமான தீபாவளிக்கு
சாரதாஸின்
பிரமிப்பூட்டும் டிசைன்கள்
வஸந்தப்ரியா
ஸ்நேகப்ரபா
சாரதாஸ்
(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177
N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077
தீபாவளி முடிய ஞாயிற்றுக்கிழமை விற்பனை உண்டு

மலேசிய ஏடான ''ஸ்ட்ரைட்ஸ் டைம்'' ஸில் ஒரே செய்தியை இரு மொழியில் வெளியாகும் பக்கம் உண்டு. சீன, ஆங்கில மொழிகளில்அந்தப் பக்கங்கள் அமைந்திருக்கும். இப்பக்கத்தில் புலவர் கீரனின் பேட்டி அண்மையில் வெளியாகியிருந்தது. இது தவிர, மலேயாவின் 'கபங்சாங்க்' பல்கலைக் கழகம் அளித்த கலாசார பட்டத்துடன், பேட்டிகள், சொற்பொழிவுகள் பற்றிய செய்திகள் என பல்வேறு மலேசிய ஏடுகளிலும் நிறைந்திருந்தார் புலவர் கீரன். அவர் சென்னை திரும்பிய மறு தினம்:

கேள்வி: அண்மையில் நீங்கள் சென்று வந்த நாடுகள்?
பதில்: சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து.
கே: இலக்கியப் பயணமா இல்லை சமயப் பயணமா?
ப: இரண்டும் இணைந்த பயணம்.
கே: அதனால்தான் 'சமய உணர்வில்லையேல் இலக்கியமில்லை' என்று அங்கே சொற்பொழிந்தீர்களா?
ப: உண்மையும் அதுதானே?



பரிசுக் குரியவர்களைத் தேர்ந்தெடுக்கும் 'புலவர் கீரன் - கடிதக் குவியலின் ஒரு பகுதி

ஒரு நற்பயணமும் பல நற்பணிகளும்




முதல் பரிசு பெறும் வி. கிருஷ்ணமூர்த்தி

கே: ஒன்றிரண்டைத் தவிர்த்து எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் சமயச் சார்பின்றித் தோன்றவில்லையா என்ன?
ப: காதல் வாழ்வைக் களிப்புறக் கூறும் சங்க இலக்கியம் சமயச் சார்பற்றது என்பது உண்மை. ஆனால் அவ்விலக்கியங்களில் இயற்கை வருணனைகள் தெய்வத் திரு உருவங்களோடு ஒப்பிடப்பட்டுள்ளது. சீர்மிகு சிலப்பதிகாரம் எல்லாச் சமயங்களையும் கடவுள்களையும் போற்றித் தனிச் சிறப்புப் பெறவில்லையா?
கே: இறைவனை எண்ணிக் காவியம் படைக்கும் முறையைப் புறக்கணித்து, ஞாயிறு, திங்கள், மாமழை இவைகளைப் போற்றி இளங்கோ சிலப்பதிகாரம் செய்திருக்க... இறைவனைப் போற்றினார் என்பது எப்படிப் பொருந்தும்?
ப: ஞாயிறு, திங்கள், மாமழை என இளங்கோ குறிப்பிடுவது கோவலன் கண்ணகி, மாதவியைத் தவிர சூரியனையோ, சந்திரனையோ, மழையையோ அல்ல. சூரியன் இன்றிச் சந்திரன் இல்லை. கோவலன்இன்றிக் கண்ணகி இல்லை.
கே: சரி, மாமழைக்கும் மாதவிக்கும் என்ன முடிச்சு?
ப: மழைநீர் முடிவில் சேருவது கடலில். ஆரவாரத்திலும் அளவிலும் பெரியது கடல். ஆனால் அத்தனையும் உப்பு. அழகிலும் ஆடலிலும் சிறந்தவள் மாதவி. ஆனால் கடல் நீரைப் போல் பருகப் பயன்படாதவள். உவர் கடலில் பிறப்பது நன்முத்து. அதுபோல் பிறந்தவள்தான் மணிமேகலை.
கே: இளங்கோ தெய்வத்தைப் பாராட்டினாரா என்பதே கேள்வி..
ப: தன் காலில் கிடந்த சிலம்பால் பாண்டியனின் மணி முடியை இறக்கிய கண்ணகியை, முடிவில் தெய்வமாக்கியதால், முதலில், ஒரு தெய்வத்தை இளங்கோ குறிப்பிடவில்லை.
கே: சகோதரத்துவத்தின் சிறப்பைக் கூறவே இராமாயணம் என்பது மலேசிய நாட்டில் உங்கள் பேட்டி. அரியணை யாருக்கு என்ற பிரச்னை எழுந்ததே ராமனும் பரதனும் சகோதரர்களாக இருந்ததால்தானே அப்படியிருக்க சிறப்புக்கு அங்கே இடமேது?
ப: உண்மை. ஆனால் பரதன் பட்டமேற்க வேண்டும் என்று விரும்பியது பரதனின் தாய்தானே தவிர பரதன் அல்லவே.
கே: புதுக் கவிதை, இலக்கிய உலகின் வியாதி என்று சிங்கப்பூரில் கூறியுள்ளீர்களே நியாயமா?

மலேசிய டிவியில் கீரன்



நவம்பர் 9 தீபாவளி சிறப்பிதழில்



ப: நியாயமே. புதுக் கவிதை கவிதையே அல்ல. அது வெறும் சொல் கூத்து. மரபுக் கவிதை படைக்கத் தெரிந்தவர்கள் கூட சோம்பேறிகளாகப் புதுக் கவிதை படைப்பதால் அது நிச்சயம் வியாதியே.

கே: சில வரம்புகளுக்கு உட்பட்டது மரபுக் கவிதை. ஆனால் வரம்பை மீறுவது கவிதை உணர்வின் இயல்பல்லவா?

ப: இருக்கலாம். ஆனால் அத்தகைய மீறலுக்கும் எல்லை வேண்டாமா? புதுக் கவிதைக்கென சில வரம்புகளை நிர்ணயித்துப் பின்பற்றுங்கள் நிச்சயம் நான் வரவேற்பேன்.

கே: "புதுக் கவிதை என்னும் இலக்கியப் புது மலரை மொட்டிலேயே கிள்ளி விட்டனர் இருபதாம் நூற்றாண்டிலும் மரபுக் கவிதையை மாற்ற நினைக்காதவர்கள்" என எதிர்காலத் தலைமுறை நம்மைக் குற்றம் சாட்டும் நிலை ஏற்பட்டால்?

ப: நிச்சயம் ஏற்படாது. புதுக் கவிதை வியாதியை ஒழித்து மரபுக் கவிதையைக் காப்பாற்றியவர்கள் என்ற பெருமைதான் நமக்குச் சொந்தமாகுமே தவிர நம் செய்கை குற்றமாக அமையாது.

கே: முடிவாக ஒரு கேள்வி. தமிழ் இலக்கியத்தில் குற்றம் காணும் குணம் அக்காலத்தில் இக்கலை என மலையாகில் குறை பட்டிருக்கிறீர்களே...: நெற்றிக் கண் கீரனை புலவர் கீரன் மறக்கலாமா?

ப: சிவன் எழுதிய பாடலில் நக்கீரன் தலையிட்டதே தவறு என்பது இக்கீரனின் எண்ணம். பெண்களின் கூந்தலில் — குறிப்பாகத் தன் மனைவியின் கூந்தலில் இயற்கை மணம் உண்டு என்பது இறைவன் என்ற கவிஞனின் கருத்து. அதில் தலையிட நக்கீரனுக்கு உரிமையில்லை. ஒரு கருத்தை— பாடலின் பொருளாகக் கருதிய நக்கீரனின் குற்றம் குற்றமே.

பேட்டிக்கு முற்றுப்புள்ளியிட்டு எழுந்து கொள்ளும்போது "சார் நீங்கள் அளித்த பதில்களுக்குப் பதிலாக உங்களுக்கு ஒரு படையல் படைக்க விரும்புகிறோம்" என்று நாங்கள் கூறியதும் கீரன் திகைத்தார். அமரச் சொல்கிறோம். அமர்கிறார். அவர் முன்னே மலையெனக் குவிக்கிறோம் —பொற் குவியலை அல்ல— அதற்கும் மேலான வாசகர்களின் கடிதங்களை. கல்கி, நற்பணித் திட்டப் போட்டிக்காக வரப்பெற்ற கடிதங்களே அவை. அன்றைய நற்பணிகள் மலைகளில் கல்வெட்டாயின. இன்றைய நற்பணிகள் கடிதங்களாகி மலையாயிற்று.

நற்பணிகளைத் தரம் பார்த்துப் பரிசு தர வேண்டாமா என்று சில நேயர்கள் எழுதிக் கேட்டிருந்தனர். கல்கி நேயர்கள் தத்தம் உடல் சக்திக்கும் பொருளாதார வசதிக்கும் ஏற்ப செய்த நற்பணிகளில் தரம் பார்ப்பது தவறு என்பது எமது முடிவு. கீரனும் இதனை உணர்ந்து தகுதி உள்ளவருக்கே பரிசு கிட்ட வேண்டும் என்று ஒவ்வொருமுறையும் பிரார்த்தித்து, கடிதமலையைப் புரட்டிப் புரட்டிப் பரிசுக்குரிய கடிதங்களை எடுத்து நீட்டுகிறார். கீரனின் தேர்வு கீர்த்தி மிக்கது எனக் கூறவும் வேண்டுமோ? பேட்டி: **ஏ.வி.எம். கணேஷ்**

புகைப்படம்: **சரஸ்வதி சத்தியமூர்த்தி**

முதல் பரிசு பெற்றவர்: **திரு. வி. கிருஷ்ண மூர்த்தி** 45, மாபடி விநாயகர் கோயில் தெரு சென்னை-600 014.

அவர் செய்த நற்பணி:


"தெரிந்த ஏழை நண்பனின் பையன் ஒருவனுக்கு முழு கால் சட்டையும் சட்டையும் எடுத்துக் கொடுத்தேன்."

ஆறுதல் பரிசுபெற்ற இதர கல்கி நேயர்கள் பற்றிய விவரம் அடுத்த இதழில்.

குருவாயூர் கோவிலில் 36 யானைகள் உள்ளன. இந்தியாவில் எந்த ஒரு கோயில் அல்லது சர்க்கஸ் கம்பெனியில் கூட 36 யானைகள் கிடையாது. 36 யானைகளுமே பக்தர்களால் கோவிலுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டவை. இவற்றுள் ஒன்றுக்குச் சமீபத்தில் ஒரு சோதனை ஏற்பட்டது.

அவன் பெயர் சந்திரசேகரன். வயது 12. இவனை பீகார் காட்டில் பிடித்தார்கள். ப்ம்பாயைச் சேர்ந்த குருவாயூரப்பன் பக்தர் சுந்தரம் இந்த யானையை 3.6.79ல் கோயிலுக்கு நன்கொடையாக வழங்கினர். யானை வந்தபோது அதன் வயிற்றுப் பகுதியில் லேசாகச் சீழ் வடிந்து கொண்டிருந்தது. சாதாரணமாகக் கோயிலுக்கு வரும் யானைகளை டாக்டர் குழு ஒன்று பரிசோதனை செய்து

★ ஆபரேஷன் செய்த இடத்தில் மருந்து போடப்படுகிறது



ஆபரேஷன் செய்து கொண்ட யானை!

ஆரோக்கியமாக இருந்தாலே கோவிலுக்கு எடுத்துக் கொள்வார்கள். இவனையும் டாக்டர்கள் பரிசோதித்தனர். சிறு புண் தானே குணமாகிவிடும் என அனுமதி கொடுக்க குருவாயூரப்பன் சந்நதிக்குச் சந்திரசேகரன் வந்து சேர்ந்தான்.

ஆனால் புண் ஆறவில்லை. தினசரி சொட்டுச் சொட்டாகச் சீழும் ரத்தமும் வடிந்து கொண்டே இருந்தது. யானைக் கூட்டத்தைப் பராமரிப்பவர் சீனிவாசன். டாக்டர்கள் யோசனைப்படி மருந்துகளைப் போட்டுப் பார்த்தார். ஆங்கில மருந்து, ஆயுர்வேத மருந்து, ஹோமியோபதி கூடப் பயன்படுத்தியாகி விட்டது. புண் ஆறவில்லை.

டாக்டர்கள் வயிற்றுப் பகுதியில் லேசாக கீறிப் பார்த்தபோது அங்கு எலும்பு முறிந்திருந்ததைக் கண்டார்கள். அதனைச் சரியாக்கி மருந்தும் போட்டார்கள். அப்படியும் சீழ் நிற்கவில்லை.

எனவே யானைக்கு ஆபரேஷன் செய்து பார்த்துவிடுவது என்ற முடிவுக்கு டாக்டர் குழு வந்தது. திருச்சூர் மாவட்டம் மண்ணுத்தி மிருக வைத்தியக் கல்லூரி டாக்டர்கள் சந்திரசேகரபணிக்கர், ராதாகிருஷ்ணன், ஜோஸ் செரியான், முரளிதரன் நாயர் குருவாயூரைச் சேர்ந்த டாக்டர் ராமானுஜம் ஆகியோர் இந்த ஆபரேஷனை நடத்தினர்.

யானைக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட்டது. பிறகு மூன்று மணி நேரம் ஆபரேஷன் செய்து பார்த்தபோது யானை வயிற்றுக்குள் காலையொட்டிய பகுதியில் ஒரு கோலிக்காய் அளவில் குண்டு இருந்தது! யானையைக் காட்டில் பிடிக்கு முன்பு தந்தத்துக்கு ஆசைப்பட்டு இந்த யானையைத் துப்பாக்கியால் சுட்டிருக்கலாம் என்றும் அந்தக் குண்டு வயிற்றுக்குள் இருந்ததால் தான் கட்டி பழுத்துச் சீழும் ரத்தமும் பழுப்பாக வடிந்து கொண்டிருந்ததாகவும் டாக்டர்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

ஆபரேஷன் முடிந்து மூன்று மணி நேரத்துக்குப் பிறகு சந்திரசேகரனுக்கு நினைவு திரும்பியது. அவன் வலியால் துடித்தான். ஆனால் அது கொஞ்ச நேரம்தான். பிறகு அவனுக்கே நிம்மதி போல எழுந்து நின்றான். தனது வழக்கமான ஆகாரங்களைச் சாப்பிடத் தொடங்கி விட்டான்.

இப்போது வயிற்றில் ஓரடி நீளத்துக்கு ஆபரேஷன் செய்த பிளவு காணப்படுகிறது. மருந்து போடப் போடச் சில மாதங்களில் இந்தப் பிளவு ஒன்றுபட்டுவிடும். தினசரி ஆபரேஷன் செய்த இடத்தில் மருந்து வைத்துக் கட்டுப் போடுகிறார்கள்.

தகவல், புகைப்படம்: எஸ். எஸ். மணி



தமிழக ஆட்சி
போச்சு! போச்சு! உரிமைகள் எல்லாம் போச்சு! அடக்குமுறை தலை விரித்தாடுகிறது! பட்டாஸ் வெடிக்கக் கூடத் தடையா?...
மாஜிக் காட்சி
அப்பளம் பேச்சு- வார்த்தை
கண்டக்டர் :-
20 பைசா டிக்கட்டை 30 பைசாவா ஏத்தி இருக்கோம்.. அது ஆந்திராவை விட கம்மி!.. 30ஐ 40ஆக ஏத்தி இருக்கோம்!.. கேரளாவை விட கம்மி!.. 40ஐ 50ஆக...
பிரயாணி:-
சரி தான்! போதும்.. டிக்கட் கொடு!

1980 அக்டோபர் 26
ரௌத்திரி ஐப்பசி 10
மலர்: 39 இதழ்: 13



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

மாருதி

மாருதி நிறுவனத்தை அரசுடைமையாக்கியதற்காக எதிர் கட்சித் தலைவர்கள் ஏன் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள் என்றே புரியவில்லை.

என்ன நடந்து விட்டது என்று இப்படி அமர்க்களப் படுத்துகிறார்கள்? மாருதிக்கு அதிகபட்சம் கணக்கிட்டால் ஆறு கோடி ரூபாய் சொத்து இருக்கிறது. இதை அரசு ஏற்றுக் கொள்கிறது. லாபம் தானே? மாருதிக்குக் குறைந்த பட்சம் நாலுகோடி ரூபாய்க்கும் அதிகமாகக் கடன் இருக்கிறது என்பதும் உண்மைதான். இதையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. அதாவது இந்தக் கடன் சுமையை இந்திரா காந்தி குடும்பம் தாங்குவதற்குப் பதில் இனி ஏழை இந்தியன் தாங்கப் போகிறான். இவ்வளவுதான் வித்தியாசம். இதற்கு ஏன் பிரமாதப் படுத்த வேண்டும்? ஏழை இந்தியனுக்கு அபரிமித வரிகளையும் விலைவாசி உயர்வையும் தாங்கித் தாங்கிப் பழகிவிட்டது. இந்தப் புதுச் சுமை அவனுக்குப் பெரிய விஷயமல்லவே?

அரசுடைமையாவதால் மாருதியின் பங்குதாரர்களுக்கு 'நஷ்ட ஈடாகப் பணம்' கிடைத்துவிடும். அதாவது இந்திரா காந்தி குடும்பத்தினரும் அவர்களுக்கு மிகவும் வேணுமென்கப் பட்டவர்களும் நஷ்டமடையாமல் தப்புவார்கள். அவர்கள் மகிழ்வார்கள். இந்திரா காந்தி குடும்பத்தின் மகிழ்ச்சியை விட ஏழை இந்தியனுக்கு சந்தோஷம் அளிக்கக் கூடிய விஷயம் வேறென்ன இருக்கிறது?

மூடிக் கிடக்கும் மாருதி மறுபடியும் இயங்க ஆரம்பிக்கப் போகிறது. இது எவ்வளவு வரவேற்கப் படவேண்டிய காரியம்! இதற்கும் பணம் வேண்டும்தான். அதனால் என்ன? அரசாங்க கஜானா எதற்கு இருக்கிறது? ஏழை இந்தியன் எதற்காக வரி செலுத்துகிறான்? மாருதி நிறுவனத்துக்கு. நாலரைக் கோடி ரூபாய் கடன் தந்தால் ஆயிற்று. என்ன நாலரைக் கோடி போதாதா? இப்போதைக்கு இதை வைத்துக் கொள்ளட்டும்; கொஞ்ச நாள் கழித்து இன்னொரு அவசரச் சட்டம் போட்டு இன்னும் தாராளமாகவே கடன் தரலாம். கடனைத் திருப்பித் தருவதா? அதற்கென்ன இப்போ அவசரம்? அரசாங்கக் கடன்தானே? போகப் போகச் சாத்தியமான போது திருப்பித் தந்து கொள்ளலாம்.

என்ன? திருப்பித் தரவில்லை என்றால் வட்டி உயருமே என்ற கவலையா? என்னய்யா விஷயம் புரியாமல் பேசுகிறீர்? மாருதிக்கு வட்டி நான்கே சதவீதம் தான்! மற்ற மற்ற நிறுவனங்கள் இருபத்தோரு சதம் வட்டி அழுகின்றன, தெரியுமா உமக்கு? மாருதியை அப்படியெல்லாம் அரசு கஷ்டப்படுத்துமா என்ன? கூட்டு வட்டி கூடக் கிடையாது. அதனால் வட்டி செலுத்துவதைக் கூட மாருதி ஒத்திப் போடலாம், தைரியமாக. மாருதியை விட அதிர்ஷ்டசாலியான கம்பெனி எங்கே இருக்கிறது. சஞ்சய் ஆரம்பித்து வைத்த நிறுவனமல்லவா? அதற்கு அதிர்ஷ்டம் அடிக்கக் கேட்பானேன்?

மாருதியில் இப்போது யாரும் பணியாற்றவில்லை. வேலை இழக்கப் போகும் தொழிலாளருக்குப் பரிந்து இந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதனால் என்ன, புதிதாக இப்போது பலரை வேலைக்கு அமர்த்தாமலா இருக்கப் போகிறார்கள்?

மாருதி நிறுவனத்தில் இதுவரை ஒரு கார் கூட உற்பத்தியாகவில்லை. இனியும் உற்பத்தியாகுமா தெரியாது. உருவாகாவிட்டால் என்ன? பெட்ரோல் விலை உயர்வு, தட்டுப்பாடு பார்க்கும்போது மாருதி கார்கள் உற்பத்தியாகாமல் இருப்பது நல்லதல்லவா? நம் தேசத்துக்கு அந்நியச் செலாவணி மிச்சமாகுமே!

தப்பித் தவறி மாருதி கார்கள் உற்பத்தியானாலும் அவை சஞ்சய் எதிர்பார்த்தது போல் மலிவு விலையில் நிச்சயம் இராது. அரை லட்சத்துக்குக் குறையாது. அதனால் என்ன, பணக்காரன் தானே கார் வாங்கப் போகிறான்! கொடுத்து

அழட்டுமே! ஏழை இந்தியனுக்குக் கார் எதற்கு? அவனுக்குக் கடவுள் தந்த கால்களே போதும்!

ஆரம்ப நாளிலிருந்தே மாருதி நிறுவனத்துக்கு அரசு பல சலுகைகள் காட்டி வந்திருக்கிறது. இருக்கட்டுமே, மேலும் பல புதுச் சலுகைகள் காட்டி அரசு ஏமாறக் கூடாதென்று சட்டமா என்ன?

இந்த அவசரச் சட்டத்தினால் இந்திரா காந்தி குடும்பம் கோடிக் கணக்கில் பயனடையும். அடைந்தால் என்ன? எதற்கு வயிறு எரிய வேண்டும்? இந்தியாதான் இந்திரா; இந்திராதான் இந்தியா! தெரியாதா உமக்கு? தேசமே திவாலா நிலைக்குப் போனாலும் போகலாம்; இந்திரா காந்தி குடும்பம் திவாலா நிலைக்குப் போக அனுமதிக்கலாமா நாம்?

சுறா



மணிக்கு முப்பது மைல் வேகத்தில் நீந்தக் கூடிய சுறா மீன் கடல் வாழ் ஜந்துகளில் மிகவும் கொடூரமானது. பசிக்காக மட்டுமின்றி வெறிக்காகவே தாக்கும்.

வாசனை அறியும் திறன் அபாரம்.

ரொம்பப் பிடித்தது ரத்த வாசனை!

சுறா மீனை வில்லனாக்கி பீட்டர் பென்ச்லே எழுதிய நாவல் 'ஜாஸ்' (Jaws) லட்சக் கணக்கில் விற்பனையாகி உலகப் பிரசித்தி பெற்றது.

ஒரு சிறு நகரில் கிரிஸ்ஸி என்ற பெண் சுறா மீனால் தாக்கப்பட்டு மரணமடைகிறாள்.

அந்த ஊர்ப் போலீஸ் அதிகாரி கடற்கரைக்கு யாரும் குளிக்க வரக் கூடாதெனத் தடை விதிக்க எண்ணுகிறார்.

ஆனால் நகர மேயர் உல்லாசப் பயணிகளின் வருகை இதனால் பாதிக்கப்பட்டு நகருக்கு வருவாய் குறையும் என்பதால் தடை உத்தரவுக்குத் தடை விதித்து விடுகிறார்.

அடுத்தடுத்து வேறு பலரும் மரணமடையவே மேயர் வருந்தி, திருந்தி சுறா மீனை ஒழிக்க ஏற்பாடு செய்கிறார். இதற்கென ஒரு நிபுணரையும் அழைக்கிறார். சுறாமீனை வேட்டையாட மூவர் படை புறப்படுகிறது. ஆனால் இம்மூவரும் சுறா மீனால் வேட்டையாடப்படுவது போல் நிலைமை மாறிவிடுகிறது!

பயங்கரமான இந்தப் படத்தைப் பார்க்க ரொம்பத்தான் தைரியம் வேண்டும் என்றால், ஆபத்தான அலைகள் எழும் அட்லாண்டிக் கடலில் படகுகளில் மிதந்தபடி படம் பிடிக்க அதைவிடத் தைரியம் வேண்டுமல்லவா?

ஒரு தடவை ஆறுபேரையும் கூர்ந்து பார்த்தான்.

கட்டியாகப் பூசிய பவுடர் 'கோட்டிங்' கோடும், செயற்கையான புன்சிரிப்போடும் கூடிய முகத்தோடு ஒய்யாரமாக நிற்கும் அவர்கள் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் எல்லோரையும் பார்த்து இஷ்டமில்லாதவாறு கொஞ்சம் முன்னே சென்றான்.

''எங்களை யாரையுமே பிடிக்கலையா?'' சிவப்புச் சேலை கட்டிய பெண் வெற்றிலை எச்சிலைத் துப்பியவாறே கேட்டாள்.

''உஷ், எத்தனை தடவை சொல்றது. இந்த மாதிரி அநாவசியமாப் பேசாதே'' என்று அங்கிருந்தவர்களில் வயதானவளாகத் தோன்றிய பெண் கத்தினாள்;

''பையில் துட்டு இல்லாம சும்மா ஜாலியா வந்த மாதிரி தெரியுது இந்த ஆளு'' என்றாள் கடைசியில் இருந்த பெண்.

சரேலென முகத்தை நிமிர்த்தி அந்தப் பெண்ணைக் கோபத்தோடு முறைத்துப் பார்த்தான். அந்தப் பெண்ணோ குபுக் கென்று சிரித்தாள்.

''இந்த மாதிரி இடத்துக்கு வர்றதே தப்பு; வந்த பிறகு இந்த மாதிரி கோபிக்கிறது இன்னும் தப்பு'' என்றாள் அதே பெண்.

கோபத்தை அடக்கிக் கொண்டு இரண்டடி முன் வைத்தபோது அவளைக் கண்டான்.

பக்கத்தில் இருந்த அறையிலிருந்து ஒருவனோடு அவள் வெளியே வந்து கொண்டிருந்தாள்.

அந்த ஆளோ தலை குனிந்து கொண்டு கிடுகிடுவென்று வெளியேறினான்.

அந்தப் பெண் கலைந்துவிட்ட தன் கூந்தலைச் சரி செய்து கொண்டிருந்தாள்.

அவன் அவளை மறுபடியும் உற்றுப் பார்த்தான்.

அழகும், கவர்ச்சியும், உடல் கட்டோடு மட்டுமல்லாமல், வைராக்கியமும் உள்ள அவளுடைய கண்களில் ஏதோ இனம் புரியாத கலவரம் இருப்பது அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

செருமினான் சிறிதாக.

அந்தப் பெண் முகம் நிமிர்த்திப் பார்த்தாள்.

அவன் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

அவள் கண்களாலேயே கேட்டாள்.

'ம்' என்றான்.

''வாங்க''என்றபடியே அறைக்கு நேராகப் போனாள். வரிசையாக நின்ற ஆறு பெண்களும் அவளையும் அவனையும் ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டே தங்களுக்குள் ஏதோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

அவனும் அறைக்குள் நுழைந்தான்.

அவள் கதவைச் சாத்தினாள்.

அவள் ஏதோ சொல்லப் போனாள்.

அவன் தலையை ஆட்டிக் கொண்டே தன் சட்டைப் பையிலிருந்து இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து அவளுக்குத் தந்தான்.

அவள் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தான்


மனுஷி

தெலுங்கு மூலம்: "சத்திய மந்தபாட்டி"
தமிழாக்கம்: "கௌரி"



கல்கி தீபாவளி சிறப்பிதழில்
2.11.1980

ஆக்ஸிடெண்ட்



ஹேமா ஆனந்ததீர்த்தன்

எழுதும் குறுநாவல்

தலையணைக்கு அடியில் இருந்து இரண்டு இரண்டு ரூபாய் நோட்டுக்களை எடுத்துப் பதினாறு ரூபாயைத் திருப்பிக் கொடுத்தான்.

அவனே, ''நீயே வெச்சுக்கோ'' என்றான்.

அவள் பதிலுக்கு ''வேண்டாம்'' என்றவாறே படுக்கையில் உட்கார்ந்தாள்.

அவனும் அவள் அருகிலேயே அமர்ந்தான். கையை அவள் தோள் மீது போட்டான்.

அவன் அவளுடைய கண்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவளுடைய விழிகள் எதையோ உணர்த்துவதுபோல் அவனுடைய மனத்தில் பட்டது.

ஏதோ சிந்தித்தான்.

சடாரென்று தன்மீதிருந்த அவனுடைய கையை விலக்கினான்.

அவள் அவனை வியப்போடு பார்த்தாள்.

''நீ எந்த ஊரு?'' என்று கேட்டான்.

''தெளிவான, வெளேரென்ற வானத்தில் கருமேகங்கள் போய்க் கொண்டே இருக்கும். அவைகளை எந்த ஊர் என்று கேட்டால் என்ன பதில் சொல்லும்'' என்றாள் விரக்தியோடு.

அவளுடைய பதில் அவனை வியப்புக்குள்ளாக்கியது.

அவனுக்கு அவளைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வம் இன்னும் இரண்டு மடங்காகியது.

அவள் மேலிருந்து நழுவிய சேலையைச் சரி செய்துகொள்ள முயற்சி செய்யவில்லை.

''ஏன் நீ இந்தத் தொழிலுக்கு வந்தாய்?'' என்று கேட்டான்.

''நான் சிறு பிள்ளையாக இருந்தபோது ராமய்யா என்பவருக்கு ஒரு பசு இருந்தது. அவருக்கு அந்தப் பசுவை வளர்ப்பது பாரமாகத் தோன்றியதால் அதை விற்கலாம் என்று நினைத்தார். கடைசியில் கொஞ்சமும் மனிதத் தன்மை இல்லாத ஆட்களுக்கு விற்கவும் செய்தார். அந்த ஆட்களோ அந்தப் பசுவைத் தினமும் கொடுமைப்படுத்தினார்கள். அந்தப் பசு கொடுமையைப் பொறுத்துக் கொண்டது. பின் அளவுக்கு மீறிய தொல்லையால் உண்டான மனத் தைரியம் அப்பசுவை ராமய்யாவிடமே திரும்பவும் சேர்த்தது. ஆனால் ராமய்யாவோ பசுவை அக்கொடியவர்களிடமே ஒப்படைத்து விட்டார். கொஞ்ச நாட்கள் கழித்துத் தொல்லை பொறுக்க முடியாமல் வீட்டை விட்டே ஓடிப் போய் விட்டது. பிறகு அதற்கு இந்த உலகத்தில் சுதந்திரமாக வாழமுடியாமல் போயிடுச்சு. அந்தப்பசு யாருக்கெல்லாம் கிடைச்சுதோ அவங்க அதை வெச்சுப் பணம் சம்பாதிச்சுக்கிட்டிருக்காங்க'' என்று கூறிப் பெருமூச்சு விட்டாள்.

மின் விசிறிக்காற்றில் அவளுடைய கருண்ட முடி முகத்தைத் தழுவி ஆடிக் கொண்டிருந்ததைக் கண்ட அவனுக்கு அவள் மீது தூய அபிப்பிராயம் உண்டானது.

ஒரு நிமிடம் கழித்துக் கேட்டான்: ''இந்தத் தொழிலில் உனக்குச் சந்தோஷம் தானா? இங்கிருந்து நீ ஏன் ஓடிப் போகக் கூடாது?''

''ஒரு குளத்தில் கொஞ்சம் மீன்கள் இருந்தன. அங்கே பெரிய மீன் சின்ன மீனைச் சாப்பிடுவது வழக்கமாக இருந்தது. இருப்பதிலேயே சின்ன மீனுக்கு இது உயிர்ப் பிரச்னை ஆயிருச்சு. என்னைக்கு, எந்தப் பெரிய மீன் தன்னைச் சாப்பிட்டுவிடுமோ என்று சின்ன மீன் நினைச்சு அந்தக் குளத்திலிருந்து வேறொரு குளத்துக்கும், அதிலிருந்து மற்றொரு குளத்துக்கும் போச்சு. எந்தக் குளத்துக்குப் போனாலும் பெரிய மீன் விட்டபாடில்லை. கடைசியில் ஒரு பெரிய மீனுடைய வாயில் மாட்டிக்கிட்டப்ப நினைச்சது — ''இந்த மீன் வர்க்கத்தில் பெரிசு, சிறிசு என்ற வித்தியாசமே இருக்கக் கூடாது. அந்த வித்தியாசம் இருக்கிற வரைக்கும் எந்தக் குளத்தில் இருந்தாலும் ஒண்ணுதான்.''

குனிந்திருந்த அவளது கண்களிலிருந்து விழுந்த வெதுவெதுப்பான கண்ணீர் அவன் கையில் பட்டபோது, அவனது இதயக் கடலில் எத்தனையோ எண்ண அலைகள் வீசின.

''ம்... டிலே பண்ணாதீங்க; வெளியில் எனக்காக நிறையப் பேரு காத்துக்கிட்டிருக்காங்க'' என்று மெதுவாகச் சொன்னாள்.

நேருக்கு நேர் அவளைப் பார்த்துக் கேட்டான்:

''என்னோடு வர்றியா; என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா?''

அவள் திடுக்கிட்டாள். ஒரு மாதிரியாக அவனைப் பார்த்தாள்.

அவன் அவளது கூந்தலை ஆதரவோடு வருடினான்.

''என் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு சின்னப் பையன் இருந்தான். அவனுக்கு ரோடு பக்கம் விளையாடுவது வேடிக்கை. சாக்கடையில் மூழ்கிக்கிட்டிருக்கும் புழுக்கள் மீது அவனுக்குக் கருணை. எப்பவும் அந்தப் புழுக்களைச் சாக்கடையிலிருந்து எடுத்துப்



தீபாவளி, திருமணம்
பட்டு
ஜவுளிகளுக்கு
கைராசியான
இடம்!
•காஞ்சீபுரம்
•தர்மாவரம்
•பனாரஸ்
•பட்டுப்புடவைகள்
•பாவாடைகள்
•ப்யூர் ஷிப்பான்
•ஆர்கன்ஸா
•பட்டு பிரிண்டெட்
புடவைகள்
ஸ்ரீ ராஜேஸ்வரி
ஹால்
59, கடை வீதி,
சேலம்-1
போன்: 3345
121, ராஜ வீதி,
கோவை-1
போன்: 25859
நாகரீக ஜவுளிகளுக்கு
உஷா
சாரி பாரடைஸ்
333. ராஜ வீதி
கோயமுத்தூர்-641001
போன் : 33369

போடுவதென்றால் அவனுக்குப் பிடிக்கும். அதனால் அவன் கை பாழானாலும் கவலை இல்லை. அவனுடைய அம்மா அவனைத் தூரத்தில் இழுத்துக் கொண்டு போய்த் தலையில் தண்ணீ ஊத்திக் குளிப்பாட்டுவாள். அந்தப் புழுக்களோ வெளியிலிருக்காமல் திருப்பி அந்தச் சாக்கடைக்கே போயிடும்.....''

''முடியாது. எப்படிப் போகும்... போவதற்கு வழியே இல்லே!'' கத்தினான் அவன்.

அவள் சிரித்தாள். அவளுடைய சிரிப்பில் வேதனையைக் கண்டான்.

''சின்னப் பிள்ளையாக இருக்கும்போது கடலில் பனங்காய்களை எறிவதுண்டு. அப் பனங்காய்கள் தண்ணீரில் மிதந்து போய் அந்தப் பக்கம் இருக்கிற சொர்க்கத்தைப் பார்க்கட்டும்னு பலமாக வீசி எறிவோம். அலைகளோ திருப்பி அவைகளைக் கரைக்குத் தள்ளிவிடும். அந்தப் பக்கத்தில் இருக்கிற அழகைக் காண அப் பனங்காய்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை என்று நினைப்போம். கொஞ்ச அலைகள் உள்ளே இழுத்துக் கிட்டுப் போனாலும் வேறே பெரிய அலைகள் வெளியில தூக்கி எறிஞ்சிடும். ஒரு பனங்காயையாவது அலைகள்மூலம் அப் பக்கம் அனுப்ப எவ்வளவு முயற்சி பண்ணியும் முடியலே.''

''நீ என்னிடம் மறைக்கப் பார்க்காதே. நீ மிகவும் புத்திசாலி. நல்ல மனமிருக்கு உனக்கு. இதைப் போல் உனக்கு நேர விடமாட்டேன்'' என்றான் ஆவேசமாக.

உடனே கண்ணீர் பெருக் கெடுத்தோட, ''வேண்டாம்'' என்றாள்.

அவன் கண்ணீரைத் துடைத்தான்.

அவள் வேதனை அளவுக்கு மீற, ஓவென்று கதறி அழுதாள்.

கொஞ்ச நேரம் கழித்துக் கேட்டான், ''ஏன் வேண்டாம்னு சொல்றே?'' என்று.

''சில புழுக்கள் சாக்கடையில் இருப்பது தான் நல்லது. சாக்கடையிலிருந்து வெளியில் வந்தால் உங்களைப் போல் உள்ளவர்களுடைய கையைப் பாழாக்குவதோடு, அப்புழுக்களுடைய உயிரும் போகும்'' என்று சொல்லிக் கொண்டே தலையணையில் முகத்தைப் புதைத்து விக்கி விக்கி அழுதாள்.

அவன் அவளைப் பார்த்துக் கொண்டே நின்றான்.

கொஞ்ச நேரம் கழித்து, 'நான் போகிறேன்' என்றான்.

அவள் தலையணைக் கடியிலிருந்த ஆறு ரூபாயை எடுத்துக் கொடுத்தாள்.

''வச்சுக்கோ'' என்றான்.

''வேண்டாம்'' என்றாள்.


அவன் அவளைக் கனிவோடு ஒரு முறை பார்த்துக் கொண்டே, போகிற போக்கில் கேட்டான்: ''உன் பேரு....''

'' மனுஷி ''ன்னு தெரிஞ்சாப்போதும்.''


கராத்தே பயிற்சி ⑪

பயிற்சி: **டோனி பொன்னையா**

சித்திரம்: ராஜு படம்: உத்ரா தயாரிப்பு: குண்டுமணி



INNER FOREARM BLOCK (உடலின் நடுப்பகுதி தடுத்தல்)



உடலின் நடுப்பகுதிக்கு வரும் குத்தைத் தடுக்க இந்த INNER FOREARM BLOCK பயிற்சி பெற வேண்டும். இதை வலது கையிலும் இடது கையிலும் மாறிச் செய்து பயிற்சி பெற வேண்டும் சரியான முறையைப் புகைப் படத்தில் காண்க.

அனுசரிக்க வேண்டிய முறை:

இம்முறையில் தடுக்க முயலும்போது கை (வலது கையோ, இடது கையோ) உடலின் மத்திய பாகத்தில் தான் இருக்கவேண்டுமே தவிர மேல் பாகத்துக்கோ கீழ் பாகத்துக்கோ செல்லக்கூடாது. அப்படித் தவறு ஏற்படுமானால் தடுப்பு முறை சரிவர அமையாது.



புகைப்படத்தில் எல்லா அம்சங்களிலும் முறையான தடுப்பு முறையை ஆசான் தம் மாணவருடன் (வலது) செய்து காட்டுகிறார்.

டெலிவிஷன் பார்க்காதீர்கள்...

ஆம். தவறான முறையில் டெலிவிஷன் பார்க்க வேண்டாம். டெலிவிஷன் ஒரு தொழில் நுட்பம் மிகுந்த பொருள். இதை சரியான முறையில் இயக்கவேண்டும். டிவி இயக்குமுறை பற்றிய சில கேள்விகளுக்கு உபயோகமான பதில்கள் வழங்கப்பட்டுள்ளன.

- **பார்வையாளருக்கும், டிவிக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்க வேண்டும்?**
  பிக்சர் டியூபின், மூலைவிட்டத்தின், அளவைவிட, 6 மடங்கு இருத்தல் வேண்டும். அதாவது பிக்சர் டியூபின் அளவு 20" ஆக இருந்தால், இடைவெளி தூரம் 120" அல்லது 10 அடி தூரம் இருத்தல் வேண்டும் (20 x 6 = 120), சாதாரணமாக 5 அடி தூரமாவது இருப்பது நல்லது.

- **டிவியிலிருந்து கெடுதலான ஒளிக் கதிர்கள் வெளிப்படுகிறதா?**
  இல்லை.

- **இருளில் டிவி பார்ப்பது தவறு என்பது உண்மையா?**
  ஆம். இருளில் டிவி பார்ப்பதால் கண் உபாதை ஏற்படும், ஆதலால் டிவி பார்க்கும்பொழுது டிவியின் மேல்புறமோ அல்லது பின்புறமோ ஒரு மங்கலமான மின் விளக்கு எரிவது நல்லது.

- **'காண்ட்ராஸ்ட்' மற்றும் 'பிரைட்னஸ்' இருக்க வேண்டிய அளவு என்ன?**
  எப்பொழுதும் குறைந்த அளவில் தேவைக்கேற்றாற்போல் வைத்துக் கொள்வது நல்லது. ஏன் என்றால் மிகுதியான 'காண்ட்ராஸ்ட்'/'பிரைட்னஸ்' பிக்சர் டியூபிற்கு கெடுதல் விளைவிக்கும்.

- **டிவியில் உள்ள மிகுதியான மின் அழுத்தம் ஆபத்தானதா?**
  டிவியை இயக்குகையில் ஆபத்து ஏதுமில்லை. ஆனால் பின்புற உறை, பழுது பார்ப்பதற்கு ஒரு 'சர்வீஸ் எஞ்ஜினியரால்' மட்டுமே திறக்கப்பட வேண்டும்.

வேறு கேள்விகள் ஏதேனும் இருப்பின் எங்களுக்கு எழுதவும்.

மக்கள் நலனை முன்னிட்டு,


சாலிடெர் டிவி

தயாரிப்பாளர்களான,

ஹை-பீம் எலக்ட்ரானிக்ஸ் பி. லிட்., சென்னை-600 020.

ஸ்தாபனத்தாரால் வெளியிடப்பட்டது.

HE/1170



● அட்டையைப் பார்த்தவுடனேயே கல்லூரிச் சிறப்பிதழில் கலகலப்புக்குப் பஞ்சம் இருக்காது என்று நினைத்தேன். நான் நினைத்த மாதிரியே பிரமாதமாக அமைந்திருந்தது.

மதுரை-1 ஆர். கண்ணன்

● கல்லூரிச் சிறப்பிதழ் அட்டைப் படம் மாணவியரைக் கேவலமாக்குவதாகத்தான் அமைய வேண்டுமா என்ன?

சென்னை-44 கலா கே. தாக்கர்

● ''இதனால் இவர்கள் பிடிக்கவில்லை'' என்ற தலைப்பில் நாங்கள் என்னமோ ரஜனி, கமல், மற்ற நடிக நடிகையர்களைப் பார்க்காதது போல் அவர்கள் படத்தைப் பிரசுரித்து உள்ளீரே. இவர்களைப் பிடிக்கவில்லை என்று சொன்னார்களே அவர்கள் படத்தைப் பிரசுரித்து இருக்கக் கூடாதா?

திருக்கோவிலூர் ஜே. எத்துராஜுலு

● கமலஹாஸனுக்கு மான்லிவெஸ் இருக்கா என்ற கேள்விக்கு அதே பக்கத்தில் பிரசுரமாகியுள்ள 'சிவப்பு ரோஜாக்கள்' ஸ்டில்லே பதில் சொல்லிவிடும்.

இராஜபாளையம் கே.எஸ். முருகேஷ்

● 'எளியவரின் இதய புஷ்பம்' கட்டுரையில் கடைசிப் பாராவில் பூண்டி கல்லூரி திருச்சி மாவட்டத்தில் உள்ளது போல் குறிப்பிட்டிருப்பது தவறு. அது தஞ்சை மாவட்டத்தில் அல்லவா உள்ளது!

மயிலை வெ. முத்துகிருஷ்ணன்

● சேகர் பாபுவின் ''பொருள் தெரியாத போராட்டங்கள்'' தற்போது கல்லூரிகளில் நடக்கும் நிகழ்ச்சிகளை அப்படியே அப்பட்டமாகப் பிரதிபலிக்கிறது.

பெரியகொல்லப்பட்டி
இரா. திருப்பதி வெங்கடேசன்

● 'கல்லூரிக்குப் பெருமை தரும் இருவர்' எந்தக் கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்தவர்கள் என்பதைக் குறிப்பிட்டிருக்கலாமே!

இருக்கந்துறை கோ. பிரமநாயகம்

[சாண்ட்ரா தாமஸ்: ஸ்டெல்லா மேரி கல்லூரி
ஸ்ரீகாந்த்: கிண்டி பொறி இயல் கல்லூரி.]

● ''விடியும்'' எழுதிய மாநிலக் கல்லூரி த. கி. நீலகண்டன் பாணி நன்றாக இருந்தது. வேலையில்லாப் பட்டதாரிகளின் மனத்தை — 'எக்ஸ்ரே' எடுத்து எழுதியது போல் இருந்தது.

தஞ்சை கே. ஆர். மனோகர்

● முதல்வர் திரு மணிசுந்தரம் அவர்களின் மேன்மையையும் ஆர். இ.சி.யின் பெருமைகளையும் படிக்கும்போது, அக்கல்லூரியின் பழைய மாணவன் என்ற முறையில் பூரிப்படைந்தேன்.

பம்பாய்-54 கே.எஸ். ஸ்ரீனிவாசராகவன்

● என்னதான் வசதிகளும் வாய்ப்புக்களும் இருந்தபோதிலும் கல்லூரி வாழ்க்கையை மகிழ்வாக நினைத்திடும் நடிகர் சிவகுமார், வாழ்க்கையை நன்கு புரிந்துள்ளார் என்று தெரிகிறது.

மேட்டுப்பாளையம் பி.ஏ. வஹாத்

● தேர்தல்கள்; மோதல்கள் படித்தேன். சென்னையில் மட்டுமல்ல; நாடெங்கிலும் வர வர இந்த காலேஜ் தேர்தல்கள் மாநில, பேரவைத் தேர்தல்களைப் போல வலுப்பெற்று வருவது வருந்தத்தக்கது. சமீபத்தில் பெங்களூரில் ஒரு காலேஜில் நடந்த தேர்தலின்போது மாணவர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டு ஒரு மாணவன் கத்திக் குத்துப்பட்டு மரணமடைய, போலீசாரின் பிடியிலிருந்து தப்பிக்கச் சம்பந்தப்பட்ட மாணவர்கள் மூன்று பேரும் திருப்பதி சென்று ஒரு ஹோட்டல் அறையில் தற்கொலை முயற்சி செய்து கொண்டு ஒரு மாணவன் மரணமடைய இருவர் காப்பாற்றப்பட்டு கேஸ் நடக்கிறது.

பெங்களூர்-5 அ. குமார்

● 'ஈரோட்டில் விகடன் வாசகர் விழாவில் மதனைச் சந்தித்து 15 ஆண்டுகளுக்கு முன் 'கோவிந்த்' என்ற பெயரில் கல்கி தீபாவளி மலரில் இரண்டு முழுப் பக்கங்கள் விளையாடியதை ஞாபகப்படுத்தினேன். இன்று மதனை அவரைக் கல்கியில் கண்டு களித்தேன்.

ஈரோடு அமிர்தா சௌந்தர்ராஜன்

● நடுப் பக்கத்தில் இடம் பெற்றிருந்த காலேஜ் ஜோக்ஸ்-சும்மா சொல்லக் கூடாது. வாய் விட்டு வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தன.

சிவகாசி கே. ராகவன்

● 'பிஸ்கோத்' எழுதிய 'கலாவும் பஞ்சபாண்டவர்களும்' சிறுகதை நமுத்துப் போன கதையாக இல்லாமல் நன்கு 'மொறு மொறு'வென்று சுவையாக இருந்தது.

கோவை துரை. பால்ராஜ்

● உஷா சுப்பிரமணியம் எழுதிய 'முற்றுப் பெறாத முதல் காதல்கள்' என் மனத்தை வெகுவாகப் பாதித்து விட்டது. ஓர் இனிமையான காதலின் ஜனனம் கூட 'இல்லாமையால்,' ஜனித்தவுடனேயே மரணத்தை தழுவிக் கொள்கிறது என்பது கதை அல்ல; நிதர்சனமான உண்மையே!

வீரபாண்டி வதிலை அன்புசெல்வன்

கலைநயம்! விலைநயம்!!

இவை இரண்டும்
கலந்தது
காவிய நயம் மிக்க
அபிராமி
பட்டுப் புடவைகள்.
இந்த தீபாவளிக்கு
அபிராமி
பட்டுப் புடவைகளை
அணிந்து
ஆனந்தமாக
கொண்டாடுவோம்.

அனைத்து
ஜவுளி வகைகளையும்
குறைந்த விலையில்
அளிப்பது
எங்கள் குறிக்கோள்.



அபிராமி சில்க்ஸ்
AIRCONDITIONED
KING OF SAREES

6, 7 & 8
ரங்கனாதன் செட்டி ரோடு,
(நுங்கம்பாக்கம் போலீஸ் ஸ்டேஷன் அருகில்) நுங்கம்பாக்கம், சென்னை-600 034.

போன்: 421227

தீபாவளி முடிய ஞாயிற்றுக்கிழமை விற்பனை உண்டு

நியமமே காட்டுகிறது நியமித்தவனை

சிருங்கேரி பூர்வாசாரியர் ஜகத்குரு சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள்

பொருள்களில் மிகவும் சிறியது தூசி. அதுவும் கூட ஆகாசத்தில் தங்காமல் கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே வந்து படிவதே இயற்கையாயிருப்பதைப் பார்க்கிறோம். மழையடித்தால் தூசி ஆகாசத்தில் தங்க முடிகிறதா? தூசிகூடத் தங்க முடியாத ஆகாசத்தில் இந்தக் கனமான பூமி எவ்விதம் நிரந்தரமாகத் தங்கி நிற்கிறது? புராணங்கள் சொல்கிறபடி பூமியை ஆதிசேஷனும் அஷ்டதிக்கு யானைகளும் தாங்குகின்றன என்றாலும், அந்த கஜங்கள், சேஷன் எல்லாமும் சேர்ந்தல்லவா ஆகாசத்தில் நிற்பதாக ஆகிறது?

பூமிக்குச் சுற்றிலுமோ அதைவிட விசாலமான ஸமுத்திரம். அதற்கோ கரையே இல்லை. ஆனாலும் பூமி முழுகவில்லை.

ஆகாசத்திலிருந்து விழாமலும், ஸமுத்திரத்தில் முழுகாமலும் பூமி நிற்பதே பகவானின் ஸிருஷ்டி மகிமையைக் காட்டுகிறது. அவர் செய்த கட்டுப்பாட்டில்தான் பூமி விழவில்லை; ஸமுத்திரம் எல்லை கடக்கவில்லை.

இந்தக் கட்டுப்பாட்டுக்கே தர்மம் என்று பெயர்.

சந்திர ஸூர்ய நக்ஷத்திராதிகள், இவை விளங்குகின்ற நட்ட நடுவெளி, இதிலே திசைகள், பூமி, மகா ஸமுத்திரம், எல்லாவற்றையும் சூழ்ந்த ஆகாசம் இத்தனையும் தாங்கித் தரிக்கப்படுவது மஹாத்மாவான வாஸுதேவருடைய அபாரமான வீர்யத்தினால்தான் என்று ''விஷ்ணு ஸஹஸ்ரநாம''த்தின் பல சுருதியில் ஒரு ச்லோகம் சொல்கிறது.

த்யௌ:ஸசந்த்ரார்கநக்ஷத்ரா கம் திசோ
பூர்மஹோததி:
வாஸுதேவஸ்ய வீர்யேண வித்ருதானி
மஹாத்மந:

நாம் யாவரும், ஸகல புல் பூண்டுகளும் ஜீவித்திருப்பது ஸூர்யப் பிரகாசத்தினால்தான். அந்த ஸூர்யன் ஒரு நியமத்திற்குக் கட்டுப்படாமல் இருந்தால் பகல் ராத்ரி என்ற வியவஸ்தையாவது, வஸந்தம் முதலான ரிதுக்களாவது ஒழுங்காக ஏற்பட்டு லோக வாழ்க்கை சீராக நடப்பது முடியாமற் போகும். அவரும் இப்படிக் கட்டுப்பட்டு நடப்பது பகவானின் நியமனத்தால்தான்.

ஜடமான எதுவும் தானாக நியமமாயிருக்க முடியாது. அதற்கு ஓர் அத்யக்ஷன் (இயக்கி வைத்து மேற்பார்ப்பவன்) இருப்பதையே அதன் கட்டுப்பாடு காட்டுகிறது. நியமிப்பவன் இல்லாமல் நியமம் தானே ஏற்பட முடியாது.

பகவானிடத்தில் பயந்துதான் வாயு வீசுகிறான், ஸூர்யன் உதயமாகிறார் என்று உபநிஷத் கூறுகிறது.

இம்மாதிரி விஷயங்களை ஆழ்ந்து சிந்திக்கும்பொழுது இந்த பிரம்மாண்டத்துக்கு ஆதார வஸ்துவாக விளங்குவோனும், ஜகத்திலுள்ள ஸகல வஸ்துக்களையும் தன் நியமனத்துக்கு உட்படுத்தி நடத்துவோனும், ஸகல கர்மாக்களுக்கும் தக்கபடி பலனைத் தவறாமல் கொடுப்போனும் ஆகிய ஜகதீச்வரன் ஒருவர் இருக்கிறார் என்று தெரிகிறது. ஸகல ஜகத்தையும் அவரே நியமனம் செய்வதால் அவருடைய சக்திக்கும் ஞானத்துக்கும் எல்லை இல்லை என்றும் தெரிகிறது. எனவே ஜகத்தில் நடக்கும் சில ஸம்பவங்கள் நம் சிற்றறிவுக்கு நியாயமற்றவைகளாகத் தோன்றினாலும், வாஸ்தவத்தில் அவையும் பேரறிவின் நியமப்படி நியாயமாகவே இருக்க வேண்டும் என்ற புத்தியும் உண்டாகிறது.

அமைப்பு: **ரா. கணபதி**

(அடுத்த இதழில் இதே பொருள் பற்றி ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள்)

கல்கி நவம்பர் 23 வாசகர் சிறப்பிதழ்

கல்கி பத்திரிகை பற்றிய உங்கள் விமர்சனத்தை வரவேற்கிறோம். கல்கியின் எந்த பகுதியை வேணுமானாலும் விமர்சிக்கலாம். ஒட்டு மொத்தமாய்ப் பாராட்டவோ குறை கூறவோ செய்யலாம். எவ்வாறானாலும் அதனை நகைச்சுவையோடு பத்துப் பதினைந்து வரிகளுக்குள் எழுதவேண்டும். பிரசுரமாகும் விமர்சனங்களுக்குப் பரிசு உண்டு.

தபால் கார்டு அல்லது உறையின் மீது வாசகர் விமர்சனம் என்று குறிப்பிடவும்.

முடிவு தேதி **3-11-80**

கடிதப் போக்குவரத்து கிடையாது. பிரசுரமாகாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது.




ஒரு மங்கையின்
வாழ்வில் மிக
இனிமையான
நேரங்களில்
இணைந்திருப்பது கட்டாவ்

கட்டாவின் டெர்கோஸா ஸாரிகள்

Rediffusion/K/1221c TM


பசுலப்பா விடைபெற்றுச் சென்றதும்.. ...
ஹலோ! ... 4-XCTB பேசறேன்.. . யாரு?.. ஓகே. ஃபாருக்தானே? உங்க நாட்டுக்கு அழைச்சுப் போக இளம் வயது அடிமை தேவைன்னு சொன்னியே.. ...
ஒரு பையன் இருக்கான்.... படுசுட்டி... விலையா? கால் லட்சத்துக்குக் குறையாது... ...நேரில் வந்து பாரேன்... சரி; நாளை மத்தியானம் ஒரு மணி.....
அடப்பாவி! அடிமை வியாபாரம் வேறு?
பாலு 007
கதை: குமரன்
படம்: விநு
13
பணம் பண்ணணும் எந்த வியாபாரமானா என்ன? ... தம்பி! நீ ராஜபோகத்தில் வாழலாம், சவுதி அரேபியாவிலே ... அங்கே எல்லாரும் கோடீஸ்வரர்கள்!
தங்கக் கூண்டில் அடைபட்ட கிளிமாதிரி அங்கே நான் சௌக்கியமா இருப்பேன்.
ஃபாருக் நாளைக்கு வரேன்னான். அது வரை உனக்கு தங்கச் சிறை யில்லே; செங்கல் சிறைதான். ... நட....
பாலுவை ஓர் அறையில் தள்ளி பூட்டிச் செல்கிறான் மோகிந்தர் மோடி.
வசமாக மாட்டிக் கிட்டேன். எப்படி தப்பிக்கிறது?... அந்த நைலான் கொடி கயிறு ஒருவேளை உதவலாம்.


சற்று நேர யோசனைக்குப் பின்... பேனாகத்தியை எடுத்து ஜன்னல் சட்டத்தைச் சிறிது சிறிதாக செதுக்கி....
ஒரு ஜன்னல் கம்பியை இழுத்து வளைத்து விட்டு பாலு எட்டிப் பார்க்க.....
பத்தாவது மாடியில் இருக்கேன். கீழே அதளா பாதாளம்! கரணம்தப்பினால் மரணம்!
அதோ அந்த வராந்தா கதவு திறந்திருக்கு. கொடிக்கம்பம் ஒன்று நீட்டிக்கிட்டு இருக்கு.
நைலான் கயிறு உதவுகிறது. அதன் நுனியில் சுருக்கு முடிச்சு போட்டு சுழத்தி வீச....
கமான் டார்லிங்! என்னைக் கைவிடாதே!
நான்காவது முயற்சியில் சுருக்கு, கொடி கம்பத்தில் மாலையாக விழ, மறுபுறத்தை ஜன்னல் கம்பியில் கட்டிவிட்டு....
துணிவே துணை! தர்மமே வெல்லும்! பயப்படாதே மனமே! கடவுளை நம்பு!
தொடரும்



மறதி தந்த பரிசு

ராஜகுரு

காலை எட்டரை மணி: வானம் நிர்மலமாக உள்ளது. அந்த மத்திய சிறைச்சாலையின் பெருங் கதவின் வயிற்றில் இறக்கும் சிறு கதவைத் திறந்து கொண்டு, ஒரு நடுத்தர உயரமுள்ள முப்பத்து மூன்று வயது வாலிபன் அசிரத்தையாக வெளியே வருகிறான். பார்ப்பவர் கண்களுக்கு இவன் விடுதலையாகிவெளியே வர விருப்பமில்லாதவன் போல் தோன்றுகிறான்.

சிவந்த தோற்றம் கொஞ்சம் மெருகு குறைந்துள்ளது! ஆனால் கண்கள் மட்டும் புலியின் கண்கள் போல் ஓர் அசாதாரண ஒளியுடன் ஜொலிக்கின்றன.

''சார் நீங்கதானே மிஸ்டர் பரமேசுவரன்?''

பரமேசுவரன் என்ற திருநாமம் கொண்ட அவ்வாலிபன் சற்று ஆச்சரியத்துடன் திரும்பிப் பின்னால் பார்க்கிறான். கண் புருவங்கள் ஒருமுறை ஏறி இறங்கின.

''நான் இங்கே வருவேன்னு நீங்க எதிர் பார்க்கலை இல்லை?''

''எஸ்... மிஸ்... மிஸஸ்... சாரி.. தெரியல்லே.'' — பரமேசுவரனின் சொற்களில் தடுமாற்றம்.

''இன்னும் மிஸ்தான்.'' அவள் முகம் கொய்யாப் பழமாகச் சிவந்தது.

''சரி நேரமாகுது. வாங்க நம்ம வண்டியிலே போவோம்'' என்று முன் பக்கக் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு புன்னகையுடன் நின்றாள் மஞ்சுளா.

யோசனையுடன் வந்து முன் பக்கம் ஏறி அமர்ந்தான். கதவைச் சாத்திவிட்டு வண்டியை முன் பக்கமாகச் சுற்றி டிரைவர் சீட் பக்கம் வந்து அமர்ந்து காரை ஸ்டார்ட் செய்தாள். மத்திய சிறைச்சாலை வேகமாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டது.

பலத்த யோசனையில் ஆழ்ந்தான் பரமேசுவரன்.

பத்தாண்டுகளுக்கு முன் ஒரு நாள்.

''டபக் டபக்'' என்ற ஒரே சீரான தாள லயத்துடன் அந்த எக்ஸ்பிரஸ் ரயில் கன வேகத்துடன் சென்று கொண்டிருக்கிறது.

ஒரு கைப்பிள்ளைக்காரி தன் குழந்தையை மடியில் சாய்த்துக் கொண்டு பால் கொடுத்த படியே உறங்குகிறாள். ஒரு தாடி மீசை வைத்த வாலிபன் லக்கேஜ் வைக்கும் மேல் பலகையில் தூங்கியும் தூங்காமலும் இருக்கிறான். அவனுக்குக் கீழே உள்ள சீட்டில் ஒரு பணக்கார மாது. அவள் கழுத்தில் ஒரு பிடி சங்கிலி. காது மூக்கெல்லாம் வைரம் டாலடிக்கிறது. அவளுக்குப் பக்கத்தில் அவள் மகள்.

மேலே படுத்திருந்த தாடி மீசை வைத்த வாலிபன் சற்றுப் புரண்டு ஒருக்களித்துப் படுக்கிறான்.

அவனுக்கு நேர் இருக்கையில் ஜன்னல் ஓரம் ஓர் அழகிய இளம் பெண். அவளை இடித்தபடியே ஒட்டி அமர்ந்திருக்கும் ஒரு வாலிபன். பார்ப்பதற்குப் பெரும் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

அப்பெண் பெண்களே, பார்த்துப் பொறுமைப்படத் தக்க அளவு பேரழகியாகத் தோன்றுகிறாள்.

திடீரென்று நான்கு வாயிற்படிகளிலும் நான்கு முகமூடி அணிந்த முரடர்கள் கையில் கத்தியுடன் தோன்றினர். உள்ளே இரண்டு பேர் கையில் பளபளக்கும் கத்திகளுடன் நகர்ந்து வந்து....

''யாரும் மூச்சு விடக் கூடாது. இருந்த இடத்தை விட்டும் அசையக் கூடாது. ம்... கழற்றுங்க நகையெல்லாம்.''

முதல் போனி, பிடி சங்கிலி போட்டிருந்த செல்வச் சீமாட்டியினுடையது. உயிருக்குப் பயந்த அந்தக் கூட்டம் மின்னல் வேகத்தில் தங்கள் தங்க; வைர நகைகளைக் கழற்றிக் கொடுக்கத் துவங்கியது.

''கழட்டுடா அந்த வாட்சை.,உன் காதுல விழல.... ம்....'' உறுமல். கேட்போர் நெஞ்சங்கள் நடுங்கின. கத்திகள் மின் விளக்கு ஒளியில் மின்னுவது மேலும் பயங்கரத்தை ஊட்டின.

அந்த இளம் அழகியின் அருகில் அமர்ந்திருந்த பணக்கார வாலிபன் அவசரமாகத் தன் கைக்கடிகாரத்தை உருவி முக மூடிக்காரன் பையில் போட்டான். அவன் கண்கள் கலங்கிப் பார்க்கப் பரிதாபமாக இருந்தான். இதோடு விட்டால் போதும் என்று கடவுளை வேண்டிக் கொண்டான், அந்தத் தொழிலதிபரின் ஒரே மகன் ரவி.


அடுத்தமுறை அந்த இளம் அழகியினுடையது.

ஒ நவன் மயக்கென்று மஞ்சுவின் கையைப் பற்றி முரட்டு வெறியுடன் இழுத்துக் கொண்டு வாசற்படியை நோக்கி நகர்ந்தான்.

அனைத்தையும் கவனித்தபடி சிறிது நேரம் தூங்குவது போல் இருந்த அந்தத் தாடி-மீசை இளைஞனுக்குத் தன் உடலில் இனம் புரியாத ஒரு மாறுதல் நிகழ்வதை உணர்ந்தான். அந்தக் கண்கள் கொடுமையாகப் பளிச்சிட்டன, நாடி நரம்புகள் முறுக்கேறி.

அதே சமயம் ஒரு முகமூடி வண்டியின் அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுக்கவும் சில நிமிடங்களில் அந்த எக்ஸ்பிரஸ் சிரமத்துடன் நின்றது. ஒரே களேபரம்.

தாடி இளைஞனும் முன் பின் யோசிக்காமல் வண்டியிலிருந்து குதித்து. கொள்ளையர்களுக்கு முன் பாய்ந்து நின்று, தன் புலிக்



கண்களை உருட்டி விழித்து, தன் இரண்டு கைகளையும் இடுப்பில் ஊன்றிய வண்ணம், முக மூடிக் கூட்டத்துக்குப் பெரிய சவாலாக நின்றான்.

கண்ணிமைக்கும் நேரத்தில் அவன் உதைக்கு மூன்று முகமூடிக்காரர்களும் உருண்டு எழுந்து ஓடினர்.

அதற்குள், ஐயோ! பயங்கரக் கொடுமை நிகழ்ந்து விட்டதே. மஞ்சுவைப் பிடித்திருந்தவன், அவன் கிடைக்க மாட்டாள் என்ற நிராசையால் மூர்க்கனாகி அவள் மார்பில் கத்தியைப் பாய்ச்சி விட்டு இருளில் ஓடி மறைந்தான். ''ஆ!'' என்ற அலறலுடன் மஞ்சு மண்ணில் விழுந்தாள். ரத்தம் கொப்பளித்துப் பாய்ந்தது.

தாடி இளைஞன் மண்டியிட்டுத் தன் இரு கைகளிலும் மஞ்சுவைச் சுமந்தபடி வண்டியை நோக்கி நகரவும், ஒரு வழியாக வண்டியிலிருந்த போலீசார், கார்டு, மற்றும் பயணிகள் பலர் லைட்டுகளுடன் ஓடி வரவும் சரியாக இருந்தது.

ஒருசில விசாரணைகளுக்குப் பின் மஞ்சுவுடன் தாடி இளைஞனும் உன்மத்தம் பிடித்தவன் போல் கார்டு பெட்டியில் ஏறிக் கொண்டான். வண்டியில் பயணம் செய்த ஒரு டாக்டரின் உதவியுடன் மஞ்சுவின் வெள்ளமாக ஓடும் குருதி நிறுத்தப்பட்டது. முதலுதவிச் சிகிச்சை செய்து கொண்டே அந்த எக்ஸ்பிரஸ் அடுத்த ஜங்ஷனில் சென்று துயரப் பெருமூச்சுடன் நின்றது.

மஞ்சுவையும் தாடி இளைஞனையும் ரயில்வே போலீசாருடன் ஏற்றிக்கொண்டு தீயணைப்புத் துறை நோயாளி வண்டி அவசரமாகச் சென்று அரசு மருத்துவ மனையின் அவசரப் பிரிவின் முன் நின்றது.

ஆபரேஷன் தியேட்டருக்குள் சிகிச்சை நடக்கிறது மஞ்சுவுக்கு. பெரிய போலீஸ் அதிகாரி பறந்து வந்தார்.

தலைமை டாக்டர் வெளியே வந்து, மஞ்சுவுக்கு அதிகப்படியான ரத்தம் சேதமாகி விட்டதால் அடுத்து அரை மணி நேரத்துக்குள் 'பி' குரூப் ரத்தம் செலுத்தப்பட வேண்டும் என்றும், மருத்துவமனை பிளட் பேங்கில் அந்த வகை ரத்தம் இருப்பில் இல்லை என்றும் வருத்தத்துடன் உதட்டைப் பிதுக்கினார்.

''டாக்டர் என் ரத்தம் 'பி' குரூப்தான். ப்ளீஸ்'' —தாடி இளைஞன் தவித்தான்.

அங்கிருந்தவர்களின் முகங்கள் பரவசத்தைக் காட்டின. மிகத் துரிதமாக இரத்தம் எடுத்து மஞ்சுவுக்குச் செலுத்தப்பட்டது.

நீண்ட நேரமாக இந்தத் தாடி இளைஞனையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார் அங்கிருந்த இன்ஸ்பெக்டர். ஒரு முடிவுக்கு வந்து தாடி இளைஞனின் அருகில் நெருங்கினார்.

''மிஸ்டர் பரமேசுவரன்! உங்களைக் கைது பண்றேன். எக்ஸ்யூஸ்மீ!''



வாசகர்: உங்க கதை இவ்வளவு உருக்கமா அமைஞ்சதுக்கு என்ன சார் காரணம்?

எழுத்தாளர்: ஒரு மெழுகு வர்த்தி வெளிச்சத்துலே இதை எழுதினதுதான்.

—பாபநாசம் நாகராஜன்

போலீஸ் படையே சுற்றி வளைக்கிறது தீவிரவாதி பரமேசுவரனை. ரயில் சம்பவம், வன்முறைகளில் அவனுக்கிருந்த நம்பிக்கையைத் தகர்த்துவிட அவன் தண்டனை அனுபவிக்கத் தயாராகவே இருந்தான்.

பலவித கொலை வழக்குகள், வெடி குண்டு வீச்சுக்கள் தொடர்பான வழக்குகளில் சம்பந்தப்பட்டிருந்த பரமேசுவரன் எம். ஏ.க்குப் பன்னிரண்டு ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை கிடைத்தது.

சிறையில் இருந்தபோது பத்திரிகைகளில் ''தொழிலதிபர் மகாதேவன் மாரடைப்பால் மரணம்'' மகள் கதறல், என்ற செய்தி கண்டு மனம் வருந்தியிருக்கிறான். இந்த நீண்ட தண்டனைக் காலத்தில் நிறையப் படிப்பதிலும் உழைப்பதிலும் கழித்தான். பல சிறைகளுக்கு மாற்றப்பட்டான். இவன் நன்னடத்தை காரணமாக இரண்டாண்டு தண்டனை குறைந்தது.

''என்ன ஒரேயடியா சிலை மாதிரி... உங்களைத்தான் சார்...''

''உங்களோட அன்னிக்கு எக்ஸ்பிரஸ்லே பயணம் செஞ்ச பையன்... அவர் என்ன ஆனார்? நீங்க ஏன் திருமணம் செஞ்சுக்கலே இவ்வளவு நாளா?''

''ஓ! அதுவா... அன்னிக்கு நாங்க இரண்டு பேருமே வீட்லே சொல்லிக்காமக் கிளம்பி வடபழனி கோயில்லே திருமணம் செஞ்சுக்கலாங்கிற திட்டத்தோடதான் வந்தோம்... ஆனா என் கற்பே அவன் கண்ணெதிரே பறி போயிடுங்கிற நிலையிலே அவன் உயிரைத் தானே பெரிசா நினைச்சான்? அவங்கிட்ட எப்படிங்க அதற்கு மேலேயும் என் வாழ்க்கையை நம்பி ஒப்படைக்கிறது? கடவுள்போல நீங்க அன்னிக்குக் குறுக்கிடலேன்னா நான்... நான்....'' பொல பொலவென அவள் கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள் சிதறி, அவன் மார்பை நனைத்தன. காரை நிறுத்தினான்.

''வந்து.... நான் ஒரு முடிவு செய்திருக்கிறேன். தயவுசெஞ்சு தயங்காம நீங்க ஒத்துக்கணும்.''

''என்னது?'' புருவங்கள் மேலேறின பரமேசுவரனுக்கு.

அவள் சொன்னாள்:

''மஞ்சு! அன்னிக்கு என்னை நான் சற்று மறந்ததற்கு இவ்வளவு உயர்ந்த பரிசு எனக்குக் கிடைக்கும்னு சத்தியமா நான் நினைக்கவே யில்லை.''

வாழ்வின் அனைத்து மகிழ்ச்சிகளும் நிறைவுகளும் ஒருங்கே அடைந்த நிம்மதியில் பரமேசுவரனின் பரந்த மார்பில் முகம் புதைத்தாள் மஞ்சு.

MCA-NTC-66-TAM



ஷர்ட்டிங்ஸ்

கவர்ச்சிகரமான சிறந்த ரக
காட்டன் ஷர்ட்டிங்குகள்.
கண்ணைக் கவர்ந்திடும்
விதவித பாலியஸ்டர்
டிசைன்கள். பார்வைக்கும்,
அணிவதற்கும் சிறந்தது.

என்டைடஸ்

சிறந்த ரகங்கள்.
சரியான விலை.

நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பொரேஷன்
(தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி) லிமிடெட்
ஒரு மத்திய அரசு நிறுவனம்
கோயம்புத்தூர்-641009

இன்டென்டிங் ஏஜண்டுகள்: (தமிழ் நாடு மற்றும் பாண்டிச்சேரி) ஜே & ஜே எண்டர்ப்ரைஸஸ், 14/F1 அன்சாரி தெரு, ராம்நகர், கோயமுத்தூர் 9 • செமி ஹோல்சேல டிப்போ: மத்திய விநியோக டிப்போ, CS & W மில்ஸ் காம்பவுண்டு, கோயமுத்தூர் 1 • என்டைடஸ் செமிஹோல்சேல் டிப்போ, 208 தம்பு செட்டித் தெரு சென்னை 1. • என்டைடஸ் ஷோரும்கள்: என்டிசி ஹவுஸ், கோயமுத்தூர் 9 • 'சரவண பவனம்' கிராஸ்கட் ரோடு, கோயமுத்தூர் 12 • என்டைடஸ் துணிகள் எல்லா என்டிசி ஷோரும்களிலும் கிடைக்கின்றது.

அத்தியாயம் 13

அம்மணிக்கு இருப்புக் கொள்ளவில்லை. கட்டிலில் உட்கார்ந்தாள். எழுந்தாள். கண்ணாடியைப் பார்த்துக் கொண்டாள். 'ஊஊ' என்றாள். பற்களை மூடிக் கொண்டாள். கண் மூடினாள். திறந்தாள்.

''ஏய் குரங்கு!''

''.....''

''உன்னைத்தான்....!''

''.....''

''இந்தா அம்மணி!''

''என்னடி வில்லி.''

''இப்பத்தான் காதிலே விழுந்ததாக்கும்.''

''இப்பத்தானே அம்மணின்னு கூப்பிட்டே?''

''குரங்குக்குச் சந்தோஷம் அதிகமானா தன் வாலையே முத்தமிட்டுக் கொள்ளுமாம். அது மாதிரி....''

''குரங்கு வாலானால் என்ன, உன் கன்னமானால் என்ன வில்லி... வா, கொஞ்சம் பக்கத்திலே வா...'' என்றாள் அம்மணி.

வில்லி சிரித்தாள். பிறகு, ''ஏண்டி, என்ன நடந்தது?'' என்று கேட்டாள்.

''என்னவெல்லாமோ.''

''சொல்லேன்.''

''உனக்கே தெரியும்.''

''பெரியசாமி கொடுத்த நகைமூட்டையை விடுடீ...அது இருபத்திரண்டு காரட்டு தங்கமா, அல்லது பவுடர் பூசிய பித்தளையான்னு முதல்லே பார்க்கணும்...''

''பெரியசாமியின் மனசு மாதிரி நகையும் சுத்தத் தங்கம்.''

''மனசு வேணும்னு சுத்தமா இருபத்திநாலு காரட் தங்கமா இருக்கலாம், அம்மணி. ஆனா நகை இருபது இருபத்திரண்டுதான் இருக்கணும். செம்பு கலந்தால்....''

''போர்.''

''அப்ப நீ ஏன் குஷியா இருக்கேன்னு சொல்லு.''

''எனக்கு டாக்டர் நல்லசிவம் நல்ல பாடம் கற்பித்தார் வில்லி.''

''எதைப் பத்தி? அவருக்கு நம்முடைய தொழிலும் தெரியுமா?''

''நம்முடைய தொழிலா?''

''ஓ.... நீ..... நீ... என்னுடைய மந்த விவகாரங்களை.''

''மூடடி. நல்லசிவம் ஒரு ஹிப்பாக்ரிட். ஒரு தேள் சித்தர விஷப் பூ!''

''ஏன், என்ன நடந்தது? அவரைப் பார்த்தால் அழுத்தமா நெத்தியில் விபூதி.''

''ஆஹா பூவு! ஒரு பெண்ணைத் தெரிந்து சொல்லத் தெரியலேங்கிலே''

''அதுக்கு நீ ஏன் எரிஞ்சு விழறே அம்மணி!''

''டீ இடியட்... அந்தப் பெண் நான் தாண்டீ.''

''ஓ.... நீ பெண்ணு... சொல்லு...., சொல்லு...'' வில்லி மேஜை மேல் உட்கார்ந்து கொண்டு கால்களை ஆட்டலானாள்.

''நிறுத்துடீ, வில்லி.''

''நான் என்ன செய்யறேன், நிறுத்த...''

''உன் காலாட்டம்.''

''நான் என்ன உன்னை ஃபுட்பாலா ஆடறேன்? விஷயத்துக்கு வாடி!''

அம்மணி முந்தின இரவு நடந்ததையெல்லாம் சொன்னாள்.

''ஊமத்தைக் கேஸ் என்னவாச்சு?'' என்றாள் வில்லி.

''ஏண்டீ, நான் பெரிசா என்னைப் பத்திப் பேசிண்டிருக்கேன். நீ சம்பந்தா சம்பந்தமில்லாம எதையோ தின்னுட்டு வந்த ஒரு குதிரை வண்டிக் கேஸைப் பத்திப் பேசறே.''

''நீதானே சொன்னே, நல்லசிவத்தைத் திடீர்னு கூப்பிட்டாங்க, அவர் ஒரு தற்கொலைக் கேஸைக் கவனிக்க ஓடினார்னு.''

''என்னைப் பத்திக் கேளுடி.''

''சரி, சொல்லு.''


''நீ என்ன நினைக்கிறே?''

''நல்லசிவம் எப்பவாவது உன்மேல் இடித்திருக்கிறாரா?''

''இல்லேன்னு வச்சுக்கோ.''

''அது எப்படி வைச்சுக்கிறது... வெட்டு ஒன்னு துண்டு ரெண்டு.''

''வேணும்னு இல்லே.''



''அப்ப இதுவரையில் மனசாலேதான் இருகக் கட்டிக் கொண்டிருக்கிறார். அங்கே எப்படி?''

''புரியலே.''

''நீயும் உன் மனசால...''

''ஒரு ஆசை ஒரு மோகம் ஏற்பட்ட துண்டு. ஆனா அத காதல்னு சொல்லிக் கௌரவிக்க மாட்டேன்.''

''அப்ப சாப்டர் க்ளோஸ்.''

''சாப்டர் க்ளோஸ்தான். அவருடைய சின்ன புத்தி, அதிலே கொழுந்து விட்டு எரிகிற பொறாமைத் தீ. அவருடைய அழுக்கு மனசு இதிலிருந்தெல்லாம் எனக்கு விடுதலை கிடைச்சுடுத்து... அதான் குஷியா இருக்கேன்....''

''நீ ஒரு பைத்தியம் அம்மணி... காதல் என்பதே இப்பவெல்லாம் இல்லே. ரோமியோ ஜூலியட், அம்பிகாபதி - அமராவதி இவர்களுடன் காதல் தீர்ந்து விட்டது. நாம காதல்னு நினைக்கிறதெல்லாம் வெறும் மத்தாப்பு மாதிரி... சுடர் விட்டு எரிஞ்சு உடனேயே...''

''ஒருத்தரை ஒருத்தர் பரஸ்பரம் இழுத்தா...''

''ஒரு காந்த சக்தி. எந்தப்பிள்ளையும் தான் காதலிக்கிறதாக நினைக்கிற பெண்ணின் மனசால் மயக்கப்படறதில்லே. அவளுடைய உடற்கட்டு, முகம், பிரெஸ்ட் இவைகளால்தான் மயக்கப்படறான். இவை யெல்லாம் அரிதாக இருக்கிறவரை அவனுடைய மோகம், தாபம் எல்லாம் அதிகமாறது. அதை அவன் காதல் என்று நினைச்சு ஏங்குகிறான். அம்மணி, நீ கொழு கொழுன்னு சதைப் பிடிப்போடே கவர்ச்சியா இருக்கே. நல்லசிவம் உன் உடலைத்தான் பார்த்தார். உன் உள்ளத்தைப் பார்க்கவில்லே.''

''நான் மோகனைப் பற்றிச் சொன்னதும் என்னமாய் அவர் முகம் வாடிவிட்டது தெரியுமா?''

''தெரியும். ஆனா உனக்கு இப்ப என்ன டயம்னு தெரியுமா?''

''ஐய்யய்யோ, பதினொன்று முப்பத் தஞ்சு. அர்ஜுன் காத்திட்டிருப்பார்....''

''அந்தப் பெண் பேர் என்னன்னு சொன்னே?''

''மல்லிகா...''

அம்மணி அவசர அவசரமாகப் பவுடர்டப்பாவை எடுத்தாள்.

''தள்ளுடீ.... கண்ணாடியை மறைக்கிறே''



GH

பி.வி.ஆர்

''இன்னும் கொஞ்சம் அப்பிக்கோடீ.''
லில்லி சிரித்தாள்.
கைப்பையுடன் அம்மணி வெளியேறினாள்.

''அம்மணி, இவள் மல்லிகா. இவ அப்பா ஜோசியர். பிரகஸ்பதியை மிஞ்சியவர்... மல்லிகா, இவள் ஜி.எச்க்குள்ளே சிஸ்டர். வெளியே அம்மணி.''

இரு பெண்களும் ஒருவரையொருவர் பார்த்து புன்முறுவலித்துக் கொண்டார்கள்.

''போவோமா?''

''நான் ரெடி. நீங்க தான் காரை ஸ்டார்ட் பண்ணவில்லே!'' என்றாள் மல்லிகா.

'ஜுகுனு' அறையில் மூவரும் உட்கார்ந்தார்கள். ஒரு சிப்பந்தி டம்ளர் டம்ளராக 'ஜில்' தண்ணீர் வைக்க, இன்னொருவன் வெண்ணிற முழுக்கை ஷர்ட்டும் சிகப்பு டையுமாக குறிப்பு புத்தகத்துடன் வந்தான்.

அர்ஜுன் ஆர்டர் கொடுத்தான். ''நாம் பேசிண்டிருப்போம். இனி இருபது நிமிடமாவது ஆகும் சாப்பாட்டில் கை வைக்க!''

''என் கதை மல்லிகாவுக்குச் சொல்லியிருக்கிறீர்களா அர்ஜுன்?''

''பெரியசாமி விஷயம்தானே? ஓ யெஸ்.''

''உண்மையான நிகழ்ச்சி கதை மாதிரி இருக்கு'' என்றாள் மல்லிகா.

''உண்மை நிகழ்ச்சிகள் இல்லேன்னு எழுத்தாளர்கள் கதைகளுக்கு எங்கே போவார்கள்?'' என்றான் அர்ஜுன்.

''நான் என்ன செய்ய?'' என்று கேட்டாள் அம்மணி.

''என்ன வேணும்னாலும்.''

''நகைகளைப் பத்திக் கேட்டேன்.''

''அவர் சாகுமுன் கைப்பட எழுதி டாக்டர் கிட்டே கொடுத்திருக்கிறார். டாக்டர் உன்னிடம் தந்திருக்கிறார். இந்த விஷயம் அதிகார பூர்வமாக ஜி. எச்.' அதிகாரிகளுக்குத் தெரியும். நீ ஏன் பயப்படணும்?''

''பயப்படவில்லே. மனச்சாட்சி உறுத்தறது.''

''நல்ல தங்கமா?'' — மல்லிகா.

''யெஸ்.''

''ஆனா எல்லாம் பழைய காலம்'' என்றான் அர்ஜுன்.

''அழிச்சுப் பண்ணிக்கலாமே?'' — மல்லிகா.

''அவ இன்னும் நகைகளை ஏத்துக்கொள்ளவில்லே. அப்படித்தானே அம்மணி?''

அம்மணி தலையசைத்தாள்.

''பெரியசாமி திட்டவட்டமான முன்யோசனையுடன் பரிசாகத் தந்திருப்பதை நீ அவன் இல்லாதபோது மறுத்தால் அது அவனுடைய ஆத்மாவை உறுத்தும்!'' என்றாள் மல்லிகா.

''எதுக்கும் ஜி. எச். சூப்ரண்டிடம் ஒரு வார்த்தை எழுதிக் கேளு. இது மாதிரி முன்னாடிக் கேஸ்கள் இருக்கும்'' என்றான் அர்ஜுன். பிறகு, ''உனக்காகக் காத்துக் கொண்டிருக்கும்போது டாக்டர் நல்லசிவத்தைப் பார்த்தேன்!'' என்றான்.

''நோ ப்ளீஸ்!''

''என்ன அம்மணி!''

''அவரைப் பற்றிப் பேச நான் விரும்பவில்லே.''

''ஏன், ஏதேனும் நடந்ததா?''

அம்மணி சொன்னாள்;

''நல்ல மனுஷன். மன்னித்துவிடு அம்மணி... அப்புறம் இன்னொரு விஷயம். இது பற்றி வேறு யார் கிட்டயாவது பேசியிருக்கிறாயா?''

''என் ரூம் மேட் லில்லி.''

''எனக்கு அவளைப் பத்தித் தெரியாது. ஆனா அம்மணி, நீ இனிமே யார்ட்டேயும் சொல்லப்படாது. கேட்கிறவர்களெல்லாம் ஒரே மாதிரி அனுதாபப்பட மாட்டார்கள். உங்க ரெண்டு பேர்களைப் பற்றியும் கதை கட்ட ஆரம்பிப்பார்கள். நீ என்ன சொல்றே மல்லிகா?''

''அப்படித்தான் படறது.''

''அதோ நம்ம சாப்பாடு வர்றது... கஞ்சி வரதப்பா!''

''ஒரு யுத்தம் துவங்குகிறது!'' என்றாள் மல்லிகா.

''நல்ல தலைப்பு. சினிமாக்காரன் கேட்டா தலைப்பைப் பணம் கொடுக்காமல் திருடி விடுவான்'' என்றாள் அம்மணி.

அன்று பிற்பகல் டியூட்டிக்கு வந்தபோது தற்கொலைக் கேஸ் எப்படி இருக்கிறது என்று அம்மணி விசாரித்தாள். ஊசலாடுகிறது என்றும், நல்லசிவம் மல்லுக்கு நிற்கிறார் என்றும் தெரிந்தது. என்னதான் நல்லசிவம் என்கிற மனிதனை அம்மணியின் மனம் இப்போது வெறுத்தாலும், டாக்டர் நல்லசிவத்தை அவளால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. ஓர் உயிரைக் காப்பாற்றத் தன் உடலை வருத்திக் கொண்டு பிராணனை விடும் டாக்டர்கள் அபூர்வமல்லவா?

திடீரென்று வராந்தாவுக்கு வந்தான் நல்லசிவம். தன்னை அவன் பார்த்துவிட்டதை அறிந்த அம்மணி ஒதுங்கி, ஒரு தூண் பக்கமாக நின்றாள்.

அவனைப் பின்தொடர்ந்து வந்த நர்ஸிடம் அவன் கூறிய வார்த்தைகள் அம்மணியின் காதில் விழுந்தன.

''எனக்கு ஏதேனும் காப்பி டிபனுக்கு ஏற்பாடு பண்ணுங்க சிஸ்டர். இந்தக் கேஸை நினைச்சாப் பயமாயிருக்கு. இன்



பட்டி மன்றம்

''போதையில் சிறந்தது
பட்டையா பாட்டிலா''
மேதைகள் பலர்
மோதினர் மேடையில்
வாதம் வலுத்தது
மோதல் வெடித்தது
'பட்டை' ஊறியது
'பாட்டில்' சீறியது
நடுங்கிய நடுவர்
நயமாய் எழுந்தே
அதிசய தீர்ப்பை
அவையில் வைத்தார்
''காலையில் பாட்டில்
மாலையில் பட்டை''
இரண்டு அணியும்
இதமாய்க் கலந்தது
பட்டையும் பாட்டிலும்
பாட்டையில் நெளிந்தது.

—க. சங்கரசுப்ரமணியன்



குமரனை அணிந்திடும் நேரம்
குதூகலம்
பொங்கிடும்
நேரம்.
குமரன் சில்க்ஸ்
சுபதினங்கள்,
மங்கள நிகழ்ச்சிகள்,
பண்டிகைகள், பார்ட்டிகள்,
குதூகலமான, கோலாகல
இன்ப மயமான எந்த
நாளும், நிகழ்ச்சியும்
முழுமை பெறுவது —
குமரன்.
அசல் பட்டாடைகளை
அணிந்து பவனிவரும்
போதுதான் இது அத்தனை
ஆரணங்குகளும் அறுதி
விட்டுச் சொல்லும் அழகு
இரகசியம். காஞ்சிபுரம்,
ஆரணி, தர்மாவரம்,
பனாரஸ் போன்ற அசல்
பட்டின் அத்தனை
வகைகளும் கண்டு மகிழ —
குமரன் கலைக்கூடம்.
குமரன் சில்க்ஸ்
(ஏர்கண்டிஷண்ட்)
12, நாகேஸ்வரராவ் ரோடு,
பனகல் பார்க் எதிரில், தியாகராயநகர்,
சென்னை-600 017. தொலைபேசி: 443544.

UIPC: KS: 176

உங்களுக்கு விருப்பமான ப்ரின்ஸ்
அதிக சக்தியுடன் மீண்டும் வந்துள்ளது !

புதிய ப்ரின்ஸ் டீலக்ஸ்

2-பாண்டு



அதிக ஒலி : 1400 mW உயர்ந்த ஒலி பலம் உடையது. ஒலி விஞ்ஞான ரீதியில் டிசைன் செய்யப்பட்ட பெரிய க்காபினெட், கிரில் கொண்டது.

அழகிய தோற்றம் : கவர்ச்சியானது. நீங்கள் விரும்பும் விதம். சில்வர் ஃபாயில், டாம்பான் பிரிண்ட்டிங் முன்பாகம், க்ரோம் ப்ளேட்டிங், ஒத்திணங்கிய பிரிண்டட் டையல், கவர்ச்சியான னாபுகள், எல்லாம் சேர்ந்தளிக்கும் ஒட்டுமொத்த அழகு.

தொடர்ந்து :

- மந்தமான சிக்னல்களில் தேவையற்ற இரைச்சலை தவிர்க்க, இரு-நிலை ஹை-லோ டோன் ஸ்விட்ச் பயன்படுகிறது.
- வழக்கமாக கேட்கும் வால்யூமில் இரைச்சலைக் குறைத்திட சிலிகான் ட்ரான்சிஸ்டர்கள்.
- மத்திய அலைவரிசைக்கு 200 மி.மீ. ஃபெர்ரோசெப்டர் ஏரியல் தெளிவான ஒலி வரத்திற்கு பாலிதீன் பூசிய கூம்பு.
- ட்யூனிங் எளிமைக்கு பெரிய ட்யூனிங் னாப் மேலும் 120 மி.மீ. பாயிண்டர் ஸ்ட்ரோக்.
- முன்னே சாய்ந்து செட்டைப் பாதிக்காது இருக்கும் வகையில் கைப்பிடி டிசைன் செய்யப்பட்டுள்ளது.
- ரேடியோவிற்குள் பாட்டரி எலிமினேட்டர் பொருத்தி மின்சாரத்திலும் இயக்கலாம்.
- மின்சார மாடலும் கிடைக்கிறது.

PHILIPS

மேலானதை உங்களுக்கு வழங்குவதே எங்கள் நோக்கம்.

பீகோ எலெக்ட்ரானிக்ஸ் அண்ட் எலெக்ட்ரிகல்ஸ் லி.

* சில்லறை விற்பனை உச்ச விலை, எக்ஸைஸ் வரி உள்ளிட்டது மாநில விற்பனை வரி மேலும் இதர தல வரிகள் தனி.

பிலிப்ஸ்
இந்தியாவில் 50 ஆண்டு

CASPR-704-203 TAM

னிக்கு ராத்திரி வரை. நீயா நானுன்னு பார்க்கணும்.''

''ஓ.கே: டாக்டர். ரெண்டு இட்லி ரெண்டு வடை?''

அந்த நர்ஸ் நோயாளியைப் பற்றிப் பேச வில்லை. டாக்டருடைய சிற்றுண்டியைப் பற்றிக் கேள்வி கேட்கிறுன். அம்மணி சிரித்துக் கொண்டாள். இயந்திரமாகி விட்ட நர்ஸ் களின் வாழ்க்கையில் சிசுருஷையும் இயந்திரம் செய்யும் வேலைதான். ஏன், சிற்சில சமயங்களில் அவனும் இவனைப் போலத்தான் இருக்கிறுன்!

வார்டுக்குள் அவள் பிரவேசித்தாள். சுவரோரத்தில் இருந்த மூன்ருவது கட்டில் கண்ணை ஈர்த்தது. ஒருவன் படுத்துக்கொண் டிருந்தான். மூக்கில் குழாய். ஆக்ஸிஜன். கையில் ஊசி. மேலே பாட்டில்: சலைன் ஏற்று கிருர்கள். அவன் வந்து பதினைந்து மணி நேரமாகிறது. சில கேஸ்களை வந்த உட னேயே இரண்டு பேர் தூக்கிக் கொண்டு 'போஸ்ட் மார்ட்டம்' செய்யப் போய்விடு வார்கள். இவன் இன்னும் அப்படிப் போக வில்லை என்ருல் அதற்குக் காரணம் டாக்டர் நல்லசிவம்தான். அவன் தனக்கே உரித்தான உறுதியுடன் செய்யும் பிரயத்தனங்கள்தான்.

நர்ஸ் மேஜை மேல் நோயாளிகளின் விவரங்கள் இருந்தன. என்ன கேஸ், எப்படிப் பட்டது. அனுமதிக்கப்பட்ட நேரம், எல்லாம் குறிக்கப்பட்டிருந்தன.

அம்மணி ஒரு நோட்டம் விட்டாள். கண்ணின் வேகம் திடீரென்று தடைப்பட்டது.

இரண்டாம் தடவை பார்த்து படித்தாள்.

''மோகன் — (வயது) 30 இருக்கக்கூடும்— டுரோ பாய்ஸன்.... அட்மிடட் இன் ஸீரியஸ் கண்டிஷன்''

அம்மணி கட்டிலருகே சென்ருள்.

மோகன்! முன்னெரு காலத்தில் அவளைக் காதலிப்பதாகச் சொன்ன மோகன். அவள் வீட்டில் இல்லாதபோது அம்மாவின் நகைகளைக் களவாடிக் கொண்டு ஓடிய மோகன்.

இப்போது களவாட ஒன்றும் இல்லை என்று ஊமத்தையை எங்கேயோ திருடி அரைத்து...

அவள் இப்போது விரைந்தாள்.

டாக்டர் நல்லசிவம் ஒரு புத்தகத்தில் ஆழ்ந்திருந்தான். மனிதனுக்குக் களைப்பே இருக்காதா? முந்தின இரவு ஜீ: எச்.க்கு வந்தவர் இன்னும் வீடு திரும்பவில்லை. ஓர் உயிரின் கதி என்ன என்று நிர்ணயம் ஆகிற வரையில் வீடு திரும்பக் கூடாது என்று பிடிவாதமாக இருக்கிறுனே?

''குட் ஆஃப்டர் நூன், டாக்டர்!''

புத்தகத்திலிருந்து கண் எடுக்காமலேயே, ''யெஸ், ஸிஸ்டர்'' என்ருன்.

''அம்மணி வந்திருக்கேன்.''

''யெஸ், ஸிஸ்டர்!''

அம்மணிக்கு டாக்டர் நல்லசிவத்தின் மனம் புரிந்தது. நேற்றுவரை அம்மணியாக இருந்தவள் இப்போது ஸிஸ்டர் ஆகி விட்டாள்.

அவள் பல்லைக் கடித்துக் கொண்டாள். ''ஒரு ரிக்வெஸ்ட் டாக்டர்!'' என்ருள்.

''யெஸ்.''

''மோகனை நீங்கள் காப்பாத்த வேண்டும். அவனுக்கு நீங்க உயிர் கொடுத்தால் இந்த



கேள்வி : நடிகர்களுக்குத் தயாரிப்பாளர்தான் 'ரிசர்வ் பாங்க்' என்கிருர்களே, நிஜமா?

பதில் : ரிசர்வ் பாங்க் நடிகர்கள் வீட்டிலேயே இருக்கும். தயாரிப்பாளர் நடிகருடைய 'கரண்ட் அக்கவுண்ட்'.

-(ஸ்கிரீன் கேள்வி - பதில் பகுதியிலிருந்து)

- சரோஜா ராமச்சந்திரன்

உயிர் உள்ளவரைக்கும் நான் உங்களுக்குக் கடமைப்பட்டிருப்பேன்.''

''ஐ ஆம் டிரையிங் ஸிஸ்டர்.''

''இந்த மோகன்... இந்த மோகன்தான் அந்த மோகன், டாக்டர்.''

''ஐ டோண்ட் கேர்... ஹி இஸ் ஜஸ்ட் எ பேஷண்ட்... யூ கான் கோ!''

அம்மணி வெளியேறி வராந்தாவுக்கு வரவும், ஒரு பெண் மூன்று வயதுப் பிள்ளையுடன் முகம் பீதியில் கலங்க எதிரே வரவும் சரியாக இருந்தது.

அவளைக் கண்டதும் இனம் தெரியாத பயம் அம்மணியைக் கவ்வியது. பின்னை வேறு மனத்துக்கு இம்சையாக இருந்தது.

''ஸிஸ்டர்!''

''என்னம்மா?''

''டாக்டர் நல்லசிவம்...''

''அங்கே இருக்கிருர்.''

''நிறையப் பணம் கொடுக்கிறேன். அவர் வாங்கிப்பாரா?''

''மாட்டார். எதுக்கு?''

''என் புருஷனைக் காப்பாத்தப் பணம் ஒன்னுதான் இருக்கு ஸிஸ்டர்!''

''உன் புருஷன் எங்கே?''

''இதோ இந்த வார்டில் — எட்டாம் நம்பரில்...''

''அப்போ நீ....நீ.... மோசனின்...''

''ஆமாம் அம்மா. இவன் எங்க பிள்ளை, உமேஷ்.''

''நமஸ்தே ஸிஸ்டர்!''

தன் தகப்பனுர் எவ்வளவு ஆபத்தான கட்டத்தில் இருக்கிறுன் என்று உணர முடியாத வயதில் இருக்கும் பிள்ளையை அம்மணி பார்த்தாள். அவனுடைய முக மலர்ச்சி அவளுடைய இதயத்தைக் கலக்கியது.

''உன் கணவர் பிழைத்துக் கொள்வார் அம்மா. டாக்டர் நல்லசிவம் அதற்காகவே பாடுபடுகிருர். கவலைப்படாதே... அவர் கிட்டே பணம் பற்றிப் பேசாதே....''

''ரொம்ப தாங்க்ஸ் ஸிஸ்டர்.''

மிஸர்ஸ் மோகன் டாக்டர் அறையினுள் பிரவேசிக்க, அம்மணி சிலையாக நின்ருள்.

அன்று இரவு அவள் திரும்பும்போது, மோகன் இருந்த வார்டுக்குள் பிரவேசித்தாள். எட்டாம் நம்பர் பெட் காலியாக இருந்தது.

(தொடரும்)

"ஈகிள் கார்ஸோல் பற்றி சொல்லவும் வேண்டுமா?"




"இது உங்களுக்கு எந்நேரமும் பணி புரியும்..."

காலை, உச்சிவேளை, இரவு



"இது கைவசம் இருக்கவேண்டிய ஒன்று..!"

தூசு உட்செல்லாது மூடுகிறது... 24 மணி நேரத்திற்கு சூடு குறையாது காக்கிறது.




"என்ன இருந்தாலும் இது ஈகிள் வாகூம் ஃப்ளாஸ்க் அல்லவா?"

ஈகிள் வரிசையிலே 123 வேறுவேறு தினுசுகள்.

CASE-112-182-TM

நறுக்கு பதில்கள்!



✖ பி. தங்கவேலு, ஸமரூர்-4
கே. எம். வி. என்பது 'மாஸ்டர் வெசல்' என்று ஒரு வாசகர் கூறி உமது மூக்கை உடைத்திருக்கிறாரே?
ப: எம். வி. என்பது மோட்டார் வெசல் என்பதுதான் சரி. வெசல் என்பதை வெஹிகிள் என்று கைதவறி எழுதிவிட்டேன். என் பதிலுக்கு ஆதாரம், சேம்பர்ஸ் டிக்ஷனரி. (மூக்கு முழுதும் உடையவில்லை என்பதை ஒத்துக்கொள்கிறீர்களா?)

✖ எஸ். விஜயன், ராஜபாளையம்
கே: வீணை பாலசந்தருக்கும் உங்களுக்கும் ஒரு ஒற்றுமை தென்படுகிறதே, அது என்னவென்று சொல்வீர்களா?
ப: மேதைத்தனமோ?



✖ கே. வசந்தகுமார், ஆறுமுகநேரி
கே. இறைவனை நாம் ஏன் மரியாதையோடு வேண்டுவதில்லை (உதாரணம்: இறைவா, நீ என்னைக் காப்பாற்று)
ப: மிகவும் நெருங்கியவர்களுக்கிடையே மரியாதை வாசகங்கள் தேவையில்லை. அப்பாவையும் அம்மாவையும் 'நீ' என்று தானே நம்மில் பலர் அழைக்கிறோம்? மரியாதை வார்த்தையில் இல்லை; உணர்வில் உள்ளது.

✖ பா. ராதாகிருஷ்ணன், பரமக்குடி
கே. 'கிராமத்து அத்தியாயம்' - ருத்ரய்யாவின் திரைப்படத் துறையில் ஒரு சிறந்த அத்தியாயமாகத் திகழுமோ?
ப: திகழ வேண்டும். ருத்ரையா போன்ற திறமைசாலிகள் வெற்றி பெற வேண்டும் என்பதே என் விருப்பம்.

✖ ஜெ. பாண்டுரங்கன், திருநின்றவூர்
கே. மனிதனுக்கு மறதி அவசியமா?
ப: அவசியம் தான். இல்லாவிட்டால் எத்தனை எத்தனை அல்ப விஷயங்களைக் குப்பையாக மனத்தில் குவித்து வைத்துக் கொண்டிருப்போம்! பல முக்கியமான விஷயங்களுக்கு இடம் கிடைக்காது. கற்றுக்கொண்டவைகள் பல சமயம் நம்மை மீறி மறந்து விடுகிறதே என்று பார்க்கும் போது மறதி ஒரு சாபம்தான். தேவையற்றவைகளை மட்டும் மன முயற்சியினால் மறக்க முடியும் என்று ஃப்ராய்டு கூறியுள்ளார். அதே மாதிரி பயிற்சியினாலும் முயற்சியினாலும் பலவற்றை மனத்தில் நிறுத்திக் கொள்ள முடியும்.

✖ எம். ராஜேந்திரன், வால்குடி
கே. குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வது கடவுளுக்குச் செய்யும் துரோகம் அல்லவா?
ப: எப்படித் துரோகமாகும்? நாம் நடந்தும் ஓடியும் செல்லக் கால்களைக் கொடுத்தான் இறைவன். காரிலும் விமானத்திலும் போகிறோம். அப்போது இறைவனுக்குத் துரோகம் செய்கிறோம் என்று அர்த்தமா?

✖ சி.எஸ். தங்கமணி, சென்னை-18
கே. 'நார்ஸிஸ்டிக் லிபிடினல் டைப்' என்றால் என்ன?
ப: தன் உருவத்தின் மீதே காதல் கொள்வது. (பலர் கண்ணாடி முன் எத்தனை மணி நேரம் அலுப்பில்லாமல் கழிக்கிறார்கள்) கிரேக்க புராண கதா பாத்திரமான நார்ஸிஸஸ் மிகவும் அழகான இளைஞன். தன்னைக் காதலித்தவர்களையெல்லாம் புறக்கணித்தான். கடைசியில் அவனுடைய பிம்பத்தையே காதலிக்கும்படி ஆகிவிட்டதாம். (இந்தப் பதிலைக் கூறுவதற்குப் பல புத்தகங்களைப் புரட்டித் தேடி அலைய வேண்டியிருந்தது. இனிமேல் இது மாதிரி என்னை அலைய விடாதீர்கள்!)

✖ கவிமயிலன், விளாத்திகுளம்
கே. அசலுக்கும் நகலுக்கும் இப்போதெல்லாம் அவ்வளவாக வித்தியாசம் இல்லையே ஏன்?
ப: பல அசல்கள் உண்மையில் நகல்களாக இருப்பதால் தான்.

✖ ஜே. அமுதா ஜெகந்நாதன், புதுச்சத்திரம்
கே. சில நேரங்களில் பொய், உண்மையைக் காட்டிலும் மதிப்பாக இருக்கக் காரணம் என்ன?
ப: பொய்யில், கற்பனை என்கிற பூச்சு வேலை போன்றவை இருப்பதால் அது கவர்ச்சிகரமாகவும், மதிப்புள்ளதாகவும் ஆகிவிடுகிறது. உண்மைக்கோ அத்தகைய அலங்காரங்கள் கிடையாது.

✖ அன்வர், புவனகிரி
கே. சிவாஜி சகாப்தம் பற்றி சர்ச்சையில் உங்கள் மூக்கையும் நுழைப்பது தானே?
ப: ஓ! இதோ என் கருத்து: சிவாஜி சகாப்தம் முடியக் கூடியது அல்ல. இப்போது இரண்டாவது அத்தியாயம் துவங்கும் காலகட்டத்தில் இருக்கிறது.

பரிசு பெறுபவர் :

கே. வசந்தகுமார்
35, எஸ். எஸ். அம்மன் கோயில் தெரு,
ஆறுமுகநேரி-628202

College Campus S.I.V.E.T காலேஜ் கௌரிவாக்கம்

தொகுப்பு: நாயகன்



சென்ட்ரல் ஸ்டேஷன்:

''இரயில் ஏன் இன்னும் வரவில்லே?'' அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்துத் தவிக்கும் மக்கள் ஒருபுறம்;

இரயிலில் மூட்டை, முடிச்சுகளுடன் ஏறிப் புறப்படத் தயாராக இருக்கும் மக்கள் கூட்டம் மறுபுறம். அவர்களை வழியனுப்ப வந்தவர்களின் மகிழ்ச்சிக் குரல்கள்; வருத்தத் தொனிகள்.

இவர்களுக்கு நடுவே, ''சார், கூலி கொஞ்சம் பார்த்துப் போட்டுக் கொடுங்க'' என்று குரலெழுப்பும் போர்ட்டர்கள்.

பரட்டையன் பிளாட்பாரத்தில் நின்று கொண்டு இருந்தான். பெயடாச் சம்பா இத்துத் தந்த பரட்டைத் தலே. எண்ணெய் கண்டு பல மாதங்களாகி இருக்க வேண்டும். அழுக்கடைந்த ஆடை. அதில் வானத்து நட்சத்திரங்கள் போல் பல பொத்தல்கள்! கால்கள் அழுக்கேறி மெலிந்திருந்தன. அவனுக்குப் பக்கத்தில் ஒரு பையன். ஆறு ஏழு வயதிருக்கலாம். நிர்வாணமாக, அழுக்கேறிய உடம்புடன், வயிறு என்ற உறுப்பு எங்கே எங்கே என்று தேடும்படி தசையும் எலும்பும் இணையக் காணப்பட்டான்.

''ஐயா, சாமி! கொஞ்சம் ஏதாவது இருந்தாப் போடுங்க. குழந்தை சாப்பிட்டுப் பல நாளாவுது'' — பரட்டையன் கேட்டான். பசி மயக்கத்தால் அவன் உடல் ஆடிக்கொண்டிருந்தது.

அந்தப் பையன் அழ ஆரம்பித்தான். ''அப்பா, பசி எடுக்குதுப்பா.''

பரட்டையன் என்ன செய்வான்? பரட்டையனின் மனைவி இவ்வுலக வாழ்வு போதும் என்று சில மாதங்களுக்கு முன் மேலுலகம் சென்றுவிட்டாள். பாக்கியசாலி!

அவளை நினைத்தபோது பரட்டையனின் கண்களில் நீர் திரண்டது. அது அவனுக்காகவா? அவன் விட்டுச் சென்ற மகவுக்காகவா? அவனுடைய வற்றாத சொத்து கண்ணீர்தான்.

பிளாட்பாரத்தின் பக்கத்தில் உள்ள குழாய் பரட்டையன் கண்ணில் பட்டது.

தண்ணீர் குடித்தாலாவது குழந்தையின் பசியும் தன் பசியும் தீரும் என்று எண்ணியவாறு குழாயடியை நோக்கி நடந்தான். குழாயடியில் ஒரே கூட்டம்.

''ஐயா, கொஞ்சம் வழி விடுங்க. ஒரு வாய் தண்ணி குடிச்சுட்டுப் போயிடறேன்.''

''சீ, தூரப்போ. சனியன். இவன்களாலே வராத வியாதிகள் எல்லாம் வந்துவிடும்.''

பரட்டையன் குழாயடியை விட்டு நகர்ந்தான். கால்கள் மயக்கத்தால் தள்ளாடின.

அப்பொழுது பிளாட்பாரத்தில் உட்கார்ந்திருந்த ஒரு கும்பல் தங்கள் உணவு மூட்டைகளைப் பிரித்துச் சாப்பிட ஆரம்பித்தார்கள். பரட்டையன் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான். பரட்டையன் கண்களில் பிரகாசம். ஏதாவது கிடைக்காதா?

இரயில் ஒன்று புறப்பட சிக்னல் பிறந்தது. ஒலிபெருக்கி அலறியது. கார்டின் விசில் ஒலி எழுந்தது. பச்சைக் கொடி அசைந்தது.

பரட்டையன் கண்கள், கவனம் எல்லாம் அவர்கள் சாப்பிடும் இலேகள் மீதே லயித்திருந்தன.

சாப்பிட்டு முடித்து ஒருவன் இலேயைத் தூக்கி எறிந்தான். அதில் கொஞ்சம் மிச்சமிருந்தது. சொத்தென்று அது பிளாட்பாரத்துக்கும் ரயிலுக்கும் மத்தியில் இடைவெளியில் விழ—

பரட்டையன் பாய்ந்தான்.

பசி மயக்கத்தால் கால்கள் தடுமாற இடுக்கிலே அவசரமாக இறங்கினன்.

அதே கணத்தில் ரயில் கிளம்ப—

''ஐயையோ!, யாரோ இரயில்லே மாட்டிக்கிணுங்க!'' — குரல் மழை.

கார்டும் டிரைவரும் நிலேமை உணர்ந்து, ரயிலும் நின்றபோது பரட்டைக்கு இறுதி மரியாதை! அவன் உயிரோடு இருக்கும்போது விரட்டிய ஜீவன்கள் அவன் உயிரை இழந்த பின் அனுதாபக் கூட்டம் நடத்தினர்.

''ஐயோ, பாவம். என்ன கஷ்டமோ!'' பலவித அனுதாபக் குரல்கள்.

கொஞ்ச நேர அனுதாபத்துக்குப் பிறகு கும்பல் கலேந்தது. அவரவரும் தங்கள் தங்கள் வேலேகளைக் கவனிக்கச் சென்றனர்.

அந்தப் பையன் அழுதவாறு பிளாட்பாரத்தில் இன்னமும் நின்று கொண்டிருந்தான்.

—என். பாலாஜி

வயது பத்தொன்பது

மிகவும் இளம் வயதில் பேராசிரியர் ஆனவர் காலின் மெக்லாரன் என்பவர். இவர் பேராசிரியர் பொறுப்பை ஸ்காட்லாந்தில் உள்ள ஒரு கல்லூரியில் ஏற்றபோது இவருக்கு வயது 19.

—பி.வி. வைத்தியநாதன்



துளிகள்

ஆர். பழனியப்பன்

காதல்தோல்வி

மலை மங்கை
ஏன் அருவிக் கண்ணீர்
வடிக்கிறாள்?
எந்த
மன்மதன்
அவளை
காதலித்து
கைவிட்டு விட்டான்?

பாறைமெத்தை

பல்லாயிரம்
அடிகள் மேலிருந்து
கீழே
விழுந்தாலும்
அருவியே
நீமட்டும்
அடிபடாமல்
இருப்பது எப்படி!
பாறை என்ன
உனக்குப்
பஞ்சு மெத்தையா?

தந்திகம்பிகள்

செய்திகளை
விரைந்து அனுப்பும்
இறந்த
தந்திக் கம்பிகள்
பெண்களுடைய
திருவாய்கள்

துன்பம்

உலகத்தின்
விழியே
வெளிச்சத்தில்
...ம
மக்களைக் கண்டது.

மழை

மேகம்
மறையும்பொழுது
இடி ஒப்பாரியுடன்
விடும்
கடைசிக் கண்ணீர்.

சாரி சாரியானது!

நான் படித்த பள்ளியில் சென்ற ஆண்டு சிவாஜி நாடகம் நடந்தது. அதில் நான் சிவாஜியின் தளபதியாக நடித்தேன். ஒரு காட்சியில் சிவாஜியாக நடிப்பவர் என்னிடம் பேசவேண்டிய ஒரு முக்கிய வசனத்தை மறந்து விட்டார். நான் அவரைப் பார்த்து முறைத்தேன். உடனே அவர் ஏதோ ஞாபகத்தில் 'சாரி' என்று கூறக் கூட்டத்தினர் பெரும்பாலோர் கேலிக் குரல் எழுப்பினர். உடனே நான் ''ஆம் மன்னவா, நம் படைகள் சாரி சாரியாகப் போருக்குத் தயாராக அணி வகுத்து நிற்கின்றன'' என நான் சமாளித்துக் கூற அப்போது கூட்டத்தில் எழுந்த கரவொலி அடங்க வெகு நேரமாயிற்று.



—ஆர். கண்ணன்

பொன் மழை

வையகத்தில் வறுமையும் பிணியும ஒழிந்து வளமையும் மகிழ்ச்சியும் கொழிக்க 'கனக தாரா' துதியை வடமொழியில் அளித்தார் ஸ்ரீ ஜகத்குரு ஆதி சங்கரர். அதனைத் தமிழாக்கம் செய்துள்ளார் மாணவர் வெ. கணபதி. அவரது மொழிபெயர்ப்பில் நான்கு பாடல்கள்:

கனிமிகவே கேள்வனவன்
  கண்கொட்டா முகுந்தன்
கமல மலர் நாயகியைக்
  காணஅவள் களிப்பில்
தனிமிக நயப்புதனை
  நல்மகிழ்வை அளிக்கும்
தனின்அரை நயனங்கள்
  நோக்கட்டும் நயந்து.

கார்மேகக் கருவிழியே
  கமலாட்சி கடாட்சம்
காற்றுன கருணையினால்
  கடும்வெப்ப வறுமைச்
சோர்வதனைச் சோர்வாக்க
  சாதகநிறு பறவை
செல்வமழை நீர்பெறவே
  செல்வமழை பொழியே.

கழல்பணியும் சேவகர்க்கு
  கனகமழைக் கொட்டும்
கமலைஉந்தன் கடைக்கண்கள்
  கனிநோக்கால் தேவி!
மாதவன்றன் மனத்திலுறை
  மாதங்கி! உன்னை
மனமொழிமெய் மும்மையினால்
  மகிழ்ந்துதினம் துதிப்பேன்.

செங்கஞ்ச வாழ்நிலையே!
  செங்கமலர் கனவே!
செழுஞ்சேலை வெண்பட்டு
  மிகமிளிர் பூமாலை
பொங்குமிகப் பொலிவின்ற
  பகவதியே! பொற்பே!
தங்குலகில் உயிர்களுக்கு
  நிலைநலங்கள் அருளாய்!





அந்த ஆபீஸுக்கு ஒரு அழகான லேடி டைப்பிஸ்ட்

விஜயாலயன்

அந்த நால்வருக்கும் வயிற்றெரிச்சலாக இருந்தது.

ஹெட் கிளார்க் சிவகுரு, டெஸ்பாட்ச் வேதநாயகம், அக்கவுண்டண்ட் நேசமணி, அப்ரண்டிஸ்சிப் அக்கவுண்டன்ட் கிளார்க் புருஷோத்தமன் எல்லோருக்கும் தினேஷின் மேல் கோபம் கோபமாக வந்தது.

பின்னே இருக்காதா?

இத்தனை வருஷம் சர்வீசில் இருந்த கேவி அண்ட் கேவி கம்பெனிக்கு டைப்பிஸ்டாக ஒரு லேடியைப் போட்டது கிடையாது. அப்படியே லேடிகளைப் போட்டாலும் ஜோடி சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.

அதாவது கல்யாணமானவர்கள்.

அப்படியாவது அவர்கள் பார்த்து ரசிக்கும் படியாகவா இருப்பார்கள்?

எல்லாம் இந்த ஆபீசின் தலையெழுத்து என்று முணு முணுப்பார்கள்.

ஆனால் போன மாதம் வனிதா இந்த பிராஞ்சுக்கு மாற்றப்பட்டாள்.

அந்த ஆபீசே சந்தோஷத்தால் கலகலத்தது.

காரணம்?

வனிதா கல்யாணமாகாதவள்.

அதைவிட நல்ல அழகி.

ஒயிலான உடம்பு.

அழகு அழகாகப் பிடித்த சதைகள்.

வெகுவாகச் சிவந்த நிறம்.

அவள் நின்றால் அழகு.

உட்கார்ந்தால் அழகு.

நடந்தால் அழகு.

கொட்டாவி விட்டால் அழகு.

அழகு....அழகு....அழகு.

சிவகுரு, வேதநாயகம், நேசமணி, புருஷோத்தமன் எல்லோரும் அவளுக்கு எதையும் செய்யக் காத்திருந்தார்கள். தவமிருந்தார்கள்.

வனிதாவின் கடைக்கண் பார்வை வீசக் கிடைக்காதா என்று ஏங்கினார்கள்.

ஆனால் இந்தத் தினேஷ் அவளைச் சுற்றிச் சுற்றி வந்தான்.

தினேஷ் அந்த ஆபீஸிலேயே கல்யாணமாகாதவன். இளைஞன். அதிலும் உதவி மானேஜர்.

வனிதா கேட்காமலேயே அவளுடைய வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தான்.

அவள் கேண்டீனுக்குப் போனால் பின்னாலேயே போவான்.

அவளுக்குக் கட்டாயமாகத் தன் செலவிலேயே மீல்ஸ், டிபன் எல்லாம் வாங்கிக் கொடுப்பான்.

''மிஸ் வனிதா... நீங்க பஸ்ஸில் போனா உங்க பொன்னுடல் கூட்டத்தில் இடிபட்டுப் புண்ணாகிப் போகும். ஆட்டோவில் போங்கள்...'' என்று ஆட்டோவை வரவழைத்து, அவளை ஆட்டோவில் ஏற்றி, தானும் அவள் அருகில் அமர்ந்து...

ஆட்டோவுக்கும் அவனே செலவு செய்தான்.

நான்கு பேருக்கும் எரிச்சல் வந்தது.

ச்சே! இந்தத் தினேஷுக்கு விவஸ்தையே கிடையாது.

ஒரு பெண் என்றால் இப்படியா கடலில் விழாத குறையாக விழுந்து விழுந்து உதவி செய்வார்கள்.

படுபாவி!

ஆகமொத்தம் தினேஷ் வனிதாவைக் காதலிக்கிறான்.

அன்று அந்த நால்வரும் ஆபீஸுக்குள் நுழையும்பொழுது அவர்களை ஓடிவந்து வரவேற்றான் பியூன் பொன்னுசாமி.

'சார்...சார்! தினேஷ் சாருக்கு மூக்கு உடைஞ்சு போச்சு...''

''ஏண்டா... பாத்ரூமிலே வழுக்கி விழுந்திட்டானா?'' என்றார் டெஸ்பாட்ச் கிளார்க் வேதாசலம்.

''இல்லே சார்! தினேஷ் சார் அந்த வனிதாப் பொண்ணுக்கு விழுந்து விழுந்து உதவிகள் செய்து காதலிச்சார். ஆனா... நேத்து நம்ப மானேஜரும் அந்த வனிதாவும் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டாங்க...''



நான்கு பேருக்கும் குலாப் ஜாமூனைச் சாப்பிட்டதைப் போலிருந்தது.

''தினேஷ்!... துரோகி!.... எங்களுக்கா துரோகம் பண்ணப் பார்த்தே?''

''டேய்!,பொன்னுசாமி... இந்தா... ஓடிப் போய் அஞ்சு ரூபாய்க்கு சாக்லெட் வாங்கிட்டு வா'' என்று ஐந்து ரூபாயை நீட்டினார் அக்கவுண்டன்ட் நேசமணி.

''என்ன சார்! இவ்வளவு பெரிய சந்தோஷத்தைச் சொன்னதுக்கு வெறும் சாக்லெட்தானு? ஏதாவது டின்னர் கொடுங்க சார்... எல்லோரும் சேர்ந்து....''

நான்கு பேரும் சந்தோஷத்தோடு தலையாட்டினார்கள்.

ஆபீஸில் உள்ள எல்லோரையும் அழைத்துக்கொண்டு காண்டீனுக்குப் புறப்பட்டனர்.

நூறு ரூபாய் சில்லறைக்குச் செலவு செய்து விட்டுத் திரும்பும்பொழுது—

தினேஷ் ஆபீசுக்குள் நுழைந்து கொண்டிருந்தான்.

வேதாசலம், நேசமணி, சிவகுரு, புருஷோத்தமன் எல்லோரும் அவனை வருத்தமும் கிண்டலுமாக வரவேற்றார்கள்.

''தம்பி தினேஷ்! உண்மையிலேயே எங்களுக்கு ரொமப வருத்தமா யிருக்கு. நீ அந்த வனிதாவுக்கு விழுந்து விழுந்து உதவிகள் செஞ்சே... உயிருக்குயிராக் காதலிச்சே... ஆனு...அவள் இப்படித் துரோகம் உனக்குச் செய்வாள்னு நாங்க நினைக்கல்லே...'' என்று ரொம்ப வருத்தப்பட்டார் வேதாசலம்.

''தினேஷ்! நீங்க இனிமேலாவது இந்த மாதிரி வேடி டைப்பிஸ்டுகளுக்குத் தண்டச் செலவு செய்யாதீங்க...'' என்று நேசமணி பரிதாபத்துடன் சொல்ல....

எல்லோரும் குபீரென்று சிரித்தார்கள்.

தினேஷும் வாய் விட்டுச் சிரித்தான்.

''வனிதாவை நான் காதலிச்சேனு..'? அதெல்லாம் ஒண்ணும் கிடையாது. நம்ப மானேஜர் சங்கர்தாஸுக்கு வயது நாற்பது. இன்னும் கல்யாணம் பண்ணிக்கல்லே.வனிதா கல்யாணமாகாதவள். .நல்ல அழகி. இந்த ஆபீஸுக்கு டைப்பிஸ்ட்டா வந்தபோதே தீர்மானிச்சுட்டேன், நம்ப மானேஜர் இந்த வனிதாவைக் கல்யாணம் பண்ணிக்கப் போறார் என்று. அதனுல்தான் வனிதாவுக்குப் பல உதவிகள் செய்து... செலவுகள் செய்து ஐஸ் வைத்தேன். அடுத்த மாதம் நம்ப மானேஜர் சங்கர்தாஸ் சென்னை பிராஞ்சுக்கு மாற்றலாகிப் போறார். அவர் இடத்துக்கு வனிதா மானேஜரிடம் சிபாரிசு செய்திருக்கிறள். அவர் போர்டு மீட்டிங்கிலே என் பெயரைச் சிபாரிசு செய்திருக்கிறர். ஆக மொத்தம் என் முயற்சி சக்ஸஸ்''!

நான்கு பேருக்கும் அந்த ஆபீஸே தலைகீழாகச் சுற்றுவது போலிருந்தது.



விட்டில் அணைத்த விளக்கு

மகரிஷியின்

புதிய தொடர்கதை

7·11·80 தீபாவளி சிறப்பிதழில்

ஆரம்பம்

ஓம் ஸ்ரீமாத்ரே நம:

ஆஸ்திகப் பெருமக்களுக்கு ஓர் அரிய செய்தி !

ஜகத்குருக்கள் ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீட மகா சந்நிதானம், ஸ்ரீ கொண்டாம் ஆசார்ய ஸ்ரீ சரண தீர்த்த மகராஜ் போன்ற மகான்களின் ஸ்ரீமுகங்களும் ஆசிகளும் அருளப் பெற்ற **நவசக்தி நிலையத்தில்** உருவாக்கப்படும் பூஜைக்குரிய தெய்வீக சாதனங்கள்.

I. பூஜையில் வைக்கும் சக்கரங்கள்: (உபாசனா தேவதை, மற்றும் பலன்களுடன்)

1. ஸ்ரீமகாமேரு (பஞ்ச லோகம்) 4 CMS × 4 CMS விலை ரூ. 215.00

2. ஸ்ரீ சக்கரம் (தாமிரம்) 8cm × 8cm விலை ரூ. 105.00

ஸ்ரீ மகாமேரு மற்றும் ஸ்ரீ சக்கரத்திற்குரிய அதி தேவதை ஸ்ரீ லலிதா திரிபுர சுந்தரி. பூர்வ புண்ணிய வசம் உள்ளவர்களுக்கே இதை பூஜிக்கும் எண்ணம் ஏற்படும். சக்கரங்களில் அதி விசேஷமானதும் மகா சக்தி பொருந்தியதுமான மேற்படி மகா மேரு — ஸ்ரீ சக்கர பூஜைகளை பக்தியுடன் செய்வோருக்கு இக லோகத்தில் சகல சௌபாக்கியமும், வெற்றியும் — பரத்தில் மோக்ஷமும் பிறவா நிலையும் சித்திக்கும். ஜாதி பேத இன பேதமின்றி எவரும் இல்லத்தில் வைத்து ஆராதிக்கப் பலன் கிடைக்கும் அரிய சக்தி வாய்ந்தவை.

3. தனாகர்ஷண மகா சக்கரம் மகாலக்ஷ்மி இதன் அதி தேவதை. இருகத்தில் செல்வம் கொழிக்கச் செய்யும், வியாபார விருத்தி, மனை, மங்கலப் பொருள் சேர்க்கை, சுப காரிய நிகழ்ச்சிகள், மன சந்துஷ்டி, பிரம்ம தேஜஸ், இவைகளை, இதை வைத்துப் பூஜிப்போர்க்குத் தரக்கூடியது. விலை ரூ. 105.00

4. ஸ்ரீ மகாகணபதி சக்கரம் இந்தச் சக்கரத்தின் நாயகர் ஸ்ரீ ஓம்கார ஸ்வரூபமான கணபதி. சர்வ வல்லமை படைத்த இந்தச் சக்கரம், பூஜிப்பவரின் சகல கஷ்டங்களையும் நிவர்த்தி செய்து எடுத்த காரியங்கள் யாவும் தங்கு தடையின்றி நடைபெற உதவுவது. விலை ரூ. 105.00.

5. ஸ்ரீ சுப்பிரமணிய மகாசக்கரம் ஸ்ரீ ஷண்முகரே இதன் பூஜா தெய்வம். உடல் நலிவு, பிணி, பூத பிரேத பிசாச பில்லி சூன்னிய தோஷங்கள், மிருத்யு, மிருக பயம், புத்தி பேதகம், வாய் குழறல், நடுக்கம், ஆகிய நரம்புத் தளர்ச்சிகள், தூர்க்கிருத்திய பாபங்கள்முதலான எல்லாக் குறைகளையும் நிவர்த்தி செய்து, மாறாத இளமையும் அழகும் தந்து, தேக சம்ரக்ஷணம் செய்ய வல்லது. விலை ரூ. 105.00.

6. பாலா மகாத்ரிபுர சுந்தரி சக்கரம் இந்த சக்கரத்தின் நாயகி ஸ்ரீ பாலா திரிபுர சுந்தரி. தொடர்ந்து 48 நாட்களுக்கு நியமத்துடன் செய்வோர்க்கு அஷ்டமா சித்திகளும் கைவரும். சத்ருக்கள் அடிபணிவர். ஐம்புலன்களும் வசப்படும். இயற்கையின் சக்திகளும் கட்டுப்படும். விலை ரூ. 105.00.

7. திருஷ்டி நிவர்த்தி யந்திரம் ஸ்ரீ தத்தாத்ரேய மகானுல் மந்திர உருப்பெற்றது. வீட்டிலோ, வியாபார ஸ்தலத்திலோ இதை மாட்டி வைத்தால் கண் திருஷ்டியால் வரக்கூடிய எல்லாத் துன்பங்களையும் நீக்கிவிடும்; காரியத் தடை போக்கும். கார், லாரி, ஸ்கூட்டர் முதலிய வாகனங்களில் வைத்தால் விபத்து நேராமல் தடுக்கும். விலை ரூ. 42.00.

II. உடம்பில் அணியக்கூடிய தெய்வீக டாலர்கள்: (வெள்ளியில் செய்யப்பட்டவை)

1. ஸ்ரீ காமாக்ஷி டாலர் காரிய சித்தி, வெற்றி, செல்வ அபிவிருத்தி, முக்தி தர வல்லது. விலை ரூ. 45.00.

2. ஸ்ரீ தேவி கருமாரியம்மன் டாலர் வெள்ளியில் விலை ரூ. 45.00. தாமிரத்தில் விலை ரூ. 16.00

3. விவாக ப்ராப்தி டாலர் விவாகங்கள் தடையின்றி சீக்கிரம் நடைபெற, காதல் விவாகமாகக் கனிய, நட்சத்திரத்தைத் தெரியப்படுத்தி எழுதினால் அதற்குரிய பூஜை செய்து சக்கரத்தை அனுப்புகிறோம். 108 நாட்களுக்குள் திருமணம் நடைபெற அனுக்கிரகம் கிட்டும். விலை ரூ. 45.00.

4. தன ப்ராப்தி டாலர் வேலை வாய்ப்புகள், மேல் பதவிகள், செல்வம் செழிக்க, சொத்துக்கள் சேர வல்லது விலை ரூ. 35.00.

5. பாலாரிஷ்ட டாலர் (ஒன்றிலிருந்து ஏழு வயதுக் குழந்தைகள் வரை அணியக்கூடியது.) பால ரோகங்களான கரப்பான், சக்குவான், இருமல், இழுப்பு இவைகள் வராமற் காக்க ஆதி சங்கரரால் உருவாக்கப்பெற்றது. விலை ரூ. 25.00.

6. மாங்கல்ய பாக்கிய டாலர் திருமணமான பெண்களின் மாங்கல்யம் நிலைத்திட, கணவன்மார் ஆயுள் பெருக நீண்ட தாம்பத்ய வாழ்வு தொடர, சுமங்கலியாய் மிளிர வைப்பது. விலை ரூ. 35.00.

7. கண் திருஷ்டி நிவர்த்தி டாலர் ஸ்ரீ தத்தாத்ரேய மகானுல் மந்திர உருப்பெற்ற இந்த டாலரை அணிந்தால் கண் திருஷ்டியினுல் ஏற்படும் எல்லா இடர்களையும் களையும். காரியத் தடைகளை நீக்கும். விலை ரூ. 35.00.

III. ஜெபமாலைகள்: (வெள்ளியில் கட்டியவை)

1. ஒரிஜினல் தாமரை மணி மாலை (54 மணி) விலை ரூ. 100. 0. 2 ஸ்படிக மணி மாலை: (54 மணி) விலை ரூ. 60.00. 3. துளசி மணி மாலை: (54 மணி) விலை ரூ. 60.0 .

இந்தச் சாதனங்கள் தேவைப்படுவோர் சாதனத்தின் விலையில் பாதிப் பணம் முன்பணமாக அனுப்ப வேண்டும். சாதனம் வி.பி.பி.யின் பிரசாதத்துடன் அனுப்பிவைக்கப்படும். ஆர்டர் செய்வோர் தமது நட்சத்திரத்தைக் குறிப்பிட்டு எழுதவும்.

விஸ்வகர்மகுரு ஸ்வாமி **ஸ்ரீ S. T. முருகபூஷணம், ஸ்ரீ வித்யா** உபாசகர்/தலைவர்



நவசக்தி நிலையம்

153, லாயிட்ஸ் ரோடு, (ஸ்டேட் பாங்க் எதிரில்)

கோபாலபுரம், சென்னை-600 086 (போன்: 812013)

"லோகாஸ் சமஸ்தாஸ் சுகினோ பவந்து"

Advt.

ISI முத்திரையுடன் செயல் புரியும்'வாட்டர் ஹீட்டர்' மாடல்கள் இவை ஒன்றுதான்



15, 25, 35 மற்றும் 50 லிட்டர் கொள் அளவுகளில் கிடைக்கின்றன. எந்த ஸ்பென்ஸர்ஸ் வாட்டர் ஹீட்டரும் 'ISI வகுத்த முறைப்படி செயல்படுகின்றன. இத்துடன் தரமான 'ஸ்பென்ஸரின்' தயாரிப்பும் சேர்ந்து 'ஸ்பென்ஸர்ஸ்' வாட்டர் ஹீட்டர்களை மிகச் சிறந்தவைகளாக செய்கின்றது.

ஸ்பென்ஸர்ஸ்
வாட்டர் ஹீட்டர்

ஸ்பென்ஸர் & கோ. லிட்.,
769, அண்ணா சாலை,
சென்னை 600 002.

S 3177 A TAM

தேவை வயல்களைத்
தினமும் உழுகின்ற
கண் கலப்பைகள்
ஆண்டுகள் பலவாகியும்
அறுவடையைக் காணவில்லை...
அன்னை பாரதமே
எங்கள் வாழ்விற்கு
ஆமென் கூறிவிடாதே...

வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு மாதம் ஐம்பது ரூபாய் உதவித் தொகை அளிப்பது குறித்துக் கருத்தறிய இருபத்தைந்து பேர்களைப் பேட்டி கண்டபோது....

1. வள்ளியூர் எஸ். எஸ். மணி,
நிர்மலா ஸ்டோர்ஸ், சென்னை

உதவித் தொகை பெறும் பட்டதாரிகளுக்கு வேலை கிடைத்தவுடன், அதுவரை அவர்கள் பெற்ற உதவித்தொகையில் பாதித் தொகையையாவது அரசுக்கு அவர்கள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட வேண்டும். அப்படிச் செய்தால் தான் அரசின் சுமை குறையும். பிற பட்டதாரிகளும் பயன்பெற இயலும்.

2. சிப்பாய் 10451520 சென்னையன்,
இந்திய இராணுவம்

வரவேற்கிறேன். இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர்களை வாழ்த்துகிறேன். குறைகள் இருக்கலாம். ஆனால் அதைப் பெரிது படுத்தக் கூடாது.

3. ஆர். கோவிந்தராஜன்,
விவசாயி, சாத்தனூர்

ஏற்கெனவே சோம்பித் திரியும் பட்டதாரிகளை இந்த உதவித் தொகை நிரந்தர சோம்பேறிகளாக மாற்றிவிடும்.

4. பி. சிவலிங்கம், தினக் கூலி, விழுப்புரம்

எஸ். எஸ். எல். சி. வரை படித்த நான் தினக் கூலியாக வேலை செய்து வருகிறேன். பட்டதாரிகளுக்கு மட்டுமே உதவிப் பணம் என்றால், எங்களுக்கு வயிறு கிடையாதா என்ன?

5. ஜி. கோவிந்தன்,
சுமை தூக்குபவர், எழும்பூர்

படிக்காத நாங்கள் சுமை தூக்கி வயிற்றைக் கழுவுகிறோம். பட்டதாரிகளும் எங்களுக்குப் போட்டியாகக் கிளம்பிவிடக் கூடாது. எதற்கெல்லாமோ லட்சங்கள் செலவழிக்கப்படும்போது இதற்காகச் செலவழிப்பது செலவாகாது.

6. எச். ஏ. எல். மொய்தீன் மீரான்,
எழுத்தர், ஸ்ரீவைகுண்டம்

ஒருகப் காப்பி ஐம்பது பைசாவுக்கு விற்கும் போது இந்த ஐம்பது ரூபாய் யானைப் பசிக்குச் சோளப் பொரி. என்றாலும் சோளப் பொரியைக் கூட இந்தக் காலத்தில் யார் சும்மா கொடுப்பார்கள்?

7. ஏ. சூரிய நாராயணா, ஓய்வுபெற்ற அலுவலர், மேற்கு கோதாவரி

பெற்றோர்களின் சுமை ஓரளவுக்காவது குறையும். அட்லீஸ்ட் அப்ளிகேஷன் போடுவதற்காவது இது உதவும்.

8. திருமதி கலாவதி, பயிற்சியாளர்,
தமிழ்நாடு(4) மகளிர் என்.சி.சி. திருச்சி

மியர் வேஸ்ட். மனிதனின் ஆசைக்கு எல்லை கிடையாது. இன்று ஐம்பது போதும் என்பவர்கள் நாளை அதை நூறாக உயர்த்தக்



கோரிப் போராட்டம் நடத்த மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

9. ஆ. வெ. சி. பாண்டியன், ஓய்வுபெற்ற ஆசிரியர், மாநகராட்சி, சென்னை

வேலை இல்லாத் திண்டாட்டம் விசுவ ரூபம் எடுக்கும் என்று அன்றே உணர்ந்த ராஜாஜி தொழிற் கல்வி திட்டத்தை அறி முகப்படுத்தினர். ஆனல் அதற்கு ஜாதி சாயத்தை நாம் பூசினேம். அவர் அமரராகி விட்டார். நாம் அவதிப்படுகிறேம்.

10. கே. ஜி. இராமநாதன், சொந்த தொழில்நடத்தும் பட்டதாரி, சென்னை

ஒரு பேங்க் வேலைக்கு அப்ளிகேஷன் போட றதா இருந்தால் நாற்பது ரூபாய் வேண்டி யிருக்கு. அதனலே ஐம்பதை எழுபத் தைந்தாக உயர்த்துவது நல்லது.

11. ஜி. மணிவண்ணன், உரிமையாளர், என்.ஜி. வாரி சர்வீஸ், திருவள்ளூர்

இந்த உதவி நீர்மேல் எழுத்துக்கு நேர். எந்தவித நிரந்தரப் பயனையும் தராது.

12. குமாரி ஜிக்கி ராஜலக்ஷ்மி, பாரசூட் டயிற்சியாளர், பொன்னகர் காலனி

பணம் மனிதனுக்குத் தேவைதான். ஆனல் மனிதனைக் கெடுப்பதும் அதுதான். அதனல் உண்மையிலேயே தேவைப்படுகிறவர்களுக்கு மட்டுமே இந்த உதவித் தொகை அளிக்கப் பட வேண்டும்.

13. திருமதி பிலோமினு சரளா, நிர்வாகி, பயணிகள் விடுதி, சென்னை

இந்தப் பணத்தைப் பட்டதாரிகள் கையில் கொடுத்தால் இன்னும் இரண்டு சினிமாப் பார்ப்பதற்கும் இரண்டு பாக்கெட் சிகரெட் குடிப்பதற்கும்தான் பயன்படும். எனவே இந்தப் பணம் பட்டதாரிகளின் பெற்றோர் களுக்கே அளிக்கப்பட வேண்டும்.

மனைவி: "எல்லாத்தையும் பழைய பேப்பர் காரன் கிட்டே போட்டாச்சு, அடுப்பு பற்றவைக்க காகிதம் இல்லே!"

எழுத்தாளர்: "அதுக்கு வாசலில் ஏன் வந்து நிற்கிறே...?"

மனைவி: "போஸ்ட்மேன் வருகிற நேரம்... உங்க கதை ஏதாவது திரும்பி வருமேனு தான்!"

- உ. ராஜாஜி



14. ஜே. எஸ். பதூரா, உரிமையாளர், டெக்னோ ஸ்பெசிபிக்ஸ், புதுதில்லி

எனது மாநிலமான பஞ்சாப்பை பார்த்துக் கற்றுக்கொள்ளுங்கள். அங்கே பட்டதாரி ஏர் பிடிக்கவும் தயங்க மாட்டான். உழைப் பின் உயர்வு உடுத்தும் ஆடையின் வெண் மையில் அமைவதாக நீங்கள் எண்ணியதன் விளைவே இத்திண்டாட்டம்.

15. எஸ். கே. ஜான் தேவஇரக்கம், இராமநாதபுரம் தொகுதி அ.தி.மு.க அமைப்பாளர், இளையான்குடி

இதனல் அரசுக்குப் பெருஞ் சுமை. இருந் தாலும் இச்சுமையே பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற உணர்வை, உத்வேகத்தை அரசுக்கு ஏற்படுத் தும்.

16. கவிஞர் ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன், சென்னை

அரசின் திட்டங்கள் தோல்வி அடைவது அதிகாரிகளின் அலட்சியப் போக்கினலும் லஞ்சம் வாங்கும் குணத்தினலும்தான். எனவே, அரசு அலுவலர்களே இந்தத் திட் டத்தை நிறைவேற்றும்போதாவது உங்கள் கரங்களைத் தூய்மையாக வைத்துக் கொள் ளுங்கள்.

17. கே.பி. குமார், பி.ஏ. மாணவர், ஜெயின் கல்லூரி, துரைப்பாக்கம்

நல்லதொரு வேலையில் அமர்ந்ததுமே 'பத் தாயிரம் கொடு, ஸ்கூட்டர் கொண்டு வா' என பெண்ணைப் பெற்றவர்களை விரட்டும் மாப்பிள்ளைகளே... வேலை இல்லாவிட்டால் உங்கள் மதிப்பு மாதம் ஐம்பது ரூபாய்தான் என்பதை வேலை கிடைத்த பின்பு மறந்து விடாதீர்கள்.

18. ஏ. பலராமன், கணித ஜோதிடர், பனகல் பார்க், சென்னை

ஐம்பதின் கூட்டுத் தொகை ஐந்து. கணித ஜோதிடப்படி ஐந்து 'குரு'வுக்கு உரிய எண். குரு பணத்துக்கு உரியவன். எனவே இத் திட்டம் மட்டுமின்றி இத்திட்டத்தால் பயன் பெறுபவர்களின் வாழ்வும் நன்றாக அமைய லாம்.

19. வே. பால்ராஜ், மதுரை கோட்ஸ், அம்பாசமுத்திரம்

தன் கையே தனக்குதவி என்ற உண்மை யின் பொருளை உணராதவன்தான் தன் வயிற்றை நிறைக்க பிறர் உதவியை நாடு கிறான். இந்த கௌரவ பிச்சையைப் பெற்றுக் கொள்ளப் பட்டதாரிகளின் கரங்கள் நீளக் கூடாது என்பது என் விருப்பம்.

20. திருமதி முனியம்மா, அட்டெண்டர், சென்னை

ஐம்பது ரூபாய் கொடுத்துவிட்டோம் என்று பட்டதாரிகளைத் தண்ணீர் தெளித்து



கல்கி மாதாந்திரப் பரிசுத்திட்டம்

(அக்டோபர்)

திரைப்பட ரேஸின் முக்கிய குதிரைகளுக்குப் பின்வருமாறு நம்பர்கள் தரப்பட்டுள்ளன: 1—டைரக்டர்; 2—ஒளிப் பதிவு; 3—ஒலிப் பதிவு; 4—இசை அமைப்பு; 5—நடிப்பு; 6—கதை வசனம்.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

வாரம் ஒரு படம் வீதம் நாலு வாரத்துக்கு நாலு படங்கள் குறிப்பிடுகிறோம். அந்தப் படத்தைப் பார்த்து வெற்றி பெறும் குதிரை நெம்பரை அதற்கான கூப்பனில் குறித்துக் கொள்ளவும். நாலு வார முடிவில் நாலு கூப்பன்களையும் ஒன்ருகச் சேர்த்து உறையி விட்டு, கல்கி, மாதாந்திரப் பரிசுத் திட்டம், தபால் பெட்டி எண் 3159, சென்னை—32 என்ற விலாசத்துக்கு அனுப்பவும். முடிவு தேதி நவம்பர் 20. நாலு ரேஸ்களிலும் சரியான குதிரையைத் தேர்ந்தெடுத்தவருக்குப் பரிசு ரூ. 1000. சரியான விடையை ஒன்றுக்கு மேற்பட்டவர் எழுதினால் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

நான்காவது படம்: **மற்றவை நேரில்**

ஜெயிக்கும் குதிரை எண்:..........................

என் பெயர்..........................

விலாசம் ....

....

....

கையெழுத்து ....

விட்டு விடாதீர்கள். வேலை வாய்ப்புக்கு வழி செய்யுங்கள்.

21. ஆ. இராமசுவாமி, துணி வியாபாரம், திருநெல்வேலி டவுன்

சும்மா கொடுத்தால் எதுவுமே சுவைக்காது ஸார். ஏதேனும் பகுதி நேர வேலைக்கு அமர்த்திக் கொடுங்கள்.

22. பெயர், விவரம் கூற மறுத்த ஒரு கைவண்டித் தொழிலாளி

யோவ்... உனக்கு வேற வேலே இல்லே... நீ உழைச்சா உனக்குச் சோறு... நான் உழைச்சா எனக்குச் சோறு... இதிலென்ன கருத்து வேண்டிக்கிடக்கு... ஒத்திப் போய்யா அந்தண்டை... எனக்கு வேலே இருக்கு...

23. கி. ஜெகந்நாதன், தலைமை ஆசிரியர், ஒக்கூர்

பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்திய மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் நோக்குடன் தமிழகம் எங்கும் முறை சாராக் கல்வி நிலையங்கள் (Non formal Education) செயல்பட்டு வருகின்றன. இக்கல்வி நிலையங்களில் பிற பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள் மாலை நேரங்களில் பணி புரிகிருர்கள். இதற்காக இவ்வாசிரியர்களுக்கு ஐம்பது ரூபாய் அளிக்கப்படுகிறது. இவ்வாசிரியர்களுக்குப் பதிலாக வேலை யில்லாப் பட்டதாரிகளை முறைசாரா கல்வி நிலையங்களில் ஆசிரியர்களாக நியமித்து மாதம் நூறு ரூபாய் வரை வழங்கலாம்.

24. பேராசிரியர் மாத்யூ அஞ்சலி வெலில், அழகப்பா கலைக் கல்லூரி, காரைக்குடி

ஜ. எம். எஸ். மந்திரி சபையில் தொழிலாளர் அமைச்சராக இருந்த மத்தாயி மஞ்சூரானி அவர்களால் முதன் முதலில் கேரளாவில் அறிமுகம்செய்யப்பட்டுத் தோல்வியைத் தழுவிய திட்டம் இது. எனினும் இயன்ற வரை எல்லாப் பட்டதாரிகளுக்கும் உதவுவதில் தவறேதுமில்லை.


25. பெ. மணி, கடை சிப்பந்தி, வீரவநல்லூர்

வயதானவர்களுக்குத்தான் 'பென்ஷன்' கொடுப்பாங்க. ஆனல் இப்போ பட்டதாரி வாலிபர்களுக்கும் 'பென்ஷன்' கொடுக்க வேண்டியதாகி விட்டது. நம்ம நாடு எங்கேயோ போயிட்டிருக்கு ஸார்.

பேட்டி : வெஜ்ஜி

படம் : எர்னஸ்ட்

படத்தில் வேலை இல்லாப் பட்டதாரி : சுஜாதா



ELEGANT



உணர்வு
ஊட்டுவது
உள்ளம்
கவர்வது

இனிய தீபாவளிக்கு
இதயங்கவரும் வண்ணங்
களில் எண்ணற்ற வகை
களில் எழில் சிந்தி மிளிர்
கின்றன கோ-ஆப்டெக்ஸ்.

பட்டு, பாலியஸ்டர், பருத்திச்
சேலைகள், வேட்டிகள், சட்டைத்
துணிகள், லுங்கிகள், ஆடை
அணிகலன்கள் மற்றும்
அலங்காரத் துணி வகைகள் !

அனைவரும் அணிவீர் !
அகமகிழ்வு பெறுவீர் !

20%
சிறப்புத் தள்ளுபடி
6-10-80 முதல்
6-11-80 வரை

கையில் பாதி உதிர்ந்த பூமாலையுடன், காசிநாதர் கதவைத் தட்டியபோது மணி இரண்டரை. தூரத்தில் எங்கிருந்தோ ஒரு சேவல் 'கொக்கரக்கோ' குரல் எழுப்ப, அங்கொன்றும் இங்கொன்றுமாக அக்குரல் ரிலே ஆகித் தேய்ந்தது. சற்றுமுன் அவரை வீட்டு வாசலில் இறக்கிவிட்ட படகுக் கார் சந்தியில் திரும்பி ஒளியைப் பாய்ச்சியபோது காசிநாதர் கையசைத்து விடைகொடுத்தார்.

மீண்டும் கதவைத் தட்டக் கையை ஓங்கிய போது கதவு திறந்தது.

''என்ன இவ்வளவு நேரம்?'' — மனைவி மங்கையர்க்கரசி.

''கோயிலில் பிரசங்கம் என்றால் தெரியாதா? ஒன்பது மணி என்று புரோகிராமில் இருந்தால், பன்னிரண்டு மணிக்கு நிகழ்ச்சி தொடங்குவார்கள்.''

''தொண்டை என்ன இப்படிக் கம்மி இருக்கிறது. கொஞ்ச நாளைக்கு இந்தப் பிரசங்கங்களை நிறுத்தி வைத்தால் என்ன?''

''விடுகிறார்களில்லையே.''

''தொடர்ந்து கண் விழிப்பு, பனிக் குளிர், இடைவிடாது பிரசங்கம். ஒரு மாதத்துக்கு மேலாகத் தொண்டை இப்படி இருக்கிறதே. மாத்திரை இனிப் பிரயோசனப்படாது. டாக்டரிடம் காட்டிப்பாருங்கள்.''

''பிளாஸ்கில் கோப்பி இருந்தால் கொஞ்சம் எடு.''

கோப்பி காசிநாதரின் தொண்டையில் இதமாக இறங்கிக் கொண்டிருந்தபோது மங்கையர்க்கரசி தயங்கித் தயங்கி அந்தச் செய்தியைச் சொன்னாள்.

''கொழும்பிலிருந்து தம்பி திரும்பவும் கடிதம் போட்டிருக்கிறான்.''

''மனைவியையும் அழைத்துக் கொண்டுவருவதைப் பற்றித்தானே? வரவேற்புக்கு நான் ஏற்பாடு பண்ண வேண்டுமா?''


''......''

''ஏன் பேசாமலிருக்கிறாய்? சொல்லேன்.''

''என்ன செய்யறது மூத்த மகன் அல்லவா? ஒரு வருஷத்துக்கு மேலாகுதே. இந்தப் பெரிய வீட்டில் நீங்களும் நானும் ஒண்டிக் கட்டையாக இருந்து என்ன சுகத்தைக் கண்டோம்? ஊரார் பேச்சு வேறு முள்ளாய்க் குத்துகிறது. இனியும் இந்த வன்மம் பாராட்ட வேண்டுமா?''

''வள்ளுவர் என்ன சொல்லியிருக்கிறார்? தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்தியிருப்பச் செயல், மகன் தந்தைக்காற்றும்





மன ஆழத்தில் சில மயக்கங்கள்

அன்புமணி

உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் என்னும் சொல். நான் என் கடமையைச் செய்தேன். அவன் செய்தானா?''

''செய்யாமல் என்ன? இப்பவும் அவன் உங்களுக்குப் புகழைத்தானே தேடித் தந்திருக்கிறான். கணவனும் மனைவியும் புகழ் பெற்ற டொக்டர்களாக இருப்பதென்றால் சாதாரண விஷயமா?''

''தலை குனியச் செய்து விட்டானே?''

''விட்டுத் தள்ளுங்கள். இவைகள். எல்லாம் தெய்வ சங்கல்பம்!''

''அப்போது மகனையும் மருமகளையும் வரவேற்பதென்றே நீ தீர்மானித்து விட்டாயா? சரி.''

''ஆ! இவ்வளவு போதும். இவ்வளவு போதும். என் பிரார்த்தனை வீண்போகவில்லை. கோயில்களில் நீங்கள் இந்த நாட்களில் செய்த பிரசங்கங்களும் வீண்போகவில்லை. கடவுள் மனமிரங்கி விட்டார்.''

''ஆனந்தக் கூத்தாடியது போதும். அவர்கள் இந்த வீட்டுக்கு வருவதைப் பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் நான் அவர்களுடன் முகம் கொடுத்துப் பேச மாட்டேன். என்னைப் பொறுத்த வரை அவர்களோடு எனக்குச் சம்பந்தமில்லை.''

காசிநாதர் ஒரு பாட்டம் இருமி ஓய்ந்தார். மங்கையர்க்கரசி அவரை ஆதரவுடன் படுக்கைக்கு அழைத்துச் சென்றாள்.

காசிநாதர் ஓய்வு பெற்று நான்கு வருடங்களாகியும் இன்னும் சமுதாயத்தில் ஓர் அந்தஸ்துடனும், மதிப்புடனும், கௌரவத்துடனும் வாழ்கிறார் என்றால் அதற்குக் காரணம் அவருடைய தமிழ்ப் புலமைதான்.

அவர் கலந்துகொள்ளாத இலக்கிய மேடைகளோ, தலைமை வகிக்காத கலை அரங்குகளோ மிகவும் சொற்பம். அவர் எழுதிய நூல்கள் பல. அவற்றுள் சாகித்திய அகடமி பரிசு பெற்றவையும் உண்டு.

வேறு வகையிலும் அவருக்கு ஓர் அந்தஸ்து உண்டு. டொக்டராக ஒரு மகன், என்ஜினியராக ஒரு மகன், வெளி நாட்டில் ஒரு மகன். அதன் காரணமாக உயர் மட்டத்தில் அவருக்குள்ள தொடர்புகள்!


இத்தனையும் இருந்தென்ன? ஒரு சிறு முள் அவர் நெஞ்சில் குத்தி விட்டது. டொக்டரான அவர் மகன் அருளம்பலம், வைத்தியக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே சக டொக்டரான அருணாவுடன் இணைந்துவிட்டான். அருணா ஏழை. அவள் பெற்றோர் அந்தஸ்து இல்லாதவர்கள்.

இருபது வயது வரை, தான் கிழித்த கோட்டைத் தாண்டாது, அப்பா பிள்ளையாக இருந்த அருளம்பலம் நேற்றுப் பிறந்த ஒரு பெண்ணுக்காகத் தன் சொல்லுக்கு மதிப்புக் கொடுக்காமல் போய் விட்டானே!

மங்கையர்க்கரசி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். அப்பாடா! கடவுள் அருளால் ஒரு பெரிய பாரம் நெஞ்சிலிருந்து இறங்கியது.

அருளம்பலமும் அருணாவும் வீட்டுக்கு வந்து ஒரு வாரம் தங்கியிருந்து விட்டுப் போய்விட்டார்கள். ஊர் வாயை மூட உலை மூடி கிடைத்து விட்டது. ஆகா! ஒரு வாரமும் இந்த வீடு எவ்வளவு கலகலப்பாக இருந்தது. எவ்வளவு களை கட்டியிருந்தது. மருமகள் என்று ஒரு பெண் வீட்டில் இருந்தாலே வீட்டுக்கு ஒரு தனிப் பிரகாசம் வந்துவிடுகிறது.

இந்தத் துர்வாசருக்கு மட்டும் இந்த உண்மை புரியவில்லையே. அருணா எவ்வளவு அன்பாகப் பழகியும், அவர் அதை உதாசீனம் செய்து விட்டாரே. அவர் சரியாக முகம் கொடுத்துப் பேசா விட்டாலும் அருணா எவ்வளவு கனிவாக அவருடன் பழகினாள்! வெளியே காட்டிக்கொள்ளா விட்டாலும், உள்ளுக்குள் அவள் மனம் வேதனைப் பட்டிருக்காதா?



ஒரு சந்தர்ப்பத்தில் காசிநாதர் தம் நெஞ்

தில் குத்தியிருந்த முள்ளை எடுத்து அருணாவை ஒரு மெல்லிய கீறல் கீறிவிட்டார்.

''என்ன அருணா, மாப்பிள்ளை பிடிக்கத்தான் மெடிகல் கல்லூரிக்குப் போகிறாயா?''

''மாமா கடவுள் எனக்கிட்ட பிச்சை இது. இதை என்னாலேயே தடுக்க முடியாது. நான் என்ன செய்வேன்?''

அசந்து போனார் காசிநாதர். என்ன மாய்ப் பேசிவிட்டாள் அருணா?

ஒரு மாதம் ஓடிவிட்டது.

மங்கையர்க்கரசி வாயெல்லாம் பல்லாக ஒரு கடிதத்தைத் தூக்கிக் கொண்டு வந்தாள். ''இதைக் கேட்டீர்களா? தம்பிக்கு ஸ்கொலர்ஷிப் கிடைத்திருக்காம். நியூரோ சேர்ஜரியில் ஸ்பெஷலைஸ் பண்ணுவதற்காக அமெரிக்கா போகிறானும். எல்லாப் புகழும் மாமாவுக்கே என்று அருணா எழுதியிருக்கிறாள். பெற்றெடுத்த எனக்குக் கூட அதில் பங்கு தரவில்லை.''

காசிநாதர் பேச முயன்றார். வார்த்தைகள் ஒழுங்காக வெளிவரவில்லை. நாக்குத் தழுதழுத்தது. மங்கையர்க்கரசி துடித்துப் போனாள். பரலிட்டிக் ஸ்ட்ரோக்கின் அறிகுறியல்லவா இது! டொக்டர் நல்லையாவுக்குப் போன் செய்ய வேண்டும். பக்கத்து வீட்டுக்குப் பாய்ந்தாள் மங்கையர்க்கரசி.

டொக்டரின் பரிசோதனை முடிந்தது.

''நல்லவேளை நீங்கள் உடனே போன் செய்தது. இது நியூரோவிஸில் ஆரம்பம். உடனே இவரை நீங்கள் கொழும்புக்குக் கொண்டுபோவதுதான் நல்லது. கொழும்பு ஆஸ்பத்திரியில்தான் இதற்கு வேண்டிய சிகிச்சையை ஒழுங்காகச் செய்வார்கள்.''

போர்ட் ஸ்டேஷனில் அருணா நின்று கொண்டிருந்தாள். அவள் ஹாண்ட் பாக்கில் மங்கையர்க்கரசி அனுப்பிய தந்தி இருந்தது.

''ஹஸ்பண்ட் நீட்ஸ் அட்மிஷன் ஜெனரல் ஹொஸ்பிட்டல். அரைவிங் மண்டே மோர்னிங். மீட் ஸ்டேஷன். மங்கையர்க்கரசி.''

முதல் வகுப்புப் பெட்டியிலிருந்து இறங்கிய காசிநாதர் தம்பதிகளைக் கண்டதும் அருணா ஓடிச் சென்று அவர்களின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். புதிதாக வாங்கியிருந்த பியட் கார் அவர்களை ஏற்றிக் கொண்டு கொழும்பு வீதியில் நெளியும் வாகனக் கும்பலில் கலந்தது.

''மூந்தாநாள்தான் அவர் அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார். பரவாயில்லை, ஜெனரல் ஹொஸ்பிட்டலில் ஸ்பெஷலிஸ்ட் இருக்கிறார்கள். ஒன்றும் பயப்படத் தேவையில்லை.''

மங்கையர்க்கரசியின் கண்கள் கலங்கின.

''மாமா! நீங்கள் முன்பொரு முறை ரேடியோவில் 'இறைத் தத்துவம்' பற்றிப் பேசிய பேச்சை மீண்டும் 'ஞான விளக்கில்' ஒலி பரப்பினார்கள். எவ்வளவு ஆழமான பேச்சு. நான் அதை மிகவும் ரசித்தேன்.''

காசிநாதர் மலங்க விழித்தார். சிறு குழந்தை போல் கார் ரேடியோவைப் போடப் போனார்.

''அவருக்கு ஞாபக சக்தி குறைந்திருக்கிறது அருணா. மூளையில் ஏதோ பாதிப்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று டொக்டர் நல்லையா சொன்னார்.''

அருணாவின் நெஞ்சம் துணுக்குற்றது. என்றாலும் அவள் அதை வெளிக் காட்டிக் கொள்ளவில்லை.

காலை உணவருந்தியதும் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டார்கள்.

பலவிதமான பரிசோதனைகளின் பின் டொக்டர் ஜேம்ஸ் அருணாவைப் பார்த்தார். ''இந்தக் கேஸ் கொஞ்சம் சீரியஸாகத்தான் இருக்கிறது. வார்டில் வைத்துத்தான் சிகிச்சை செய்ய வேண்டும். என்ன டாக்டர் அருணா உங்களுக்கு அதில் சிரமம் இல்லையே?''

''பிளீஸ் டொக்டர்.. வார்டில் கூட நிற்பதற்கு யாரும் இல்லை. நான் அவரை வீட்டிலேயே வைத்துக் கொள்கிறேன். தேவையான மருந்துகளை எழுதித் தாருங்கள். அவற்றை நானே கொடுக்கிறேன்.

அன்று முதல் அருணாவின் வீடு வார்டானது. டொக்டர் அருணா நர்ஸ் ஆனாள். காசிநாதரும் மங்கையர்க்கரசியும் ஒரு பிரைவேட் நர்ஸிங் ஹோமில் இருப்பதைப் போல் சகல வசதிகளையும் அனுபவித்தார்கள்.

ஆஸ்பத்திரியிலிருந்து களைத்து வரும் அருணா கொஞ்சம் கூடச் சலித்துக்கொள்ளாமல் மாமனாருக்குப் பணிவிடை செய்தாள். வேலைக்காரர்கள், சமையற்காரர்கள், கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று நின்றார்கள். ஒரு மாதம் ஓடிவிட்டது.


கிளினிக்கில் காசிநாதரைப் பரிசோதித்த டொக்டர் ஜேம்ஸ் ''இன்னும் மூன்று மாதங்களுக்குச் சிகிச்சை தொடரவேண்டும். அவசியம் ஏற்பட்டால் ஒரு நியூரோ சேர்ஜிக்கல் ஆப்பரேஷன் செய்ய நேரிடலாம்'' என்று அருணாவிடம் தனியாகக் கூறினார். அருணா கொஞ்சமும் கலங்கவில்லை.

''மூன்று மாதங்கள் என்ன மூன்று வருடங்கள் ஆனாலும் பரவாயில்லை. இனிமேல் அவர் என் குழந்தை.''

காசிநாதன் மன ஆழத்தில் சில மயக்கங்கள் முன்பு இருந்தன. ஆனால் இப்போது அவை இல்லை. இப்போது அவர் ஒரு குழந்தை!

அவன்: ''அசப்பில் பார்த்தா நம்ம லேடி டைப்பிஸ்ட்டின் முகம் ஹேமமாலினியின் முகம் மாதிரியே இருக்கு!''

இவன்: ''அதுக்காக உன் முகம் தர்மேந்திராவின் முகம் மாதிரி இருக்கிறதா நீயே கற்பனை பண்ணிக்கிட்டு அடிக்கடி அவளிடம் போய் இளித்துப் பேசறது நல்லாயில்லே!'' - உ. ராஜாஜி





புதியது! DUNLOP
G.180 NYLON
அதிக பட்ச கேஸிங்
பயனை உறுதியாக
அளிக்கும் மிகவும் நம்பக்கூடிய
தன்மையுள்ள கேஸிங்
உன்னத இயக்கத்திற்கு அசல் டன்லப் புடில் ட்யூபுகள் மற்றும் ஃப்ளாபுகளை உபயோகியுங்கள். அத்துடன் குறைந்த பட்ச நீளும்தன்மை அதிகபட்ச ஆயுளுக்கு டன்லப் மாக்ஸ் லைஃப் பாலிபெஸ்டர் கார்ட் ஃபான் பெல்ட் உபயோகியுங்கள்.
DUNLOP
சிறந்ததை வாங்கிடுவீர், வாங்கிடுவீர் டன்லப் டயர்ஸ்
DT/CAS-3/80 TAM

கரூர் வைஸ்யா பாங்கில் எனது சேமிப்பு



எனது மகளின் திருமணம் தகுந்த காலத்தில் நடைபெறவும், பாதுகாப்பான எதிர் காலத்திற்கும் நான் கரூர் வைஸ்யா பாங்கில் உள்ள பல சிறப்புச் சேமிப்புத் திட்டங் களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, சேமித்து மன மகிழ்ச்சியுடன் இருக்கிறேன்.

மேலும் நான் சேமித்த சிறிய தொகை இன்று கணிசமான தொகையாக வளர்ந்து என் மகனின் மேற்படிப்பிற்கும் உதவி வருகிறது.

உங்களது அருகாமையிலுள்ள எமது கிளை நிர்வாகியுடன் தொடர்பு கொள்ளவும். உங்களது தேவைக்கேற்ற ஒரு சேமிப்புத் திட்டத்தை தேர்ந்தெடுக்க அவர் உதவிடுவார்.

கரூர் வைஸ்யா பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: கரூர்-639 001

கே.வி. ராகவாச்சாரி
சேர்மன்.

அன்னியச் செலாவணியில்
வர்த்தகம் செய்ய
அங்கீகாரம் பெற்றவர்கள்.



அத்தியாயம் 19

They are all gone into the world of light,
And I alone sit lingering here;
Their very memory is fair and bright,
And my sad thoughts doth clear.
- Henry Vaughan - 1622-1695

உஷாவின் தீட்சண்யமான தூண்டுதலுக்கு முன், கல்யாணி சகிப்புத் தன்மையின் எல்லையைக் கடந்து விரட்டப்பட்டு, சுய கட்டுப்பாட்டை முற்றிலும் இழந்தாள்.

''என்ன... என்ன... அவர் உன் அப்பாமா! உன்னைப் பெத்த தகப்பனாமா!''

உரத்த குரலில் இப்படிக் கத்திவிட்டு, கல்யாணி முழுமையாக உடைந்து போனாள். கட்டிலின் மீது விழுந்து, அடிவயிற்றிலிருந்து எழும்பி வந்த கதறல்களால் உடல் முழுதும் அதிர; விம்மி, விம்மி அழத் தொடங்கினாள்.

சிலை போல உஷா அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். ஒரு கணம் உலகமே நின்றுவிட்ட மாதிரி ஒரு பிரமை உண்டாயது. ஒரு விநாடி அவள் மூச்சே நின்றுவிடும்போலிருந்தது.

இந்தப் பெருத்த அதிர்ச்சியை ஒரேயடியாக அவளால் உட்கிரகித்துக் கொள்ள முடியவில்லை.

உஷாவின் குரல் வெளிவந்ததும், யாரோ அவள் கழுத்தை நெரித்துப் பிடித்திருந்த மாதிரி அவள் குரல் சங்கடமாக ஒலித்தது. ''அம்மா... இப்ப நீங்க சொன்னீங்களே... அது பொய்தானே? உண்மையில்லேன்னு சொல்லுங்கம்மா! ராஜீவைக் கண்டால் உங்களுக்கு ஆகாது... அவர் மேலே உங்களுக்கு ஏதோ வெறுப்பு... எப்படியாவது அவரை நான் கல்யாணம் பண்ணிக்கிறதைத் தடுத்து நிறுத்தணும்கிறதுக்காக இப்படி ஒரு குரூரமான பொய்யைச் சொன்னீங்க... அப்படித்தானே? சொல்லுங்கம்மா... நீங்க இப்பச் சொன்னது பொய்தானே?'' பரிதாபமாகக் கெஞ்சிக் கேட்டாள் உஷா.

''இல்லே உஷா: இப்படிப்பட்ட விஷயத்திலே பொய் சொல்லுவேன்னு நம்பறியா? இது பொய் இல்லேம்மா, உண்மை.''

''ஆனா, இது எப்படி உண்மையா இருக்க முடியும்?'' — உரத்த குரலில் கதறினாள் உஷா. ''எங்க அப்பா செத்துப் போயிட்டார்னு நீங்கதானே சொன்னீங்க! நான் பிறந்த சில மாதங்களுக்குள்ளே அவர் இறந்து போயிட்டதாகச் சொன்னீங்களே? எங்க அப்பா உயிரோட இருக்காருன்னு! நீங்க ஏன் விதவைக் கோலத்தில் இருக்கீங்க, எனக்கு ஒண்ணுமே புரியலியே! அப்படீன்னா நீங்க என்னைப் பெத்த அம்மா இல்லையா? வேறு ஒரு தாய்க்குப் பிறந்தவளா நான்?''

பெருமூச்சு இரைத்துக் கல்யாணி தனது தலையை அசைத்தாள். ''இல்லே உஷா. நீ எனக்குப் பிறந்தவள்தான்.''

''ஆனா.... அவர் மனைவியின் பெயர் கமலான்னு சொன்னாரே....''

''என் உண்மையான பெயர் கமலா. இருபது வருடங்களுக்கு முன்னாலே அவரைக் கல்யாணம் செய்துக்கிட்டேன். அப்புறமா அவரைவிவாகரத்துச்செய்துட்டேன். விவாகரத்துக்கு அப்புறம், சட்டப்பூர்வமா என் பெயரைக் கல்யாணின்னு மாத்திக்கிட்டேன்.''

''ஆனா...ஆனா... பள்ளிக்கூடத்திலேயும், காலேஜிலேயும் என்னை அட்மிட் பண்ணும்போது எங்க அப்பாவுடைய பெயர் பிரகாஷ்னுதானே கொடுத்திருக்கீங்க...'' அடித்துக்கொண்டு போகும் ஆழமான வெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருப்பவன், ஒரு சிறு துரும்பு அகப்பட்டால் கூட, அதனால் தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமா என்ற பைத்தியக்காரத்தனமான ஆசையில், அதைப் பற்றிக் கொள்வது போல், உஷா உண்மையை ஏற்றுக் கொள்ள விருப்பமில்லாமல் இப்படிக் கேட்டாள்.

'அவருடைய உண்மையான பெயர் பிரகாஷ். நடிகர் ஆனதும் அவர் வைச்சுக்கிட்ட பெயர்தான் ராஜீவ் குமார்.''

உஷாவின் தலை சுற்றியது. அவளிடம் தனது கடந்த கால வாழ்க்கையைப் பற்றி அத்தனை விவரமாக எடுத்துக் கூறிய ராஜீவ், தனது உண்மையான பெயர் பிரகாஷ் என்பதை மட்டும் சொல்ல மறந்து விட்டாரே! சொல்லியிருந்தால் மட்டும், இந்தப்பயங்கரமான உண்மையை அவளால் எப்படி யூகித்திருக்க முடியும்? உலகில் ஆயிரம் பிரகாஷ்கள் இல்லையா?

''அம்மா! எனக்கு ஒண்ணுமே விளங்கலே! அது உண்மையானு, எங்க அப்பா இறந்து போயிட்டதாக ஏன் எல்லோர் கிட்டேயும் சொன்னீங்க? இத்தனை வருஷங்களாக ஏன் விதவையா வேஷம் போட்டீங்க? என்னைப் பெத்த அப்பா உயிரோட தான் இருக்கார்ன்னு ஏன் எங்கிட்ட சொல்லவே இல்லே?''

''உஷா... நான் உனக்குப் பெரிய அநீதி இழைச்சுட்டேன். மன்னிக்க முடியாத குற்றத்தைச் செய்துட்டேன். அத்தனை வருஷங்களுக்கு முன்னாலே நான் எடுத்த முடிவுக்கு இன்னைக்கு இப்படி யொரு விளைவு உண்டாகும்னு என்னாலே எதிர்பார்க்க முடிஞ்சிருந்தா நான் அப்படி நடந்துக்கிட்டே இருந்திருக்க மாட்டேன். ஆனா... இப்படியெல்லாம் நடக்கும்னு நான் கனவிலேயும் நினைச்சிருக்க முடியுமா?''

தனது கடந்த கால வாழ்க்கையைப் பற்றி விவரிக்க ஆரம்பித்தாள் கல்யாணி. ராஜீவைப் பிரிந்து கிராமம் திரும்பும்வரை, எல்லாமே ஏற்கனவே ராஜீவ் உஷாவிடம் சொல்லி யிருந்த அதே விவரங்களைத்தான் சொன்னாள். அதெல்லாம் முன்பே உஷாவுக்குத் தெரிந்த விவரங்கள்தான். ஆனால் அதன் பிறகு....

''விவாக ரத்துக் கோரி கோர்ட்டிலே விண்ணப்பிக்கும்படி என் வக்கீல் கிட்டச் சொன்னேன். கிராமத்துக்குத் திரும்பின பிறகு தான், நான் கர்ப்பமா யிருந்தது எனக்கே தெரிய வந்தது. இருந்தாலும் நான் என் முடிவை மாத்திக்க விரும்பலே. எப்படியும ஆண் வாடையே இல்லாமே தனியா வாழணும்னு தீர்மானிச்சேன்.

''விவாகரத்து முடியறதுக்கு இன்னும் ஒண்ணரை வருஷம் ஆகும்னு வக்கீல் சொன்னார். பரவாயில்லே. நடக்க வேண்டியதைக் கவனியுங்கன்னு சொன்னேன். அதுக்கப்புறம் பிரகாஷ் என்னைப் பார்க்க மறுபடி முயற்சி செய்யலே. நான் கர்ப்பமா இருக்கிறது அவருக்குத் தெரிஞ்சா, எங்கே மறுபடியும் வந்து என்னைத் தொந்தரவு செய்வாரோன்னு பயந்தேன். குழந்தை பிறக்கப் போகுதுன்னு அவருக்குத் தெரிஞ்சா, விவாகரத்துக்குச் சம்மதிக்க மாட்டாரோன்னுகூடப் பயந்தேன். அதனாலே இந்த விஷயத்தையே பிரகாஷ் கிட்ட இருந்து மறைச்சுட்டேன். தனக்கு ஒரு மகள் இருக்காங்கிற உண்மை இன்னி வரைக்கும் அவருக்குத் தெரியாது.

''நீ பிறந்தே. அதுக்கப்புறம் விவாகரத்தும் ஆயிடுச்சு. நான் விடுதலை அடைஞ்சுட்டேன்!

''ஆனா, நீ பிறந்ததும், உன் முகத்தைப் பார்த்ததும், நான் உன்னை என் கைகளிலே எடுத்துக்கிட்ட உடனே நான் நினைச்சிருந்தது எவ்வளவு தவறுன்னு எனக்கே புரிஞ்சது. உன் மேலே எனக்கு ஏற்பட்ட பாசம் அன்பு அதுவரைக்கும்வேறே யார் மேலேயும் எனக்கு ஏற்பட்டதில்லே. இப்படியும் என்னாலே ஒருத்தரை நேசிக்க முடியும்னு அப்போதுதான் நானே உணர்ந்தேன். நீயே என் உலகம் ஆயிட்டே. இனி உனக்காகவே வாழணும்னு தீர்மானிச்சேன்.

''அருப்புக்கோட்டையிலே எனக்கு விவாகரத்து ஆனதைப் பத்தி யார் கிட்டயும் நான் சொல்லலே. இருந்தாலும், நீ பிறந்ததும், தொடர்ந்து கணவரைப் பிரிஞ்சு நான் வாழறதைக் கண்டு, ஊர் ஜனங்க மனசுலே பல சந்தேகங்கள் உண்டாயிட்டது. பல சந்தேகமான கேள்விகளைக் குடைஞ்சுகுடைஞ்சு கேட்டுக்கிட்டே இருந்தாங்க.

''இதிலிருந்து எல்லாம் தப்பிச்சுக்கிட்டு, உன்கூட நிம்மதியா வாழணும்னு நினைச்சேன். அருப்புக்கோட்டையிலே இருந்த வீடு, நிலம் எல்லாத்தையும் வித்துட்டு, இங்கே ஸ்ரீரங்கத்துக்கு வந்துட்டேன். இந்த வீட்டைக் கட்டினேன். இங்கே நிலத்தை வாங்கிப் போட்டேன்.

''இங்கே யாருக்குமே என்னைத்தெரியாது. சம்பந்தங்களையும் துண்டிச்சுக்க விரும்பினேன். என் பெயரைச் சட்டபூர்வமா கல்யாணின்னு மாத்திக்கிட்டேன். புதுசா வாங்கின சொத்துக்களை அந்தப் பெயருக்கே மாத்திட்டேன். இங்கே நான் பூவும் பொட்டோடவும் இருந்தா, மறுபடியும் சுத்தி இருக்கிறவங்க என்னைப்பத்திப் பல கேள்விகள் கேட்டிருப்பாங்க. இவகணவன் எங்கே, இவ ஏன் குழந்தையோட தனியா வாழ்ந்துக்கிட்டிருக்கா—இப்படிப்பட்ட கேள்விகளை நிச்சயம் சமாளிக்க வேண்டியிருக்கும்.

''அதனாலே, ஒரேயடியா, நான் ஒரு விதவைன்னு சொல்லிக்கிட்டு, எந்தக் கேள்வியும் எழறதுக்கு இடமே இல்லாமே செய்துட்டேன். விதவை மாதிரியே பூவும் பொட்டும் இல்லாமே, வெள்ளை ஆடையை உடுத்த ஆரம்பிச்சேன். என் மனசுக்கு இது தவறாப் படலே.

''உன்னை ஆசையா, அருமையா வளர்க்கிறதிலே என் வாழ்க்கையைஅர்ப் பணிச்சிட்டேன். அப்புறமா பத்திரிகைகள் மூலமா அவர் தன்னுடைய பெயரை ராஜீவ் குமாராக மாத்திக்கிட்டுச் சினிமா நடிகரா பிரபலமடைஞ்சதைப் பத்தித் தெரிஞ்

கண்ணதாசன்
எழுதும்
மனவாசம்

கல்கி
நவம்பர் 9
தீபாவளி
சிறப்பிதழில்
ஆரம்பம்

கக்கிட்டேன். அதைப் பற்றி நான் கவலையே படலே.

''அவருக்கும் எனக்கும் சம்பந்தம் இருந்ததாக இங்கே யாருமே யூகித்துப் பார்த்திருக்க முடியாது. நான் உன்கிட்ட இருந்தும் உண்மையை மறைச்சுட்டேன். நீ உங்க அப்பாவைப் பத்திக் கேட்கும்போதெல்லாம் இவர்தான் உங்கப்பாங்கிற உண்மையைச் சொல்ல வேண்டிய அவசியமில்லேன்னு நினைச்சுட்டேன். எவ்வளவு பெரிய தவறைச் செய்துட்டேன்!

''நீ காலேஜ் படிப்புக்காக மெட்ராஸ் போறதிலே எனக்குத் துளியும் இஷ்டம் இருக்கலே. ஆனா பிடிவாதமா இருந்தே. சரி, மெட்ராஸுக்குப் போனாலும் கூட, உங்க அப்பாவைச் சந்திக்கிறதுக்கு வாய்ப்பு எங்கே இருக்கப் போகுதுன்னு நினைச்சேன்.

''விதி உங்க ரெண்டு பேரையும் இப்படிச் சேர்த்து வைக்கும்னு நான் எப்படி உஷா எதிர்பார்த்திருக்க முடியும்? தன் வினை தன்னையே சுடும் என்கிற மாதிரி, நான் செய்த தவறுதான் இந்த விபரீதத்துக்குக் காரணம். உண்மையான குற்றவாளி நான்தான்.

''உஷா, என் கண்ணே! என்னை மன்னிச்சிடும்மா, என்னை மன்னிச்சிடு! இதுக்கெல்லாம் காரணம் நான்தான்! உன்னாலே என்னை மன்னிக்க முடியுமாம்மா?''

கெஞ்சுகின்ற பாவனையோடு கல்யாணி தனது இரு கரங்களையும் நீட்டினாள்.

மிகவும் தாழ்ந்த குரலில், ''அம்மா, என்னைத் தனியா இருக்க விடுங்க ப்ளீஸ்!'' என்றாள் உஷா.

''உஷா!....'' மகள் அருகில் சென்று அவள் தோள் மீது கல்யாணி ஒரு கையை வைக்கப் போனாள்.

சடாரென்று சுடு பட்டவள் போல உஷா பின்வாங்கினாள். தன்னைத் தொட அனுமதிக்கவில்லை. ''ப்ளீஸ்! அம்மா...என்னைத் தனியா இருக்க விடுங்க'' என்றாள் மீண்டும்.

தோல்வியுற்றவள் போல், சோர்ந்த நடையுடன் கல்யாணி உஷாவின் அறையை விட்டு, தனது சொந்த அறைக்குள் சென்றாள்.

அன்று முழுவதும் உஷாவும், கல்யாணியும் அவரவர் தனி அறைக்குள், உள்ளிருந்து தாழ் போட்டுக் கொண்டு, தனியாக இருந்தனர்.

கல்யாணி தன்னைத் தானே நொந்து கொண்டாள். ''நான் ரொம்பக் கெட்டிக்காரின்னு பெருமைப்பட்டுக்கிட்டேன். ரொம்பவும் புத்திசாலித்தனமாக நடந்துக்கிட்டதா நினைச்சேன். நான் ஒரு பாவி! ஒரு முட்டாள்! என் கண்மூடித்தனத்தாலே, என் பிடிவாதத்தினாலே, என் உயிருக்கு உயிரான ஒரே மகளுடைய வாழ்க்கையை நானே பாழாக்கிட்டேனே...!''

உஷா ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிப் போயிருந்தாள்.

''ராஜீவ்... எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், உங்களை நினைக்கும்போது, 'ராஜீவ்'னுதான் அழைக்க வர்றதே தவிர, 'அப்பா'ன்னு என்னாலே மனசுக்குள்ளே கூட உங்களை அழைக்க முடியலையே!

கிருபானந்தவாரியார்
வழங்கும் அருளுரைகள்
தீபமங்களஜோதி
கல்கி
நவம்பர் 9உ
தீபாவளி
சிறப்பிதழில்
ஆரம்பம்


''ராஜீவ் நமக்குள்ளே ஏற்பட்ட பந்தம் அபூர்வமானது. ஆனால், தந்தை — மகள் என்கிற உறவின் கைதிகள் ஆகிவிட்டோமே!

''நான் ஊருக்குப் புறப்படும்போது ''நம்ம குழந்தையைப் பத்திரமாப் பார்த்துக்க'ன்னு சொன்னீங்களே! நம்ம குழந்தை! இது பிறக்க முடியாத, பிறக்கக் கூடாத 'குழந்தையாப் போயிடுச்சே!''

இரண்டு பேருடைய அறைக் கதவுகளின் மீது தட்டி, ''சாப்பிட வர்றீங்களாம்மா?'' எனக் கேட்டாள் தங்கம். கதவைத் திறவாமலே இருவரும் ''வேண்டாம்'' என்று மறுத்து விட்டனர்.

நாள் முழுவதும் இருவரும் அவரவர் அறைகளை விட்டு வெளியே வரவேயில்லை.

வழக்கம்போல் தங்கம் சமையற் கட்டிலும், பழனியப்பா முன் வராந்தாவிலும் படுத்து உறங்கி விட்டார்கள்.

காலையில் கண் விழித்துப் பார்த்தால் உஷாவை எங்கேயும் காணவில்லை. பதறிப்போய், ''எல்லா இடத்திலும் தேடிப் பாருங்க!'' என்று கதறினாள் கல்யாணி.

கடைசியில், வீட்டுக்குப் பின்புறத்தில் இருந்த கிணற்றில், உஷாவின் பிணத்தைக் கண்டுபிடித்தார்கள்.

உஷாவுக்கு வாக்களித்திருந்தபடி. சரியாகக் குறிப்பிட்ட தேதி ராஜீவ் ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தான். உஷா அவனுக்கு அளித்திருந்த கல்யாணி அம்மாளின் விலாசத்தைக் கண்டு பிடித்து, தானே காரை ஓட்டிக் கொண்டு கேட்டுக்குள் நுழைந்தான்.

வீடு வெறிச்சோடிக் கிடந்த மாதிரி தோன்றியது. காரின் சப்தத்தைக் கேட்டவுடன் உஷா அவனை வரவேற்க வெளியே வருவாளென்று எதிர்பார்த்திருந்தான். யாருமே வரவில்லை.

வீட்டு வாசலில் காரை நிறுத்திவிட்டு இறங்கி உள்ளே சென்றான். வாசற்படியைத் தாண்டியவுடன் அவன் கண்களைத் தாக்கிய காட்சி அவனைக் கதிகலங்கச் செய்துவிட்டது.

அதோ, அவனுக்கு எதிரில், உஷாவின் பெரிய பிரேம் போட்ட உருவப் படம் தெரிந்தது. படத்தின் மீது மலர் மாலை. அதற்கு முன்னால், தரையில் ஓர் ஒற்றை அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

விளக்கின் அருகே, தரையில் ஒரு நடுத்தர வயதுப் பெண் உட்கார்ந்திருந்தாள்.

ராஜீவின் கால் நடை ஓசையைக் கேட்டதும், கல்யாணி குனிந்திருந்த தனது தலையை நிமிர்த்தி யார் வந்திருக்கிறார்கள் எனப் பார்த்தாள்.

ராஜீவும் கல்யாணியும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்ட மறு கணமே, ஒருவரை யொருவர் உடனே அடையாளம் கண்டு கொண்டு விட்டனர்.

ஒரு நிமிஷம் ராஜீவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

''கமலா! நீயா! நீ எப்படி.... இங்கே?''

ஒரு கையால் கல்யாணி உஷாவின் படத்தைக் காண்பித்தாள். ''நான் அவளுடைய அம்மா.''

ராஜீவ் திகைத்துப் போனான்.

''என்ன. அவளுடைய அம்மாவா? அப்படீன்னு... உஷா....''

''உங்க மகள்தான். உங்க மகளா இருந்தான்னு சொல்லணும். இப்ப அவள் இல்லே. செத்துப்போயிட்டா... தற்கொலை...கிணத்திலே குதிச்சிட்டா. நான் சொல்லித்தான் நீங்க காரணத்தைத் தெரிஞ்சுக்கணுமா என்ன?'' ஜீவனில்லாத வறண்டுபோன குரலில் ஏதோ பாடத்தை ஒப்பிப்பது போல் பேசினாள் கல்யாணி. ராஜீவ் அதிர்ந்து போனான். அப்படியே மலைப்பில் சில நிமிஷங்கள் மௌனமாக அவளையே வெறித்துப் பார்த்தான். பேசும் வலிமையை மீண்டும் பெறச் சிறிது நேரம் ஆயிற்று.

''ஆமா...ஆமா... நமக்கு ஒரு குழந்தை இருக்கிறதாவே எனக்குத் தெரியாதே! அப்படீன்னு என்னை விட்டுப் பிரியும்போதே நீ கர்ப்பமா இருந்திருக்கணும்! இதைப் பத்தி ஏன் என்கிட்டச் சொல்லவேயில்லே?'' தாள முடியாத ஆத்திரத்தினால், துக்கத்தினால், அதிர்ச்சியினால் அவன் உடல் முழுவதுமே துடித்து நடுங்கிக் கொண்டிருந்தது. திடீரென்று மின்சாரம் பாய்ந்தது போல் கல்யாணி உயிர் பெற்றாள். வெறுப்பால் கனல் கக்கும் கண்கள் பளிச்சிட, சடாரென்று எழுந்து நின்றாள்.

''உங்களை மாதிரி ஓர் அப்பா இல்லாம இருக்கிறதே அவளுக்கு நல்லதுன்னு நினைச்சேன்! அதனாலேதான்! நான் யூகிச்சது கடைசியிலே சரின்னு நிரூபணம் ஆயிட்டதா இல்லையா? நீங்க நினைச்சிருந்தா வேறெஆயிரம் பெண்கள் உங்களுக்குக் கிடைச்சிருப்பாங்க! ஆமா...ஆமா...அழுக்குப் படிஞ்ச, காமவெறி பிடிச்ச உங்க கைகளிலேருந்து உங்க சொந்த மகளைக்கூடத் தப்பவிடலே இல்லே? அவளைக் கூட உங்களாலே விட்டு வைக்க முடியலே இல்லே?''

''வாயை மூடுடி பாவி!'' தனக்கு ஏற்பட்ட முழு ஆவேசத்தையும் வெளிப்படுத்தும் வகையில் உரக்கக் கத்தினான் ராஜீவ். ''அடி நாசக்காரி! பாதகி! பேசாதே! பேச உனக்கு என்னடி உரிமை இருக்கு? உஷா மேலே நான் வைச்சிருந்த அன்பை உன் அசிங்கம் பிடித்த நாவால் களங்கப்படுத்தப் பார்க்காதே! இந்த உலகத்திலே நான் யாரையாவது உண்மையா, ஆத்மார்த்தமா நேசிச்சேன்னு அது உஷாவைத்தான்.

''இந்த விபரீதத்துக்கு எல்லாம் யாருடி காரணம்? யோசிச்சுப் பார்! உஷா சாகக் காரணம் யார்? நீதான்! நீ ஒரு .... ஒரு... கொலைகாரி.

''யோசிச்சுப் பாருடி! பழசை யெல்லாம் நினைச்சுப் பார்! எத்தனை தடவை திரும்பி வான்னு உன்னைக் கெஞ்சிக் கேட்டேன். உன் முகத்தைக்கூட எனக்குக் காட்ட மறுத்திட்டியே! அப்போதாவது நீ கர்ப்பமா இருந்த விஷயத்தை எனக்குத் தெரியப் படுத்தியிருந்தா — இப்படி யெல்லாம் இன்னிக்கு நடந்திருக்குமா? நீ கர்ப்பமா இருந்தேன்னு தெரிஞ்சுகூட விவாக ரத்துக்கு விண்ணப்பம் செய்தியே! என்ன நெஞ்சழுத்தம்டி உனக்கு!

''நான் ஒரு தகப்பன் ஆகப் போகிறேங்கிற உண்மையை என்கிட்ட இருந்து மறைக்க உனக்கு என்ன உரிமை இருந்தது? அந்த உண்மை மட்டும் அப்போ எனக்குத் தெரிஞ்சிருந்தா, நான் டைவோர்ஸுக்குச் சம்மதிச்சே இருக்க மாட்டேனே! குழந்தையின் எதிர்காலத்தை நினைச்சு, அதுக்காக, உன் தலை முடியைப் பிடிச்சாவது தரதரன்னு உன்னைத் திரும்ப இழுத்துக்கிட்டு வந்திருப்பேனே!

''அப்படிச் செய்வேன்னு பயந்து, அதனாலேதானே விஷயத்தை என்கிட்டேயிருந்து மறைச்சே! அடி சுயநலக்காரப் பேயே நீயும் ஒரு பெண்ணா! எனக்கு ஒரு குழந்தை இருக்காங்கிற விஷயத்தையே எனக்குத் தெரியப் படுத்தாம இருக்க உனக்கு எப்படி மனசு வந்தது? அப்படிச்செய்ய உனக்கு என்ன உரிமை இருந்தது? ஏன், அவள் உனக்கே சொந்தமா? எனக்கு மட்டும் சொந்தமில்லையா?

''சரி, அப்புறமா நீ எங்கே இருந்தேன்னு எனக்குத்தான் தெரியலே. ஆனநடிகனா பிரபலமானதும், நிச்சயமா நீ என்னைப் பத்திக் கேள்விப் பட்டிருப்பியே? நான் எங்கே இருக்கேன்னு உனக்குத் தெரிஞ்சிருக்கணுமே? அப்போதாவது என் கிட்ட உண்மையை சொன்னியா? நான்தான் அவளுடைய அப்பாங்கிற உண்மையை உஷா கிட்டச் சொன்னியா? இல்லே!

''இந்தக் கொடுமைக்கெல்லாம் யாருடி காரணம்? பதில் சொல்லுடி நாசகாரி! தன்னுடைய அப்பா இறந்து போயிட்டதாக நம்பிக்கிட்டு இருந்த உஷாவா? எனக்கு ஒரு மகள் இருக்காங்கிற விவரமே தெரியாத


ம.பொ.சி வழங்கும்
பாட்டுக்கொரு புலவன்
கல்கி நவம்பர் 9
தீபாவளி
சிறப்பிதழில் ஆரம்பம்



இரவில் வேகமாகச் சென்று கொண்டிருந்த ஸ்கூட்டரைப் போலீஸ்காரர் விசில் அடித்து நிறுத்தி, ''ஏன் சார்! பின்னால் டேஞ்சர் லைட் இல்லாமல் போகலாமா?'' எனக் கேட்டார். ஸ்கூட்டரை ஓட்டி வந்தவர் பின்னால் திரும்பிப் பார்த்து விட்டுக் கேவி, கேவி அழுதார். போலீஸ்காரர், ''பரவாயில்லை இனிமேல் இப்படி செய்யாதீர்கள். இம்முறை மன்னித்து விடுகிறேன்'' என்றார். ஸ்கூட்டர் ஓட்டி ''அதற்காக நான் அழவில்லை. பின் ஸீட்டில் இருந்த என் மனைவியைக் காணோமே!'' என்றார். — சந்திரசேகர்

தானா? இல்லை... இல்லை... இத்தனைக்கும் காரணம் நீ! நீ! நீயேதான்! உன்னைத் தவிர வேறே யாரும் இதுக்குப் பொறுப்பில்லை! குற்றவாளி நீ மட்டும்தான்!

''உன்னுடைய அர்த்தமற்ற பிடிவாதம் எவ்வளவு பெரிய விபரீதத்துக்கு வழிவகுத்திருக்கு! இப்போ திருப்திதானே? என் வாழ்க்கையை எப்பவோ பாழாக்கிட்டே. உன் வாழ்க்கையையும் நீயே பாழாக்கிட்டே! அதெல்லாம் போதாதுன்னு பொக்கிஷமா யிருந்த நம்ம உஷாவினுடைய பூத்துக் குலுங்க வேண்டிய வாழ்க்கையை அடியோட பாழடிச்சிட்டியேம்மா!

''நீ செய்த இந்தப் பாவத்துக்குக் கடவுள் கூட உன்னை மன்னிக்க மாட்டார்! சாதிச்ச மகா சாதனையை நினைச்சு நினைச்சு ஆனந்தப்படு! திருப்திப்பட்டுக்கோ! நரகத்திலே கூட உனக்கு இடம் கிடைக்காது, ராட்சசப் பேயே!''

அத்துடன் திரும்பிக்கூடப் பார்க்காமல் ராஜீவ் அங்கிருந்து போய்விட்டான். கார் புறப்பட்டுப் போகும் சப்தம் கேட்டது. அப்படியே சுருண்டு கல்யாணி தரையில் விழுந்தாள். அவள்கண்கள் வெறுமையாக எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன.

இரண்டு நாட்கள் கழித்து எல்லா முக்கிய தினசரிகளிலும் திகைப்பூட்டும் செய்தி பிரசுரமாகியது.

''பிரபல திரைப்பட நடிகர் ராஜீவ் குமார் தற்கொலை! படுக்கை அறையில் செத்துக் கிடந்தார்!

''நேற்று முன் தினம் அவர் திருச்சிக்குப் பயணமானார். அன்றிரவே சென்னை திரும்பி விட்டார். திரும்பி வந்தது முதல் சோகமாகக் காணப்பட்டார் என்று கூறுகிறார் அவருடைய காரியதரிசி திரு சுரேஷ்.

''அன்று இரவே தனது வக்கீல் திரு என். ரங்கராஜனை வரவழைத்து, ராஜீவ் குமார் புதிய உயில் ஒன்றை உடனடியாகத் தயாரிக்க வேண்டுமென்று வற்புறுத்தினாராம். அப்பொழுதே புதிய உயில் தயாரிக்கப்பட்டு சாட்சிக் கையெழுத்தும் போடப்பட்டது.

''உயிலின்படி, ராஜீவ் குமார் தனக்குச் சொந்தமா யிருந்த தொழிற்சாலைகளை அத்தொழிற்சாலைகளின் ஊழியர்களுக்கே எழுதி வைத்திருக்கிறார். சென்னை அருகேயுள்ள ஒரு தோட்டத்தை அதனைக் காவல் காக்கும் தோட்டக்காரரர் கிருஷ்ணன் பேருக்கு எழுதி வைத்திருக்கிறார்.

''காரியதரிசி சுரேஷுக்கு ரூ. 5 லட்சம்; வீட்டில் உத்தியோகம் செய்து வந்தவேலையாட்களுக்குத் தலா ஒரு லட்சம் வழங்கப்பட வேண்டும் என்றும் உயிலில் குறிப்பிட்டுள்ளார். மற்றபடி சென்னையில் ராஜீவ் குமார் வசித்து வந்த பெரிய வீடு, அவருக்கிருந்த மற்ற ஏராளமான சொத்துக்கள் அனைத்தையும் மாநில அரசாங்கம் மேற்கொண்டு தர்ம காரியங்களுக்கும், பொது நலனுக்கும் அவை பயன்படுத்தப்பட வேண்டும் — இதுவே தனது இறுதி வேண்டுகோள் என்று ராஜீவ் குமார் உயிலில் குறிப்பிட்டிருக்கிறார்;

''நேற்று பிற்பகல் பன்னிரண்டு மணி ஆகியும் ராஜீவ் குமார் எழுந்திருக்கவில்லை. அவர் அறைக் கதவைத் தட்டியபோது பதில் ஏதும் வரவில்லை. மனத்தில் சந்தேகம் உண்டாகவே, காரியதரிசி சுரேஷும் வீட்டு வேலையாட்களும் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது, ராஜீவ் குமார் படுக்கையில் செத்துக் கிடந்தார்.

''சுரேஷ் உடனே போலீஸாருக்குத் தகவல் கொடுத்தார். ராஜீவ் குமாரின் உடல் பிரேத பரிசோதனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அளவுக்கு மீறித் தூக்க மாத்திரைகளை உட்கொண்டதால் ஏற்பட்ட மரணம் இது — சந்தேகமின்றி இது தற்கொலைதான் என்று போலீசார் கூறுகின்றனர்.

''புகழின் உச்சியில் நிலைத்திருந்து, வேறு எந்தத் தமிழ் நடிகரும் இதுவரை பெறாத வெற்றியும், புகழும், செல்வாக்கும், செல்வமும் ஒருங்கே பெற்றிருந்த ராஜீவ்குமார் திடீரென்று தற்கொலை செய்துகொள்ளக் காரணம் என்ன? இதுவே புரியாத புதிராக இருக்கிறது. காரியதரிசி சுரேஷும் இதர வேலைக்காரர்களும் எவ்வளவுதான் விசாரித்தும் தங்களுக்கு ஒன்றும் தெரியாதென்றே கூறுகின்றனர்.''

இரண்டு வாரங்கள் கழித்து, சென்னையில் கீழ்ப்பாக்கம் மனநோய் மருத்துவ மனைக்கு முன் ஓர் ஆம்புலன்ஸ் வந்து நின்றது.

வெள்ளை சீருடை அணிந்திருந்த உதவியாளர்கள் முதலில் இறங்கினார்கள். ஒரு நடுத்தர வயதுப் பெண்மணியைக் கீழே இறக்கி விட்டார்கள்.

இரு பக்கமும் கைத்தாங்கலாக உதவியாளர்கள் பற்றிக்கொள்ள, அவள் ஆஸ்பத்திரிக்குள் நடத்திச் செல்லப்பட்டாள்.

வாசலில் ஒரு கணம் அவள் நின்றாள். ஒரே முறை திரும்பிப் பார்த்தாள். இறுதி முறையாக கல்யாணி திரும்பி வெளி உலகத்தைப் பார்வையிட்டாள். அவள் கண்கள் அப்படியே, வெறுமையாக, வெறித்து, உயிரற்றவையாக ஒன்றும் புரியாமல் விழித்தன. வலுக்கட்டாயமாகக் கல்யாணியை உள்ளே கொண்டு சென்றனர்.

கதவுகள் அவளுக்குப் பின்னால் இழுத்து மூடப்பட்டன. உலகம் வெளியே தள்ளிப் பூட்டப்பட்டது. அவள் மனம் உள்ளே தள்ளிப் பூட்டப்பட்டிருந்தது. தாள முடியாத, சகித்துக் கொள்ள முடியாத நினைவுகளின் சுமையைத் தாங்கமாட்டாது, கல்யாணியின் மனம் பயங்கரமான யதார்த்தத்திலிருந்து விடுதலையை நாடி, தப்பித்து எங்கோ பறந்து சென்றுவிட்டது. (முற்றும்)



போட்டிக்கதை-8

"கூ....." — இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு பறந்தது அந்தச் சிற்றூரின் வழியே செல்லும் ஒரே எக்ஸ்பிரஸ் வண்டி.

ஜன்னலின் கர்ட்டனை விலக்கி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ரஜினி பெருமூச்செறிந்தான். பன்னிரண்டு மணி எக்ஸ்பிரஸ் கூடப் போய்விட்டது. தூக்கம் வரவில்லையே இன்னும்?

காலண்டரைப் பார்த்தான் ரஜினி. பிரஸாத் ஊருக்குப் போய் ஒரு வாரம்தான் ஆகிறதா? அதற்குள்ளேயே இவ்வளவு போரடிக்கிறதே. இன்னும் மூன்று வாரங்களைத் தள்ளியாக வேண்டுமே? சே! இப்படியா தூக்கம் வராமல் ஸ்டிரைக் பண்ணும்?

படுத்திருந்த ரஜினி படிக்கும விளக்கைப் போட்டுவிட்டு ஸைட் டேபிளில் இருந்த புத்தகத்தை எடுத்தான். இரண்டு வரிகூடப் படிக்கப் பிடிக்கவில்லை. ஆல்பத்தை எடுத்துப் புரட்டினான்.

திருமணப் புகைப்படங்கள். அதன் பின் அவர்கள் சென்ற பல இடங்கள், விமானப் படை விருந்துகளில் எடுத்த புகைப்படங்கள் ஒவ்வொன்றுடனும் தொடர்பான இனிய நினைவுகள்...

தீயைத் தொட்டு விட்டது போலச் சட்டென்று கையை இழுத்துக் கொண்டான் ரஜினி.

வழுவழுப்பான ரோஜா பூவைத் தடவிக் கொண்டிருந்தபோது திடீரென்று முள்குத்தி விட்டாற் போல்... சந்தோஷமான குடும்பப் படங்களுக்கிடையே இவன் போட்டோவா?

"டு டியர் பிரசாத். ப்ளைட் லெப்டினெண்ட் மித்ரா" என்று எழுதியிருந்த அந்தப் புகைப்படத்தை எடுத்துத் தனியாக வைத்துவிடலாம் என்று நினைத்த போது, "உனக்குக் குற்றமுள்ள நெஞ்சு" என்று மனச்சாட்சி உறுத்தியது. அது தவிர, பிரசாதும் மித்ராவும் நெருங்கிய நண்பர்கள். "அவன் போட்டோவை ஏன் தனியாக வைத்திருக்கிறாய்?" என்று பிரசாத் கேட்டால்? "ஓ.கே. மித்ரா! ஆல்பத்தில்தானே இருக்கிறாய். இருந்து விட்டுப் போ." ஆல்பத்தை மூடிவிட்டான் ரஜினி. வருடங்கள் இரண்டு பின்னோக்கிச் சென்றன.

• • •

ஒரு நாள் மாலை ஏழு மணி இருக்கும். ஆறுவது காப்பியை உறிஞ்சிக் கொண்டு

அறிமுக எழுத்தாளர்

பிறந்தது தமிழ்நாடு தஞ்சாவூர் மாவட்டம். பள்ளிப்படிப்பு அங்கேயே. கல்லூரி - எஸ். ஐ. இ. டி. மகளிர் கல்லூரியில் பி. எஸ்ஸி. நேஷனல் டிரெயினிங் கல்லூரியில் பி. டி. முடித்து, வேலை பார்த்தது பெஸன்ட் தியசாபிகல் உயர் நிலைப்பள்ளியில். 1975ம் ஆண்டு திருமணம் பிளேட் லெப்டினண்ட் பி. சிவகுமார் என்பவருடன். நான்கு வயதில் ஒரு மகள் உண்டு. இந்தியாவின் வடக்கிலும் கிழக்கிலும் பல இடங்களில் வசித்திருக்கிறேன்.

பொழுது போக்கு: பலவகையான புத்தகங்களைப் படிப்பது; வீணை வாசிக்கத் தெரியும். ஆயில் பெயின்டிங்கில் ஆர்வம் உண்டு.

கோமதி சிவகுமார்



கடந்து செல்லும் நினைவுகள்

'ஷிவா'

'ஸன்டே'யைப் புரட்டிக் கொண்டிருந்த ரஜ்னி காலிங் பெல் ஒலி கேட்டு எழுந்தாள்.

''குட் ஈவினிங் மேடம்.''

''ஓ! குட் ஈவினிங், கம் இன்,''

''நீங்கள் போகவில்லையா தேஜ்பூருக்கு?''- ஸ்குவாட்ரனில் ஒரு பைலட்டான ப்ளைட் லெப்டினன்ட் மித்ரானைக் கேட்டாள் ரஜினி.

''இல்லை. கடைசி நிமிஷத்தில் என் கால் சுளுக்கிக் கொண்டு விட்டது. ஸோ, ஐ வாஸ் மெடிகலி அன்ஃபிட். அது சரி, உங்களுக்குத் தனியாக இங்கே மிகவும் போரடிக்குமே, ஹெலிகாப்டர் யூனிட் விருந்து இன்று இருக்கிறது. மெஸ்ஸில். நீங்களும் வருவதானால் அழைத்துப் போகலாம் என்று வந்தேன்.''

''நான் வரவில்லை. எனக்கு அங்கு யாரையும் தெரியாது.''

''என்னைக்கூடவா தெரியாது?'' புன்முறுவலுடனும், கூர்மையான பார்வையுடனும் அவன் கேட்டாலும் அவளை வற்புறுத்தாமல் விட்டுவிட்டான்.

ரஜினியின் இதயம் வேகமாகத் துடித்தது. என்ன சொல்கிறான் இவன்!

அவன் போய்விட்டான். ரஜினியின் மனம் ஒரு நிலையில் இல்லை. மனத்தின் அடித்தளத்தில் அமுக்கி வைத்திருந்தஉணர்வுகள் பொங்கி வெளிவந்தன. மித்ரானை முதன் முதலாகச் சந்தித்த தினம் அவள் நினைவில் எழுந்தது.

• • •

''ரஜு! என்னோடு மித்ரா என்று அம்பாலாவில் இருந்தான். என் மிக நெருக்கமான நண்பன் அவன்தான் என்று சொல்லியிருக்கிறேனல்லவா? அவனுக்கு நம் ஸ்குவாட்ரனுக்கே போஸ்டிங் ஆகியிருக்கிறது. இன்று மாலை ஏ. டி. மெயிலில் வருகிறான். ஸ்டேஷனுக்குப் போய்ப் பார்க்கலாமா?''

''ஓ! நீங்கள் சொல்லியிருப்பதிலிருந்து எனக்குக் கூட அவரை ரொம்ப நாளாகப் பார்க்க வேண்டும் என்று ஆசை. ராத்திரி சாப்பிட வேண்டுமானாலும் கூப்பிடுங்கள். ஆனால் பன்னிரண்டு மணிக்கு மேல் ஒரு நிமிடம் கூடப் ஆகக் கூடாது.''

''ஓ, அப்படியா, சரி.'' என்றான் அவன் சிரித்துக் கொண்டே.

முதலில் இருந்த உற்சாகம், கலகலப்பு, மன அமைதி எல்லாமே போய்விட்டன ரஜ்னிக்கு அந்த மித்ரானைப் பார்த்ததும்.

ஆறடி இரண்டங்குல உயரம். அதற்கேற்ற உடலமைப்பு. பழுப்பு நிறமான கூர்மையான பார்வையுடைய விழிகள். ஒட்டிய கன்னங்கள், அனாவசியமான சதை என்பது எந்தப் பகுதியிலும் இல்லாத டிரிம்மான உருவம். மோவாயின் நடுவே ஒரு பிளவு.

ரஜினிக்கு அவனுடன் சரியாகப் பேசக்கூட முடியவில்லை. ஆண்கள் என்றால் தானே மறைவில் ஒளிந்து கொள்ளும் அந்தக் காலத்துப் பெண்ணில்லை அவள். இருந்தாலும் இவனிடம் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. மன உறுதியுடைய அவளை தடுமாறுகிறாள் என்றால்....

அன்று இரவு பன்னிரண்டு மணியல்ல, இரண்டு மணி வரை நீடித்தது. மிலிடரி வட்டங்களில் பழைய நண்பர்கள் கூடினால் என்ன நடக்கும்? ஒரு டிரிங்க்... 2, 3, 4, 5.... இரண்டு பேருமே கொஞ்சம் ஹையாக இருந்தார்கள். சட்டென்று எழுந்த ரஜினி ''சாப்பாடு தயார். எனக்குக் கூடப் பசிக்கிறது.'' என்றாள் இருவரையும் பார்த்து.

''டார்லிங், நீ சாப்பிட்டு விடேன். எங்களுக்கு இன்னும் பத்து நிமிஷம் ஆகும்,''

''பிரஸாத், கமான், சாப்பிடலாம் நானும் ரூமுக்குப் போய் யூனிபார்ம் எல்லாம் ரெடி பண்ண வேண்டும்.'' எழுந்தான் மித்ரா.

''ஓ.கே.''

''ஆனால், 'அப்பாடா' என்று நிம்மதியாகி விடாதீர்கள் மேடம். இனிமேல் நான் அடிக்கடி உங்களைத்தொந்தரவு செய்வேன். எனக்கு உங்கள் ஊர்ச் சாப்பாடு ரொம்பவும் பிடிக்கும்'' என்றான் மித்ரா ரஜினியிடம்.

''யூ ஆர் வெல் கம் எனி டைம்.''

போதை காரணமாக உடனே தூங்கிவிட்டான் பிரசாத். ரஜினிக்குத் தூக்கமே வரவில்லை. மனத்தில் ஏற்பட்ட சிறு சலனம் தான் அவளை என்னமாய் ஆட்டி வைக்கிறது! அன்று ரஜினியின் மனத்தில் ஒரே சிந்தனைதான். மித்ரா....மித்ரா... அவன் பேச்சும், ஆங்கில உச்சரிப்பும்....

ரஜினியின் மனத்தில் ஏற்பட்ட மெல்லிய தென்றல் புயலாக மாறி அவளை அலைக்கழித்தது. ஓர் இயந்திரம் போல் அவள் தன் தினசரி வேலைகளைச் செய்து வந்தாள். தனக்கும் பிரசாத்துக்கும் இடையே ஒரு மெல்லிய திரை தோன்றுவதைக் கூட அவள் உணரவில்லை.

''ரஜு! உனக்கு உடம்பு சரியில்லையா, என்ன?'' பிரசாத்தின் கண்களிலிருந்த அன்பை எதிர் நோக்கவும் சக்தியற்றவளாய்த் தலை குனிந்தாள்.

''இல்லையே, எனக்கு ஒன்றும் இல்லையே.''

''பின் ஏன் தினமும் ஒதுங்கிப் போகிறாய்?''

சாட்டையடி பட்டாற் போல் நிமிர்ந்தாள் ரஜினி.

''ஸாரி டியர்'' அவள் கன்னத்தில் நீர் திரண்டது.

''அட அசடு! எதற்காக அழுகிறாய்? தவறு என்மீதுதான். ஜாலியாய் இருக்க வேண்டுமென்று குழந்தை இப்போதைக்கு வேண்டாம் என்றிருக்கக் கூடாது. அது இருந்தால் உனக்குப் பொழுது போகுமல்லவா? இந்தச் சனியன் பிடித்த காட்டில் நீ வேலைக்குப் போகக்கூட வாய்ப்பில்லை.''

இவ்வளவு அண்டர்ஸ்டாண்டிங்காக இருக்கும் கணவனுக்கா அவள் துரோகம் செய்கிறாள்?

''ரஜு! இந்தச் சனிக் கிழமை மித்ரா நம்மை டின்னருக்குக் கூப்பிட்டிருக்கிறான்.''

''எங்கே மெஸ்ஸிலா?''

''இல்லை. அர்ஜுன்பாரி டீ எஸ்டேட்டில் அதன் மானேஜர் அவனுக்கு உறவாம். அவர்கள் வீட்டில்! ரஜு, அந்த மாக்ஸியைப் போட்டுக் கொள்ளேன்.'' ரஜினி தயங்கினாள்.

பிரசாதின் முகத்தில் ஏமாற்றம் தோன்றுவதைக் கண்டவள், ''சரி, போட்டுக் கொள்கிறேன்'' என்றாள்.

சிவப்பு நிற சிங்கிள் பீஸ் மாக்ஸி; சிவப்பு நிறத்தோடு சிவப்பு நெக்லஸ், பாப் செய்யப்பட்ட குட்டையான தலை மயிரில் ஒரு சிவப்பு ரோஜாவை அவள் செருகியபோது, ''ரஜு! யு லுக் மார்வலஸ். உன்னைச் சாப்பிட்டு விடலாம் போலிருக்கிறது'' என்றான்.

பார்ட்டி முடிந்து திரும்பும்போது, ''ஏன் ரஜு, ஒரு மாதிரியாக இருக்கிறாய்?'' என்றான்.

''ஒன்றுமில்லையே.''

மித்ராவைச் சந்திக்கும்போதெல்லாம் அவள் அப்படித்தான் ஆகிவிடுவாள் என்று அவனிடம் சொல்லவா முடியும்? அதிலும் இன்று.:.. மித்ரா இன்று முகம் கொடுத்துப் பார்க்கவில்லையே ஏன்?

கடுசெக்ஸ்ணெயில் செய்யப்பட்ட பெங்காலி சாப்பாடு அவளுக்கு ஒத்துக்கொள்ளவில்லை போலும். சாப்பிட்டது எல்லாம் வெளியே வந்து விட்டது. களைப்பாக இருந்த ரஜினியைப் படுக்க வைத்துத் தண்ணீர் கொடுத்தவன், அவள் எழுந்திருப்பதைப் பார்த்து, ''ஏன், பேசாமல் படு'' என்றான்.

''கீழே துடைக்க வேண்டும்.''

''இவ்வளவுதானே, நான் துடைக்கிறேன்.''

''நீங்கள் ஏன் இதெல்லாம்....''

''ஏன், செய்தாலென்ன? இந்த சென்டிமெண்ட் எல்லாம் எனக்கு வேண்டாம்... எனக்கு உடம்பு சரியில்லையென்றால் நீ செய்ய மாட்டாய்? அது போல் உனக்கு உடம்பு சரியில்லாதபோது நான் செய்கிறேன். அவ்வளவுதானே?''

ரஜினியின் கண்களில் நீர் தளும்பியது.

அன்று புதன் கிழமை. மாலை ஐந்து மணியாகியும் இன்னும் பிரசாத் வீட்டுக்கே வரவில்லை.

ஸ்கூட்டர் சப்தம் கேட்டது. பிரசாத் தான். ''நீ சாப்பிட்டாயா?'' அவன் வந்ததும் கேட்ட முதல் கேள்வி அதுதான்.

''இல்லை.''

''ஏன்? நான் எவ்வளவு தடவை...'' சொல்ல வந்தவன் பாதியிலேயே விட்டுவிட்டான் பொறுமையின்றி.

சாப்பாட்டின் நடுவே அவள் கேட்டாள்: ''ஏன் லேட் இன்றைக்கு?''

''மித்ராவுக்கு ஒரு எமர்ஜென்ஸி ஏற்பட்டது.''

அதிர்ச்சியுடன் நிமிர்ந்தாள் அவள்.

''ஏன்ஜின் சக்கரங்கள் கீழே இறங்கவில்லை.''

''பிறகு?''

''பிறகென்ன, தானே சரியாகிவிட்டது. சக்கரங்கள் இறங்கி அவன் 'ஸேஃபாக வந்து லாண்ட் ஆகிவிட்டான்.''

''அது எப்படி திடீரென்று ஸ்டக் ஆகும்?''

''எங்க மானேஜர், எங்க ஆபீஸ் ஊழியர்களைத் ''தட்டி கொடுத்துத்தான்'' வேலை வாங்குவார்!''

''அப்படியா?''

''ஆமாம்! என்ன வழக்கமா நாங்க எல்லோரும் ''தூங்கிகிட்டு''த் தானே இருப்போம்.''

-வெ. சீதாராமன்



தீபாவளியின் புனிதம் :
தீபாவளியின் வண்ணங்கள்
தீபாவளியின் குதூகலம் - அனைத்தையும்
பிரதி பலிக்கும் கலைப் பொக்கிஷம்

ஏராளமான கதை கட்டுரைகள், கவிதைகள்,
புகைப்படங்கள், வண்ணச்சித்திரங்கள்
நகைச்சுவை அம்சங்கள்.

உங்கள் தேவைக்கு
உடனே உள்ளூர் ஏஜெண்டிடம்
பதிவு செய்து கொள்ளுங்கள். அல்லது

மானேஜர், கல்கி, காரியாலயம் சென்னை-32
என்ற விலாசத்துக்கு எழுதுங்கள்.

தனிப்பிரதி விலை ரூ. 20/-
தபால் செலவு ரூ. 3/-



''அதுதான் நாங்கள் இத்தனை நேரம் மண்டையை உடைத்துக் கொண்டு கண்டு பிடிக்க முயற்சி செய்து கொண்டிருந்தோம்.''

''கண்டு பிடித்தீர்களா இல்லையா?''

''நான் கண்டு பிடித்திருக்கிறேன். பர்ஸனல் உணர்ச்சிகளைத் தொழிலில் நுழைய விடாத ஒரே ஆள் இந்த மித்ரா என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அவனும் அப்படி இல்லை போலிருக்கிறது.''

ரஜினியின் சந்தேகம் உண்மையாகி விட்டது. ஏஸ் பைலட் என்று பிரசாதே புகழும் மித்ரா லாண்டிங் ஹைட்டில் ஒரு சில்லியான தவறு ஏன் செய்ய வேண்டும்? ''பர்ஸனல் உணர்ச்சிகள்....'' அப்படியென்றால்? எதையோ நினைத்ததில் அவனது கான்ஸன்ட்ரேஷன் போய்விட்டது. காரணம் அவளாக இருக்குமோ? இல்லையென்றால் அன்று வேண்டுமென்றே மித்ரா அவனை அலட்சியம் செய்திருப்பானா? ரஜினிக்கு அழுகை வரும்போலிருந்தது.

அவன் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தாததன் காரணமாக ஒருவன் உயிர் அல்லவா போக இருந்தது. அதுமட்டுமல்ல, பிரசாத்தின் வாழ்க்கையையும் அல்லவா அவள் கொஞ்சம் கொஞ்சமாகப் பாழாக்கி வருகிறாள்.

அந்தச் சம்பவத்துக்குப் பின் மித்ராவைக் காணவே காணோம். ரஜினியின் மனம் ஏனோ அவனையும் பிரசாத்தையும் ஒப்பிடத் துவங்கியது.

நினைக்க நினைக்க அவளுக்குத் தன் மீதே கோபம் வந்தது. எவ்வளவு அன்பான, அறிவுள்ள, அசையாத மலை போன்ற மன உறுதி கொண்ட ''ஹெட் ரூல்ஸ் ஹார்ட்'' என்பதை வாழ்ந்து காட்டும் ஒருவனைக் கணவனாக அடைந்ததற்குப் பெருமைப்பட்டு அவனை மேலும் உயர்த்துவதற்கு உதவாமல் பாதாளத்தில் வீழ்த்திவிட அல்லவா இருந்தாள்? இவ்வளவு மோசமான நம்பிக்கைத் துரோகத்தை யாரால் சகிக்க முடியும்? உண்மை தெரிய வந்தால் பிரசாத் நிச்சயம் மனமுடைந்து போவான்.

''பாஸிங் க்ளவுட்ஸ்'' போல மித்ராவின் வருகையும் ஒரு ''பாஸிங் தாட்''. கடந்து செல்லும் நினைவாக அவள் வாழ்வில் கருதுவாள். அதற்கு இனி எவ்விதமான முக்கியத்துவத்தையும் அளிக்க மாட்டாள்.

ரஜினியின் மனம் நெடு நாட்களுக்குப் பின் லேசானது.

''ரஜினி! ஒரு நியூஸ். மித்ரா ஈஸ் போஸ்டட் அவுட்!''

''ஓஹோ, எங்கே?''

''தாம்பரத்துக்கு.''

''அவனுக்கு ஃபேர்வெல் டின்னர் கொடுக்க வேண்டும் அல்லவா?''

''ஆமாம். சனிக்கிழமை கூப்பிடுவோமே.''

''அது சரி, ரஜி! நீ மாத்திரை போட்டுக்கொள்ளாமலே படுத்து விட்டாயே''

''நான் இனி மாத்திரை போட்டுக் கொள்ளப் போவதில்லை.''

ஒரு நிமிடம் ஆயிற்று பிரசாத்துக்குப் புரிந்து கொள்ள. ''ஓ! ஐ ஸீ! அப்படியா விஷயம். கம் ஆன், தென் லெட்ஸ்....''

யார் வீட்டிலோ ''லவ் இன் ஸி-மைனர்'' ரெகார்டு ஒலித்துக் கொண்டிருந்தது.

ரஜினி அன்று இரவு நன்றாகத் தூங்கினாள்.

அத்தியாயம் 65

வேடன் விடுதி

தேவ்கட் துறைமுகத்தில் புக மாலேயி லேயே ஏற்பாடுகள் நடந்தும் கூட, இரு பக்கங்களிலும் உள்ள மலைகளைத் தொடாமல் 'கடல் ராணி' உட்புகுந்து நங்கூரம் பாய்ச் சியபோது மாலை மறைந்துவிட்டதால், தென் புறத்தில் உள்ள கோட்டையில் விளக் குகள் எரியலாயின. அதே சமயத்தில் 'கடல் ராணி'யின் விளக்குகளும் காலண்ட் ராவின் விளக்குகளும் கூட எரியத் தொடங்கி விட்டதால் மலைக் கோட்டை யொன்றும் நீர்க் கோட்டைகள் இரண்டும் சற்று தூரம் விட்டு நிற்பது போன்ற பிரமையை ஆரம்ப இரவின் சூழ்நிலை சிருஷ்டித்தது. நிலவு புறப்படுவதற்கு நாழிகைகள் நான்கிருந்த காரணத்தால் அந்தப் பிரமையிலும் கூட ஒரு பயங்கரம் கலந்துதானிருந்தது. 'கடல் ராணி' நங்கூரம் பாய்ச்சிய, பின்பு அரை நாழிகைக் கெல்லாம் கோட்டையிலிருந்து மலைச் சரிவில் இறங்கி, தரையில் 'கட்டப் பட்டிருந்த ஒரு படகில் ஏறிய ஒருவன் படகை 'கடல் ராணி'யை நோக்கிச் செலுத்தி வந்தான். அவன் கப்பலின் தளத் துக்கு வர நூலேணியைத் தொங்க விடுமாறு அனந்த் உத்தரவிடவே நூலேணி தொங்க விடப்பட்டது. அதில் ஏறி வந்த மனிதன் மாலுமி உடையில் இருந்தான். அதிக உயரமோ பருமனோ இல்லாத உடலுடன் கூடிய அவன் தோரணை மட்டும் பிரமாதமாயிருந்தது. கப்பலின் தளத்தில் கால் வைத்ததும் அங்கிருந்தவர்களை ஒரு முறை உற்று நோக்கிவிட்டு, ''இந்தக் கப்பலின் தலைவர் யார்?'' என்று வினவினான்.

அவன் கேள்வி முடிவதற்கு முன்பே அவன் இருந்த இடத்துக்கு வந்துவிட்ட லிவாஸியர் தலை வணங்கி ''காப்தன் லிவா ஸியர் அத் யுவர் சர் விஸ்'' என்று மரி யாதை செலுத் தினான்.

''நான் தேவ்கட் கோட்டையின் தலைவன். ஆனால் இந்தக் கப்பலுக்கு ஒரு பிரெஞ்சுக் காப்டனை நான் எதிர்பார்க்கவில்லை'' என் றான் கோட்டைத் தலைவன், லிவாஸியரின் ஆங்கில உச்சரிப்பிலிருந்து அவன் யாரென்று அறிந்து கொண்டதால்.

லிவாஸியர் மிக அழகாகப் புன்முறுவல் செய்து ''நான் ஒரு தற்காலிகக் காப்டன், கப்பலின் சொந்தக்காரர் அதோ இருக்கிறார்'' என்று கூறி, ''ராணி! வாருங்கள் இப்படி'' என்று சொல்லி ராணியைக் கோட்டைத் தலைவனுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

அருகே வந்த ராணியைக் கண்ட கோட் டைத் தலைவன் சிரம் தாழ்த்தி நன்றாக வணங் கினான். ''தங்களைப் பற்றிக் கேள்விப்பட் டிருக்கிறேன். கோட்டையில் தங்க வசதி யில்லை. தவிர அடிக்கடி பழுது பார்க்காத தால் சில பகுதிகள் விழுந்தும் கிடக்கின்றன. இருப்பினும் தாங்களும் அதோ அந்தப் பெண்மணியும் தங்க ஏற்பாடு செய்கிறேன்' என்று கூறினான். பிறகு கேட்டான்: ''ராணி! அனந்த் என்பவர் இருக்கிறாரா இந்தக் கப்பலில்?'' என்று.

சற்று எட்ட நின்றிருந்த அனந்த் நிதான மாக நடந்து வந்து கோட்டைத் தலைவனை நோக்கி, ''நான்தான் அனந்த்'' என்று தானே அறிமுகம் செய்து கொண்டான்.

அந்த அறிமுகத்துக்குப் பிறகு கோட்டைத் தலைவன் மற்றவர்களை அறவே புறக்கணித்து விட்டு அனந்தைக் கப்பலின் இன்னொரு மூலைக்கு அழைத்துச் சென்று ஏதோ வேக மாகப் பேசினான் கைகளைப் பல திசை களில் ஆட்டி. அனந்த் எதற்கும் பதில் சொல்லவில்லை. முடிவில் ''எதற்கும் கோட்டைக்கு வருகிறேன்'' என்று மட்டும் சொன்னான்.



கடல் ராணி

சாண்டில்யன்

அதை ஆமோதித்த கோட்டைத் தலைவன் விவாளியரிடமும், கடல் ராணி, சாரு இவர்களிடமும் விடை பெற்றுக் கொண்டு திரும்பிச் சென்றுவிட்டான் கோட்டைக்கு. அவன் நூலேணியில் இறங்கிப் படகில் ஏறியதுமே அனந்த் விவாளியரை நோக்கி, ''விவாளியர் இந்தப் பெண்கள் இருவரையும் கோட்டையில் விட்டு வருகிறேன். ஒருவேளை டெய்லர் பீரங்கிகளை இந்தக் கப்பலின் மீது திருப்பினால் எனக்கு விளக்கின் மூலம் சைகை செய்'' என்று கூறிவிட்டு வில்வரை நோக்கி ''வில்வர் மை பிரண்ட்! வீ ஹாவ் டு பார்ட் பார் எ ப்யூ அவர்ஸ் (வில்வர்! நண்பனே! நாம் சில மணி நேரம் பிரிய வேண்டிய அவசியமிருக்கிறது)'' என்று சொல்லி வில்வரை அன்புடன் தட்டிக் கொடுத்தான்.

வில்வர் எந்த விதப் பதிலும் பேசாமல் மௌனமாக நின்றான். தனக்கும் புரியாத ஏதேதோ விஷயங்கள் நடப்பதை உணர்ந்து கொண்டான். துறைமுகம் காஸண்ட்ராவால் அடைக்கப்பட்டு அதன் பலமான பீரங்கிகள் கடல்ராணி மீது திருப்பப்பட்டிருக்கும் இந்தச் சமயத்தில் கடல்ராணியின் கதி அதோகதியாயிருக்க, எதற்காக அனந்த் இரு பெண்களையும் அழைத்துக் கொண்டு தரைக்குச் செல்கிறான் என்று நினைத்துப் பார்த்தும் விடை விளங்கவில்லை அவனுக்கு. ஆகவே அனந்த் சொன்னதற்குத் தலையை மட்டும் அசைத்தான். தோள் மீதிருந்த அசுரக் கிளியைப் பார்த்து ''காப்டன் பிளிண்ட் உனக்கு ஏதாவது புரிகிறதா?'' என்று வினவினான். கிளி அவன் கேள்வியைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். தலையை மேற்கு நோக்கித் திரும்பி இருமுறை ஆட்டியது. கிளியின் ஒவ்வொரு சைகையையும் அறிந்து கொள்ளக் கூடிய வில்வருக்கு அன்று மட்டும் ஏதும் புரியவில்லை. எதையும் பொறுத்திருந்து பார்க்கத் தீர்மானித்தான்.

அனந்த் கோட்டைக்குப் போவதில் பரபரப்பைக் காட்டினான். இரு பெண்களையும் வெள்ளைக்காரப் பாணியில் மாலுமி உடைகளை அணியச் செய்தான். ''உங்கள் கட்டிலுக்கு அடியில் இருக்கும் பெட்டியில் உங்களுக்குச் சரியான உடைகள் இருக்கும்'' என்று கூறி விட்டு விவாளியருடன் பேச அவரை அவரது அறைக்கு அழைத்துச் சென்றான். கதவை மூடிவிட்டு அவருடன் பத்து நிமிடங்கள் பேசிய பிறகு திரும்பிய அனந்த் பெண்கள் இருவரும் மாலுமி உடையில் வரவே படகொன்றை அவிழ்த்து நீரில் விட உத்தரவிட்டான். இரு பெண்களுடன் நூலேணியில் இறங்கிப் படகைத் தானே செலுத்திக் கொண்டு தென் கரையை அடைந்தான். அங்கு அவர்களுக்காகவே காத்திருந்த கோட்டைத்தலைவன் மாலுமி உடையிலிருந்த இரு பெண்களையும் கண்டதும் பிரமிப்புக்குள்ளானான். இருப்பினும் ஏதும் கேட்காமல் மூவரையும் கோட்டைக்கு அழைத்துச் சென்று கோட்டையைச் சுற்றிக் காட்டினான்.

அவன் முன்பே சொன்னபடி கோட்டை பாழடைந்த கோட்டையாகவே காட்சியளித்தது. கோட்டையின் வடபுறச் சுவர் அடியோடு இடிந்து கிடந்தது. கிழக்குச் சுவரும் எந்த நிமிஷத்திலும வடக்குச் சுவரைப் பின்பற்றத் தயாராயிருந்தது. இத்தனையிலும் அந்தப் பழைய காலக் கோட்டை கம்பீரமாகவே காட்சி யளித்தது. அதன் மேற்குச் சுவர் மட்டும் மஞ்சள் மந்தாரை மரங்களால் மறைக்கப்பட்டிருந்ததால் அது வெளிக்குச் சரியாகத் தெரியவில்லை. ஆனால் அதன் மீது ஏற்றப்பட்டிருந்த பீரங்கிகள் துறைமுக வாயிலை நோக்கிக் கொண்டிருந்ததைக் கவனித்த அனந்த் திருப்திக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான்.

இப்படிக் கோட்டையைச் சுற்றிப் பார்த்த அனந்த் கோட்டைக்குள் வந்த பிறகு தனக்கும் இரு பெண்களுக்கும் தயார் செய்யப்பட்டிருந்த விசாலமான அறையைக் கவனித்து, ''வேறு அறைகள் கிடையாதா?'' என்று கோட்டைத் தலைவனை விசாரித்தான்.

''இங்கில்லை'' என்று சொல்லிச் சிறிது குழப்பத்தை முகத்தில் காட்டினான், கோட்டைத் தலைவன்.

''வேறு எங்கு இருக்கிறது?'' என்று வினவினான் அனந்த்.

''இந்தக் கோட்டைக்குப் பின்புறமிருக்கும் காட்டில் கூப்பிடு தூரத்தில் சென்றால் அங்கு வேட்டைக்காரன் வீடு இருக்கிறது. அதில் விருந்தினருக்கு வேண்டிய வசதி இருக்கிறது'' என்றான் கோட்டைத் தலைவன்.

அனந்த் இரு பெண்களையும் நோக்கினான். அவன் முகத்தில் எழுந்த கேள்விக் குறியைக் கண்ட ராணி ''வேண்டாம் இங்கேயே தங்குகிறோம்'' என்றாள்.

''இங்கு என்ன குறைவு இருக்கிறது?'' என்று சாருவும் ஒத்துப் பாடினாள்.

''நாம் மூவரும் ஒரே அறையில் தங்குவது எப்படி?'' என்று கேட்டான் அனந்த்.

''ஏன் தங்க முடியாது?'' என்று கேட்டாள் ராணி.

இதற்கு அனந்த் என்ன பதில் சொல்வான்



''டாலி''

● சிறந்த மாடலிங் கலைஞர் குமாரி டாலி கூறுகிறார்:

''மாடலாகத் திகழ வேண்டுமென்றால், உடல் அமைப்பும், போட்டோவுக்கு ஏற்ற முகம் மட்டும் போதாது. பேசும் கண்கள் தேவை. விளம்பரத்துக்கு ஏற்ப உணர்ச்சிகளையும், பாவங்களையும் மாற்றத் தெரிய வேண்டும். இந்தத் தகுதிகள் அடிப்படையில் தான் எனக்கு கோ-ஆப்டெக்ஸ், ப்ரீத் மிக்ஸி விளம்பரங்கள் கிடைத்தன.

''மாடலிங் தொழில் பம்பாயில் சக்கைப் போடு போடுகிறது. தமிழ்நாட்டில் பெற்றோர்கள் தங்கள் மக்களை இதில் ஈடுபடுத்தத் தயங்குகிறார்கள். சினிமாத் தொழிலை விட மாடலிங் ஒன்றும் ஆபத்தான தொழில் அல்ல.

''என்னை சினிமாவில் தெலுங்குப் பட இயக்குநர் தாசரி நாராயண ராவ்'' அறிமுகப் படுத்த விரும்பியபோது, என் பெற்றோர் அனுமதிக்கவில்லை. இறுதியில் வெற்றி பெற்றது தாசரிதான். எனக்கும் ஊட்டிக்கும் போன ஜன்மத் தொடர்பு ஏதோ இருக்கிறது. இல்லா விட்டால் தெலுங்கு, கன்னடம் உட்பட நான் நடிக்கும் பல படங்களில் ஊட்டி குளிரில் அருவியில் குளிக்கச் சொல்வார்களா? ஸ்....அப்பாடா, என்ன குளிர், ஒருவருக்கு வேறு தண்டனை வேண்டவே வேண்டாம்'' என்று சொல்லிச் சிரிக்கிறார் டாலி. சினிமாவுக்காக இவரை ''ஸ்வப்னா''வாக மாற்றியவர் தாசரி.'' **பேட்டி: சிக்கி**

மேலட்டை வண்ணப்படம் எடுத்தவர்: **மேகலா**

என்பதைக் கேட்க ஆவலை முகத்தில் காட்டிய கோட்டைத் தலைவனுக்கு அதிர்ச்சி தரும் படியாகப் பதில் சொன்னான் அனந்த். ''தலைவரே! இவர்களுடன் நான் தனித்துப் படுப்பது முதல் தடவையில்லை. ஆகையால் இந்த ஒரு அறை போதும் எங்களுக்கு'' என்று.

கோட்டைத் தலைவனுக்கு ஏற்பட்டதை அதிர்ச்சி என்று சொன்னால் முழு நிலைமை அதில் தெரியாது. அதிர்ச்சியையும் மீறிய உணர்ச்சிகள் அவன் உடலை ஊடுருவின. மெள்ளச் சமாளித்துக் கொண்டு ''தங்களிஷ்டம்'' என்றான் கோட்டைத் தலைவன்.

''இஷ்டத்துக்கென்ன? இவருக்குக் கசக்கிறதா?'' என்று கேட்டாள் ராணி கோட்டைத் தலைவனை நோக்கி,

''இனிக்கிறதோ கசக்கிறதோ எங்களை விட்டால் இவருக்கு வேறு கதி கிடையாது'' என்றாள் சாரு.

இந்த வெட்கம்கெட்ட பேச்சைக் கேட்ட கோட்டைத் தலைவன் ''இரண்டு பெண்களும் பிசாசுகள்'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். ''இந்த அறை உங்களுக்குச் சற்று நெருக்கமாய் இருக்கலாம்'' என்று ஏதோ சொல்ல முற்பட்டவனை ''அதனால் பாதகமில்லை'' என்று தடுத்துவிட்ட அனந்த் ''தலைவரே! மேற்குப்புறச்சுவர் மீது இருக்கும் பீரங்கிகள் இயங்கும் வகையில் இருக்கின்றனவா?'' என்று விசாரித்தான்.

''நல்ல நிலையில் வைத்திருக்கிறேன். தேவையான குண்டுகளும் கிடங்கில் இருக்கின்றன. இல்லையேல் கொள்ளைக்காரர்கள் நடமாடும் இந்த இடத்தில் கோட்டையை இத்தனை ஆண்டுகள் காக்க முடியுமா?'' என்றான், கோட்டைத் தலைவன் பதிலுக்கு. ''அது மட்டுமல்ல. இந்த மஞ்சள் மந்தாரை மரங்கள்....'' என்று கூறிச் சிறிது தயங்கினான்.

''பீரங்கிகளைக் கடலில் வரும் கப்பல்களிலிருந்து மறைக்கும். யோசனையில்லாமல் பெரியவர்கள் எதையும் செய்யவில்லை'' என்ற அனந்த் சரேலெனத் திரும்பி ''இந்தக் கோட்டையின் நிலைமையை அதிகாரிகளுக்கு எடுத்துச் சொன்னீர்களா?'' என்று வினவவும் செய்தான்.

''மேலிடம் கவனிக்கவில்லை.''

''பேஷ்வாவுக்கு எழுதுவதுதானே?''

''எழுதினேன். கூடிய சீக்கிரம் கவனிப்பதாகச் சொன்னார். இதற்காக தத்தாஜி ராவ் ஆங்கரே என்பவரை அனுப்புவதாகப் பதில் வந்தது. ஆனால் அடுத்த கடிதங்களுக்குப் பதிலும் இல்லை, தத்தாஜி ராவும் காணோம்'' என்றான் கோட்டைத் தலைவன். இதைச் சொல்லி வருத்தத்துடன் பெருமூச்சும் விட்டான் கோட்டைத்தலைவன்.

அதற்குப் பிறகு கோட்டைத் தலைவனுடன் உணவருந்திய அனந்த் இரண்டு பெண்களையும் அழைத்துக் கொண்டு தலைவன் காட்டிய அறைக்குள் சென்று படுத்தான். நாழிகைகள் ஓடிக் கொண்டிருந்தன. நிலவும் மெள்ளத் தலைகாட்டியது. இரு பெண்களும் கண்களை மூடி நன்றாக உறங்கியதைக் கவனித்த அனந்த் அவர்களின் நித்திரை உண்மைதானா என்று சோதித்துவிட்டு மெள்ள எழுந்திருந்து கதவை ஓசைப்படாமல் திறந்து கொண்டு வெளியே சென்றான். கோட்டையின் பின்புறக் காட்டை நோக்கி மெல்ல நடந்தான் சிறிது தூரம். பிறகு தூரத்தில் மினுக்கு மினுக்கு என்று எரிந்து கொண்டிருந்த விளக்கை நோக்கித் துரிதமாக நடக்கலானான். அந்த விளக்கை அடைந்ததும் அதுதான் வேட்டைக்காரன் விடுதியாயிருக்க வேண்டும் என்பதை வெளியிலிருந்த பலவித ஆயுதங்களாலும் விலங்குகளைப் பிடிக்கும் பொறிகளாலும் உணர்ந்து கொண்ட அனந்த் அந்த விடுதியின் கதவை நோக்கி நடந்து மெள்ள அதைத் தட்டினான்.

கதவு திறக்கப்பட்டது. ஆனால் திறந்தவன் வேட்டைக்காரனல்ல. (தொடரும்)



சிந்தை
மயக்கும்
சித்திரப்
பூம்பாவைகள்
பூம்புகார்
கைநுட்பக் கலைத்திறன் பொருட்கள் களஞ்சியம்
● பம்பாய் ● பெங்களூர் ● டெல்லி ● சென்னை
மற்றும் இதர தமிழக நகர்களில்
தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சி இணையகம்
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

டா:பே பிரதான விற்பனை உரிமை
பெருமையுடன் வழிவழியாக
வளர்ந்துவரும் ஸ்தாபனம்.

MF
Massey Ferguson

TAFE

டாஃபே நிறுவனமும் அதன் பிரதான விற்பனையாளர்களும் இந்திய வேளாண்மைக்கு கடப்பாடு உடையவர்கள். அவர்களின் பரஸ்பர நம்பிக்கையால்தான், இந்தியநாடு முழுவதிலும் சிறந்த முறையில் அனைத்திந்திய பிரதான விற்பனை அமைப்பின் கீழ் விற்பனை மற்றும் சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. அவர்களின் கூட்டு முயற்சியால்தான் பல விற்பனை மையங்கள் ஒரு தலைமுறையையும் தாண்டி இயங்கி வருகின்றன. இதில் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மையங்கள் கால் நூற்றாண்டுக்கான பணிக்கென விருதுகள் பெற்றுள்ளன.

தொழில் ரீதியாக போட்டிகள் நிறைந்த இன்றைய சூழலில் டாஃபே நிறுவனமும் அதன் பிரதான விற்பனையாளர்களும் வளர்ந்துவரும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகத்தொடர்ந்து போராடி வருகின்றார்கள்.

இந்திய வேளாண்மையை வளப்படுத்துவதைத் தத்துவமாகக் கொண்டுள்ளது—டா:பே.

MF
Massey Ferguson

TAFE

ட்ராக்டர்ஸ் அண்ட் :பார்ம் எக்விப்மெண்ட் லிமிடெட்
சென்னை

MAC/T/45-A/Tam

சிந்தனைச் சிதறல்கள்

"நான் திருமணத்துக்குப் பிறகு நடிக்கலாமா கூடாதா'' என்று என் மாமியாரைக் கேட்டபொழுது ''ஏன் நடிக்காமல் இருக்க வேண்டும்? எல்லாப் பெண்களும் ஆபீஸ் போவது போல் நீயும் நடிக்கப் போகப் போகிறாய். அவ்வளவுதானே? நீ நடி'' என்றார். எனக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

இன்றைக்கும் சமூகத்தில் சினிமாவில் தன் பெண் சேர்ந்தால் கெட்டுப் போய்விடுவாள் என்று நினைப்பவர்கள்தாம் அதிகம். இப்படி எண்ணாமல், உண்மையான நடிப்பாற்றல் உள்ளவர்கள், ஆர்வம் உடையவர்கள் உறுதியான மனநிலையுடன் விளங்கி, புகழுக்காகவும், கலைக்காகவும் நடிக்க முன்வர வேண்டும். நடிகை ரத்தி நல்ல வசதியான குடும்பத்தில் பிறந்தவர். அவருடைய தந்தையார் அக்னிஹோத்ரி ஒரு பெரிய உத்தியோகத்திலிருக்கிறார். இருந்தும் அவர் குடும்பமே ரத்தியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டு அவர் முன்னேற உதவுகிறது. இப்படித்தான் இருக்க வேண்டும். குடும்பத்தில் ஒருவர் சம்பாதிக்கிறார். அதில் நாம் எல்லாம் உட்கார்ந்து சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் பெண்களிடையே மாற வேண்டும். வேலைக்குப் போவதையோ தொழில் செய்வதையோ ஏன் அகௌரவமாகக் கருத வேண்டும்?

ஒருசிலர் நடிப்பதற்காக வந்துவிட்டு அதைப் பொழுது போக்காக எண்ணுகிறார்கள். சீக்கிரத்தில் புகழ் பெற ஆசைப்படுகிறார்கள். இப்படிச் செயல்படுவதால்தான் பலவித வேண்டாத பிரச்னைகள் எழுகின்றன. திரைப்படக் கல்லூரியில் படித்துவிட்டு வந்தவர்கள் கூட இதைச்சரியாக உணர்வதில்லை. எப்படிப் புகழ் பெறலாம் என்று நினைப்பதை விட்டு நாம் படித்ததைப் பயன்படுத்தி எப்படி வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறலாம் என்று யோசித்துச் செயல்பட்டால், உழைத்தால், கண்டிப்பாக உயரலாம். திரைப்படக் கல்லூரியில் கற்றுக் கொடுப்பவர்கள் எல்லோரும் மிகவும் சிரமப்பட்டு, சிரத்தையுடன் கற்றுக் கொடுக்கிறார்கள். உதாரணமாக கமலஹாசன் அண்ணன் மகள் சுஹாசினியைச் சொல்லலாம். நான் ஒரு படம் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது எங்களுடன் உட்கார்ந்திருந்த ஓர் ஆசிரியரிடம் வந்த சுஹாசினி பார்த்துக் கொண்டிருந்த படத்தைப் பற்றியே ஏதோ சில சந்தேகங்களைச் சிரத்தையுடன் கேட்டுத் தெரிந்து கொண்டு சென்றார். அப்படித்தான் பொறுப்புடன் இருக்க வேண்டும்.

தனது மகளோ, மகனோ, டாக்டராகவும், இன்ஜினியராகவும் வரவேண்டும்என்று விரும்புகிறார்களே, அதுபோல் திரைப்பட நடிகளாக டெக்னிஷியனாக விளங்க வேண்டும் என்று ஆசைப்படும் காலம் தோன்ற வேண்டும்.

புனா திரைப்படக் கல்லூரியில் டிப்ளமா கொடுக்கும் நாளில் ஒரு விழா வைத்து அதில் மாணவ மாணவிகளின் திறமையை எடுத்துக் காட்டும் விதமாக நிகழ்ச்சிகளை அமைக்கிறார்கள். நாமும் இங்கு அவ்விதம் செய்யலாம். தமிழகத்தின் தலைசிறந்த இயக்குநர்களையெல்லாம் இந்த விழாவுக்கு அழைக்கலாம். மாணவர்கள் நடித்த, எடுத்த படங்களைப் போட்டுக் காண்பிக்கலாம். பத்திரிகைகளில் சிறப்பான செய்திகள் வெளிவர ஏற்ற வகையில் பெரிய விழாவாக நடத்தலாம். கல்லூரிக்குத் தலைசிறந்த நடிகர்களைத் தருவித்து அவர்களது நடிப்புத் துறை அனுபவங்களைப் பற்றி மாணவர்களுக்கு அவ்வப்போது சொற்பொழிவாற்ற ஏற்பாடு செய்யலாம்.

திரைப்படக் கல்லூரியின் ஸ்ட்ரைக் தற்காலிகமானதுதான் என்று எனக்குத் தோன்றுகிறது. அது மறுபடியும் சிறப்பாகச் செயல்படும் நாளை ஆவலுடன் எதிர்நோக்குகிறேன்.''

பேட்டி : ''சலன்''

நடிப்புக்கலை மாணவர்கள்

— ஸ்ரீவித்யா





மனிதன் கல்யாணத்தன்றுதானே கடைசியாகச் சிரிக்கிறான்!

எல்லாருக்குமே அப்படித்தானா....?

நான் ஆனந்தமான தம்பதிகளை ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறைதான் சந்திக்கிறேன்.

ஜாதகம் பார்த்தார்கள். மிகவும் பொருத்தமாக இருந்தது. முகூர்த்தத் தேதியும் முறைப்படிதான்; குறையே இல்லை.

ஆனால் சந்தோஷத்தை இவை தாங்கி வரவில்லையே....!

அது வைதீகமானாலும் என்ன, சுயமரியாதையானால் என்ன? எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு ஏதோ ஒரு பொருத்தம் இருக்கிறது.

விவாகரத்து மலிந்துபோன லண்டனில் விக்டோரியா ராணி காலம் முதல் ஆனந்தமாக வாழும் தம்பதிகள் இன்னும் இருக்கிறார்களாம்!

பத்திரிகைச் செய்தி உண்மையாகவே இருக்கும்படி கடவுள் அருள் புரிவாராக!

சாக்ரடீஸ் காலம் முதல் என் தலைமுறை வரையிலே, தாம்பத்திய வாழ்வு பற்றிய சலிப்பே தலைதூக்கி நின்றது; நிற்கிறது.

என்ன அவலம் இது? என் அவநம்பிக்கை இது....?

''உற்சாகமான தம்பதிகளை நீங்கள் பார்க்கவே இல்லையா....?''

என்னை நீங்கள் கேட்கக் கூடும்.

மிக உற்சாகமான தம்பதிகளைப் பார்த்தேன். அவர்களில் கணவனைத் தனியாகச் சந்தித்தபோதுதான், அவர்களது நடிப்புத் திறமையைப் புரிந்து கொண்டேன்.

நூற்றுக்குப் பத்து இல்லாமலும் போகவில்லை.

அவை எந்தப் பொருத்தத்தில் வாய்த்தன?

இந்த இடத்தில் ஈஸ்வரனுக்கே மயக்கம் வரும்!

தாம்பத்திய வாழ்க்கை என்ன, மொத்த வாழ்க்கையிலேயே கடவுளது அருள் வேண்டும்.

காலையில் எழுந்திருக்கும்போது, 'என்ன சுகமான உலகம்' என்று தோன்ற வேண்டும். குளிக்கும்போது 'அடடா இதுவல்லவா வாழ்க்கை' என்ற எண்ணம் வரவேண்டும். சாப்பிடும்போது, 'அற்புதம், அபாரம்' என்று சொல்லத் தோன்ற வேண்டும்; படிக்க உட்கார்ந்தால் முந்நூறு பக்கங்களை மூச்சு விடாமல் ரசித்துப் படிக்க வேண்டும்; எழுத உட்கார்ந்தால், மெய் சிலிர்க்க எழுதிக் கொண்டே இருக்க வேண்டும்; மதியம் சாப்பிடும்போது, 'சாப்பிட்டுக் கொண்டே இருக்கலாமே' என்று தோன்ற வேண்டும்; பாயை விரித்து இரண்டு மணி நேரம் ஓய்வெடுத்தால் கலர்க் கனவுகள் வரவேண்டும்; மாலையில் மீண்டும் குளித்து வெளியே புறப்பட்டால், 'நமக்கு மேல் எவன் இருக்கிறான்' என்ற ஆணவம் பிறக்க வேண்டும் காலாற நடந்து முடித்து வீட்டுக்குத் திரும்பி மீண்டும் எழுத ஆரம்பித்தால் கடவுளே; வந்து கைகுலுக்க வேண்டும்; இரவுச் சுவையான சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டுப் படுக்கையில் படுத்தால் மனைவி வந்து மார்பில் சாய்ந்து கொள்ள வேண்டும்; இருவரும் சேர்ந்து நள்ளிரவு வரை புதிய புதிய தமிழ் வார்த்தைகளை உற்பத்தி செய்ய வேண்டும்.

—இப்படித்தான் நான் கற்பனை செய்தேன், முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை. காரணம் அப்போது எனக்குத் திருமணம் ஆகவில்லை.

கனவில் உள்ள சுகம் விழிப்பில் இல்லையே?

பிறகு ஏன் கடவுள் கண்களைப் படைத்தான்?

பிரமச்சாரிக்கு ஒரே ஒரு ஆதங்கம்தான் உண்டு. 'சிற்றின்பம் இல்லையே' என்பது அது.

கல்யாணம் ஆனவனுக்குப் பூமியில் எவ்வளவு கவலைகள் உண்டோ, அவ்வளவும் உண்டு.

தாங்கத் தெரியாத மனிதர்கள் சஞ்சலிக்கிறார்கள்; தாங்கக் கூடியவர்கள் சஞ்சரிக்கிறார்கள்.

தனியானாலும், துணையானாலும் ஒன்றுமட்டும் உண்மை; அந்தரத்தில் ஆன்மா ஊசலாடுகிறது.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran

மின்னலடிக்கும் ஸூப்பர் ரின் வெண்மை...



...இதர, டிட்டர்ஜென்ட் வில்லே, பார் எதனேயும் மிஞ்சும் வெண்மை.

பார்வைக்கு தப்பவே தப்பாத வெண்மை உங்கள் துணிகளுக்கு—வேறெ தவருத ஸூப்பர் ரின் சலவையின் வெண்மையே தனி.
இதர டிட்டர்ஜெண்ட் வில்லே, பார் எதனேயும் மிஞ்சுவது ஸூப்பர் ரின் வெண்மை.
காரணம், மிகுந்த வெளுக்கும் சக்தி அடங்கியது ஸூப்புர் ரின்.

நீங்களே கண்டுகொள்வீர்கள்

இதை வெளுத்தது வேறுசித டிட்டர்ஜெண்ட பார்





இதை வெளுத்தது ஸூப்பர் ரின்



அதிக வெளுப்பூட்டும் சக்தி படைத்தது ஸூப்பர் ரின்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லின்டாஸ்-RIN 35-2012 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

அம்மா உங்கள் கவனிப்பு கரை கடந்தது.

பார்லே

உலகிலோர் ஒப்பிலா மணி யென அவளுக்கு உணர்த்திடும் அன்புறவே.



எல்லையற்றதம்மா உங்கள்
இனிய கவனிப்பு...
அவளுக்காக நீங்கள்
தேர்ந்தெடுக்கும் பிஸ்கட்டே
அதன் சான்றாகட்டுமே.
திண்ணம் அதுவே. தீவிர
சுகாதார முறையில்
கைபடாத் தூய்மையோடு
தயாரித்த பிஸ்கட்—சுவை
மிக்கது. சாரமானது.
அவளுடைய தேவைக்கு
நிகரான ஊட்டச்சத்து
உள்ளது. எண்ணிப்
பாருங்கள். தரத்திற்காக 7
உலக விருதுகளை வென்ற
பிஸ்கட்—பார்லே க்ளுகோ—
இந்தியாவின் அதி நவீன
பிஸ்கட் தயாரிப்பாளர்களின்
படைப்பு.



இந்தியாவில் அதிக
விற்பனை கண்ட பிஸ்கட்

உலக விருதுகளை
வென்றது

பார்லே
க்ளுகோ

உங்கள் பாசத்தைப் பேசிடும் குழந்தை பராமரிப்பு பிஸ்கட்.

everest/80/PP/331-tm